அஷ்டலக்ஷ்மி

நீதி நூல்கள் ஏழு

நீதி நூல்கள் ஏழு

பதிப்பாளர்
செல்லத்துரை முரளிதரன்

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
41, கண்டி வீதி, கைதடி
320, செட்டியார் தெரு, கொழும்பு - 11 தொலைபேசி : 2334004

தலைப்பு : நீதிநூல்கள் ஏழு

மொழி : தமிழ்

பதிப்பு : முதலாம் பதிப்பு ஜூன் 2001

பதிப்பு : அஷ்டலசஷ்மி பதிப்பகம்
320, செட்டியார் தெரு,
கொழும்பு - 11.

விலை : [redacted]

கணனி அச்சுப்பதிப்பு : அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
கைதடி.

Title : *Nithi Noolgal Eelu*

Language : *Tamil*

Edition : *First Edition June 2001*

Published By : *Astraluxme Publication*
320, Sea Street,
Colombo – 11.

Price : [redacted]

Type Setting &
Printed By : *Astraluxme Publication*
Kaithady.

நீதி நூல்கள் ஏழு

- ஆத்திசூடி
- கொன்றைவேந்தன்
- உலக நீதி
- வெற்றி வேற்கை
- மூதுரை
- நல்வழி
- நன்னெறி

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார் சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று

ஔவையார்

உங்கள் அன்புக்குரியவர்களுக்கு பரிசளியுங்கள்.....

பெயர் : ____________________

முகவரி : ____________________

____

தொலைபேசி இல. : ____________________

நீதி நூல்கள் இயற்றிய ஆசிரியர்களைப் பற்றிய குறிப்பு

ஔவையார்

ஔவையார் பெயரை அறியாத சிறுவர்களோ, பெரியோர்களோ இருக்க மாட்டார்கள். அவர் அருளிய நூல்களில் எதையேனும் படித்திருப்பார்கள். ஔவையார் தமிழ் நாட்டிலே வாழ்ந்த பெண் புலவர். அவரைப் பற்றி பல கதைகள் வழங்குகின்றன.

சங்க இலக்கியங்களிலே ஔவையார் பாடிய பாடல்கள் பல உள்ளன. எனினும், அந்த ஔவையார் வேறு, கம்பர் காலத்து ஔவை யார் வேறு என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எப்படியானாலும் ஔவையார் என்ற பெயர் புகழ் பெற்றுவிட்டது.

அதியமான் என்னும் வள்ளல் பெருந்தகை அளித்த நெல்லிக்கனியை ஔவையார் உண்டு நீண்ட காலம் வாழ்ந்தார் எனச் சொல்லப்படுகிறது.

அவர் இயற்றிய ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி, ஞானக்குறள், அசதிக்கோவை ஆகிய நூல்கள் தமிழுக்குப் பெருமை அளிக்கக் கூடியன.

பெரிய நீதி நூல்களிலே காணப்படும் கருத்துக்களையெல்லாம் வடித்து எடுத்து எளிமை ததும்ப அளித்துள்ளார்.

ஔவையாரின் ஆத்திசூடியும், கொன்றை வேந்தனும் அகரத்தில் தொடங்கிச் சூத்திரம் போல் அமைந்துள்ளன.

ஆத்திசூடி, கொன்றை வேந்தன், மூதுரை, நல்வழி அந்நான்கும் மனப் பாடம் செய்வதற்கு மிகவும் ஏற்றவை.

தமிழ் உள்ளவரை ஔவையாருடைய நூல்கள் யாவும் நிலையான பெருமையும் சிறப்பும் தரும் என்பதில் ஐயமில்லை.

உலகநாதர்

"உலக நீதி" என்னும் நூலை இயற்றியவர் பெயர் உலகநாதன். உலக நீதியின் கடைசிச் செய்யுளின் மூலம் அவர் பெயர் உலக நாதன் எனத் தெரியவருகிறது. மற்றபடி அவருடைய வரலாறு, காலம் முதலியன விவரமாகத் தெரியவில்லை. எனினும் அவருடைய நூல் மிகவும் சிறப்புடையது என்பதில் ஐயமில்லை.

இவர் பேரும் பொருளும் புகழும் மிக்கவர் எனத் தெரிகிறது. இவர் ஒரு முருக பக்தர் என்பதை ஒவ்வொரு பாடலின் மூலமாக வலியுறுத்துகிறார். பாடல்கள் யாவும் பெரும்பாலும் பேச்சு நடையிலே அமையப் பெற்றுள்ளது.

எதைக் கடைப்பிடிக்க வேண்டும். எதைச் செய்யக்கூடாது என்னும் நீதிகளைத் தெளிவாகக் கூறுகிறார். வாழ்க்கைக்கு வழிகாட்டும் உயர்வான நூல்.

சிறுவர்களுக்குப் பெரும் பயன்தரக்கூடியது. ஔவையாரின் நூல்களைப் போல இதற்குச் சிறப்பும் பெருமையும் மிக உண்டு.

அதிவீர ராம பாண்டியன்

அதிவீர ராம பாண்டியன் கொற்கை நகரத்தில் வீற்றிருந்து ஆட்சி புரிந்த அரசர். அக்காலத்தில் கொற்கை நகரம் சிறு துறைமுகமாக விளங்கியது.

இவர் பாண்டியர் மரபினர். இவரை தென்காசிப் பாண்டியர் என்றும் கூறுவர். இவருடைய ஆட்சிக் காலம் 11-12ம் நூற்றாண்டு என்று தெரிகிறது. இவர் தமிழிலும் வட மொழியிலும் புலமை மிக்கவர். சிறந்த சிவபக்தர். குரு மூலமாக சிவதீட்சை பெற்றவர்.

நறுந்தொகை என்னும் வெற்றிவேற்கை, நைடதம், இலிங்கபுராணம், காசிக் காண்டம், வாயு சங்கிதை, திருக்கருவை அந்தாதி ஆகிய

நூல்களை இயற்றியுள்ளார். அவையாவும் இவருடைய புலமைக்கு எடுத்துக் காட்டாகும்.

நறுந்தொகை என்பது நல்ல தொகுப்பு என்று பொருள். நல்ல நல்ல நீதிகளை எல்லாம் தொகுத்து அளிக்கும் நூல். எளிய நடையில் அமைந்தது. ஒவ்வொரு பாடலும் சிறப்பான நீதியைப் போதிக்கின்றது.

தீர்க்கதரிசி போல் ஒவ்வொன்றையும் ஆணித்தரமாக வலியுறுத்திச் சொல்லுகிறார். அவர் கூறியுள்ள கருத்துரைகள் யாவும் வாழ்க்கையில் இன்றும் நம் கண்முன் நிதர்சனமாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இவருடைய சகோதரர் வரதுங்க ராம பாண்டியனும் புலமை மிக்கவர். பல நூல்களை இயற்றியுள்ளார். இவர் மனைவியாரும் சீலமிக்க சான்றோர் ஆவார்.

சிவப்பிரகாச சுவாமிகள்

காஞ்சீபுரம் வேளாளர் மரபினருக்குக் குருக்களாக இருந்த குமார சாமி தேசிகருக்கு மூத்த மகனாகப் பிறந்தவர் சிவப்பிரகாசர். இவருக்கு வேலையர், கருணையர் என்னும் இளைய சகோதரர்கள் இருவரும் ஞானாம்பிகை என்னும் தங்கையும் இருந்தனர்.

சிவப்பிரகாசர் இளவயதிலேயே தமிழ்ப் புலமையில் சிறந்து விளங்கியதோடு கவிதை இயற்றும் ஆற்றலும் பெற்றிருந்தார்.

இவர் திருமணம் புரிந்து கொள்ளாமல் துறவு நிலையை மேற்கொண்டிருந்தார்.

தாமிரவர்ணிக் கரையிலுள்ள சிந்து பூந்துறையில் வாழ்ந்த வெள்ளியம்பலத் தம்பிரானிடம் இலக்கணம் கற்றுக் கொண்டார். இவர் தம்பியர் இருவரும் தம்பிரானிடம் ஐந்திலக்கணம் கற்றுக் கொண்டனர்.

அண்ணாமலை ரெட்டியார், சிவப்பிரகாசருக்கு அளித்த முந்நூறு பவுணையும் ஆசிரியர் தம்பிரான் அவர்களுக்குக் காணிக்கையாக

வைத்து உபசரித்தார். அதை அவர் ஏற்காமல் "இது நமக்கு வேண்டியதில்லை. புலவர்களை இகழும் செருக்குடைய புலவர் ஒருவர் திருச்செந்தூரில் உள்ளார். அவரது செருக்கை அடக்கி அவர் நம்மை வந்து வணங்கச் செய்வதே நமக்குக் காணிக்கை ஆகும்" என்று கூறினார் தம்பிரான். சிவப்பிரகாசர் அதற்கு இணங்க உடனே திருச்செந்தூர் சென்று முருகப் பெருமானைத் தரிசித்து வலம் வருகையில் செருக்குடைய புலவர் எதிர்ப்பட்டார். அவரிடம் "நாம் இருவரும் நீரோட்ட யமகம் பாடுவோம். விரைவாகப் பாடி முடித்தவர்க்கு, இயலாதவர் அடிமையாக வேண்டும்" என்ற நிபந்தனையோடு பாடத் தொடங்கினார். சிவப்பிரகாசர், நீரோட்டயமக அந்தாதியாக முருகக் கடவுள்மீது முப்பது கட்டளைக்கலித் துறை பாடி முடித்துவிட்டார். அதுவரை ஒரு செய்யுள் கூட பாடாமல் விழித்துக் கொண்டிருந்த செருக்குடைய புலவர் "நான் அடிமையானேன்" எனக்கூறி, சிவப்பிரகாசரை வணங்கினார். அவரை அழைத்து வந்து தம் ஆசிரியர் தம்பிரானிடம் அடிமை ஆக்கினார். ஆசிரியர் மகிழ்ந்து சிவப்பிரகாசரைப் போற்றி வாழ்த்தினார்.

சிவப்பிரகாச சுவாமிகள், 'நல்லவர் நான் மணிமாலை" முதலான பல நூல்களை இயற்றிப் புகழ் பெற்றார்.

"நன்னெறி" வெண்பா நாற்பதும் அரிய நீதிகளை அழகான உவமைகளுடன் இயற்றியுள்ள சிவப்பிரகாச சுவாமிகளின் புலமை போற்றத்தக்கது.

இவருடைய காலம் பதினேழாம் நூற்றாண்டு இவர் தம்முடைய முப்பத்திரண்டாம் வயதில் சிவபதம் அடைந்தார்.

பொருளடக்கம்

1. **ஆத்திசூடி**

(மூலம், பதவுரை, கருத்துரை) - **01-15**

2. **கொன்றை வேந்தன்**

(மூலம், பதவுரை, கருத்துரை) - **16-31**

3. **உலக நீதி**

(மூலம், தெளிவுரை) - **32-38**

4. **வெற்றி வேற்கை**

(மூலம், தெளிவுரை) - **39-51**

5. **மூதுரை**

(மூலம், பதவுரை, கருத்துரை) - **52-67**

6. **நல்வழி**

(மூலம், பதவுரை, கருத்துரை) - **68-88**

7. **நன்னெறி**

(மூலம், பதவுரை, கருத்துரை) - **89-109**

கடவுள் வாழ்த்து

ஆத்திசூடி அமர்ந்த தேவனை
ஏத்தி ஏத்தி தொழுவோம் யாமே

ஆத்தி - ஆத்திப் பூமாலையை: சூடி - அணிந்திருக்கும் சிவபெருமானின்: அமர்ந்த - அன்புக்கு உரிய: தேவனை - விநாயகப் பெருமானை: ஏத்தி ஏத்தி - எப்பொழுதும் போற்றி வழிபாடு செய்து: தொழுவோம் யாமே - நாம் வணங்குவோம்.

ஆத்திப் பூமாலையை அணிந்துள்ள சிவபெருமானின் பிரியத்துக்குரிய விநாயகப் பெருமானை எப்பொழுதும் வழிபட்டு நாம் வணங்குவோம்.

நூல்

அறஞ்செய விரும்பு 1

அறம் - தர்மம்; செய - செய்வதற்கு; விரும்பு - ஆசைகொள்
நற்காரியங்களைச் செய்வதற்கு ஆசைப்பட வேண்டும்

ஆறுவது சினம் 2

ஆறுவது - தணிக்க வேண்டுவது; சினம் - கோபம்
கோபத்தைத் தணியச் செய்ய வேண்டும்.

இயல்வது கரவேல் 3

இயல்வது - இயன்றதை; கரவேல் - செய்யாமல் மறைத்து வைக்கக் கூடாது.
இயன்றதை ஒளிக்காமல் செய்ய வேண்டும்.

ஈவது விலக்கேல் 4

ஈவது - உதவி செய்வதை; விலக்கேல் - தடுக்காதே
பிறருக்கு உதவி செய்வதைத் தடுக்கக்கூடாது.

உடையது விளம்பேல் 5

உடையது - உன்னிடம் இருக்கும் நன்மை தீமைகளை; விளம்பேல் - வெளியில் சொல்லாதே

உன்னிடம் இருக்கும் நன்மை தீமைகளை பிறரிடம் கூறாதே.

ஊக்கமது கைவிடேல் 6

ஊக்கம் - துணிவை; கைவிடேல் - கைவிடக் கூடாது.

செயலில் ஈடுபடும் பொழுது தடங்கல் ஏற்படுமானால் அதைக் கண்டு தைரியத்தை கைவிடக் கூடாது.

எண் எழுத்து இகழேல் 7

எண் - கணக்குக்கு ஆதாரமான எண்ணையும்; எழுத்து - இலக்கியத்துக்கு ஆதாரமான எழுத்தையும்; இகழேல் - குறை வாக எண்ணக் கூடாது.

கணிதம், இலக்கியம் இவற்றை இகழ்ந்து ஒதுக்கக்கூடாது.

ஏற்பது இகழ்ச்சி 8

ஏற்பது - பிறரிடம் சென்று யாசிப்பது; இகழ்ச்சி - இழிவு

பிறரிடம் போய் யாசிப்பது இழிவாகும்.

ஐயம் இட்டு உண் 9

ஐயம் - பிச்சை கேட்பவர்களுக்கு; இட்டு - உணவு அளித்து, உண் - நீ சாப்பிட வேண்டும்.

பிச்சை கேட்பவர்க்கு உணவு கொடுத்த பின்னர் சாப்பிட வேண்டும்.

ஒப்புரவு ஒழுகு 10

ஒப்புரவு - உலக அனுபவத்தைத் தெரிந்து; ஒழுகு - நடந்து கொள்

உலக அனுபவத்தை அறிந்து அதற்கேற்ப நடந்துகொள்.

ஓதுவது ஒழியேல் 11

ஓதுவது - படிப்பதை; ஒழியேல் - விட்டுவிடாதே

படிப்பதை விட்டுவிடக் கூடாது.

ஔவியம் பேசேல் 12

ஔவியம் - பொறாமை; பேசேல் - பேசக்கூடாது
பொறாமைக் குணத்தோடு சொல்லக் கூடாது.

அஃகஞ் சுருக்கேல் 13

அஃகம் - தானியங்களை; சுருக்கேல் - குறைத்து நிறுக்காதே
தானியங்களை எடை அளவு குறைத்து நிறுக்கக்கூடாது.

கண்டு ஒன்று சொல்லேல் 14

கண்டு - ஒன்றைப் பார்த்து; ஒன்று - பாராத வேறு ஒன்றை; சொல்லேல் - சொல்லக் கூடாது.
கண்ணால் பார்த்ததைத் தவிர வேறு எதையும் கூறாதே.

ஙப் போல் வளை 15

ஙப் போல் - 'ங' என்ற எழுத்தைப் போல்; வளை - எல்லோரையும் ஆதரிப்பாயாக.
'ங' என்ற எழுத்தைப் போல் அனைவருடனும் இணைந்து செல்ல வேண்டும்.

சனி நீராடு 16

சனி - சனிக்கிழமை தோறும்; நீராடு - எண்ணெய் தேய்த்து நீரில் குளி. சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பாயாக.

ஞயம்பட உரை 17

ஞயம்பட - கனிவான முறையில்; உரை - கூறு.
கனிவான முறையில் எதையும் கூறுவாயாக.

இடம் பட வீடு எடேல் 18

வீடு - இல்லத்தை; இடம் பட - இடம் உபயோக மற்றபடி; எடேல் - கட்டாதே.
தேவைக்கு அதிகமாக வீட்டைப் பெரிதாக அமைக்காதே.

இணக்கம் அறிந்து இணங்கு 19

இணக்கம் - ஒருவரிடம் தொடர்பு கொள்ளமுன்; அறிந்து -

அவர் தகுந்தவரா என அறிந்து; இணங்கு - தொடர்பு கொள்ள வேண்டும். நட்பு கொள்ளமுன் அவர் நல்லவரா என்பதை தீர அறிந்து அதன் பிறகு தொடர்பு கொள்ள வேண்டும்.

தந்தை தாய் பேண் **20**

தந்தை தாய் - தந்தையையும் தாயையும்; பேண் - காப்பாற்ற வேண்டும்;
பெற்றோரைப் போற்றி ஆதரிக்க வேண்டும்.

நன்றி மறவேல் **21**

நன்றி - ஒருவர் செய்த உதவியை; மறவேல் - மறக்கக் கூடாது.
ஒருவர் செய்த உதவியை மறந்துவிடக் கூடாது.

பருவத்தே பயிர் செய் **22**

பருவத்தே - தகுந்த பருவகாலத்திலே; பயிர் செய் - பயிரிட முற்படு
உரிய காலத்திலே உழுது பயிரிட முற்பட வேண்டும்.

மண் பறித்து உண்ணேல் **23**

மண்பறித்து - மற்றவருடைய நிலத்தை அபகரித்து; உண்ணேல் உண்ணக் கூடாது.
மற்றவருடைய நிலத்தை அபகரித்து அதை உண்டு வாழக்கூடாது.

இயல்பு அலாதன செயேல் **24**

இயல்பு அலாதன - வழக்கத்துக்கு மாறான காரியத்தை; செயேல் - செய்தல் கூடாது.
வழக்கத்துக்கு மாறான காரியத்தை செய்யக் கூடாது.

அரவம் ஆடேல் **25**

அரவம் - பாம்புடன்; ஆடேல் - விளையாடாதே
பாம்போடு விளையாடினால் ஆபத்து நேரிடும்.

இலவம் பஞ்சில் துயில் **26**

இலவம் பஞ்சில் - இலவம் பஞ்சில் தயாரித்த மெத்தையில், துயில் - நித்திரை செய்
இலவம் பஞ்சு மெத்தையில் படுத்து நித்திரை செய்வது நன்மை தரும்.

வஞ்சகம் பேசேல் 27

வஞ்சகம் - உள்ளத்தில் ஒன்று வெளியில் ஒன்று; பேசேல் - பேசாதே.

கபடமாகப் பேசக் கூடாது

அழகு அலாதன செயேல் 28

அழகு அலாதன - மற்றவர் இகழத்தக்க காரியத்தை; செயேல் - செய்யாதே.

பிறர் இகழத்தக்கவற்றை செய்யக் கூடாது.

இளமையில் கல் 29

இளமையில் - சிறு பிராயத்தில்; கல் - கல்வி கற்றுக் கொள்.

சிறு பிராயத்திலே கல்வியைக் கற்பது சிறப்பாகும்.

அரனை மறவேல் 30

அரனை - இறைவனை; மறவேல் - மறந்துவிடாதே

இறைவனை மறவாமல் துதித்து வணங்க வேண்டும்.

அனந்தல் ஆடேல் 31

அனந்தல் - கடலில்; ஆடேல் - நீந்தி விளையாடாதே

கடலில் நீந்தி விளையாடினால் ஆபத்து நேரிடும்.

கடிவது மற 32

கடிவது - கோபத்தை உண்டாக்கும் சொற்களை; மற - மறந்துவிடு

பிறருக்கு கோபம் உண்டாக்கக் கூடிய சொற்களை கூறக் கூடாது.

காப்பது விரதம் 33

காப்பது - உயிர்வதை செய்யாமல் காப்பது; விரதம் - நோன்பாகும்.

பிற உயிர்களுக்கு ஆபத்து நேரிடாமல் காப்பது நோன்பு ஆகும்.

கிழமைப் பட வாழ் 34

கிழமைப்பட - மற்றவர்களுக்கு உதவியாக; வாழ் - வாழ்வாயாக

தனக்கே அன்றி மற்றவர்களுக்கும் உதவியாக வாழ வேண்டும்.

கீழ்மை அகற்று 35

கீழ்மை - கீழான செயல்களை; அகற்று - ஒதுக்கிவிடு
கீழ்த்தரமான செய்கைகளை செய்யாமல் நீக்கிவிட வேண்டும்.

குணமது கைவிடேல் 36

குணமது - நன்மையான குணங்களை; கைவிடேல் - கைவிடாதே
நற்பண்புகளை கைவிடாமல் வாழ வேண்டும்.

கூடிப் பிரியேல் 37

கூடி - பண்பானவர்களோடு உறவுகொண்டு; பிரியேல் - பிரிந்து விடக் கூடாது
நற்பண்புடையவர்களோடு தொடர்பு கொண்டு பிறகு அவர்களை விட்டுப் பிரியக் கூடாது.

கெடுப்பது ஒழி 38

கெடுப்பது - மற்றவருக்கு தீங்கு செய்வதை; ஒழி - விட்டுவிடு
ஒருவருக்கும் தீங்கு செய்யக் கூடாது.

கேள்வி முயல் 39

கேள்வி - பலவகையாலும் கேட்டு அறியும் அறிவை; முயல் முயன்று பெற்றுக்கொள்.
அறிவாளிகள் சொற்களை ஆவலோடு கேட்டுத் தெரிந்துகொள்.

கைவினை கரவேல் 40

கைவினை - கைத்தொழில்களை; கரவேல் - ஒளிக்காதே
கற்ற கைத்தொழில்களை மற்றவருக்கும் கற்றுக்கொடு.

கொள்ளை விரும்பேல் 41

கொள்ளை - மற்றவர் பொருளைக் கொள்ளை அடிக்க; விரும்பேல் - ஆசைப்படாதே
ஒருவருடைய பொருளை கொள்ளை அடிக்க ஆசைப்படாதே.

கோதாட்டு ஒழி 42

கோது - குற்றமுள்ள; ஆட்டு விளையாட்டுகளை; ஒழி - விட்டுவிடுவாயாக
ஆபத்தை உண்டாக்கக் கூடிய விளையாட்டுகளில் ஈடுபடாதே.

சக்கர நெறி நில் 43

சக்கர நெறி - அரசின் சட்ட திட்டங்களுக்கேற்ப; நில் - நடப்பாயாக

அரசு ஆணைகளை மதித்து நடக்க வேண்டும்.

சான்றோர் இனத்திரு 44

சான்றோர் - அறிவாளிகளுடைய; இனத்து - குழுவில் சார்ந்து; இரு - இருப்பாயாக.

அறிஞர்களின் குழுவிலே சேர்ந்துஇருப்பது மேன்மை அளிக்கும்.

சித்திரம் பேசேல் 45

சித்திரம் - பொய்யான சொற்களை; பேசேல் - பேசாதே.

பொய்யை அலங்காரமாக உண்மை போல பேசக் கூடாது.

சீர்மை மறவேல் 46

சீர்மை - சீரான செயல்களை; மறவேல் - மறந்துவிடாதே

சிறப்பான செயல்களை மறந்து விடவேண்டாம்.

சுளிக்கச் சொல்லேல் 47

சுளிக்க - முகம் கோணும்படியான; சொல்லேல் - சொற்களைச் சொல்லாதே

மற்றவர் முகம் கோணும்படியான சொற்களைக் கூறக்கூடாது.

சூது விரும்பேல் 48

சூது - சூதாட்டங்களை; விரும்பேல் - விளையாட ஆசைப்படாதே

சூதாட்டங்களினால் பொருள் நஷ்டமும் மனக் கஷ்டமும் உண்டாகும்.

செய்வன திருந்தச் செய் 49

செய்வன - செய்யக் கூடிய காரியங்களை; திருந்த - திருத்தமாக; செய் - செய்வாயாக.

செய்யும் காரியங்களைச் செவ்வையாகச் செய்ய வேண்டும்.

சேரிடம் அறிந்து சேர் 50

சேர் இடம் - சேரக் கூடியவர்களைப் பார்த்து; அறிந்து - நன்கு ஆராய்ந்து; சேர் - சேர்ந்துகொள்

சேரத்தக்கவர்களை நன்கு அறிந்து சேர வேண்டும்.

ஷை எனத் திரியேல் 51

ஷை என - "சீ" என பிறர் இகழும்படி; திரியேல் - அலையக் கூடாது.
மற்றவர் இகழும்படி நடந்து கொள்ளக் கூடாது.

சொல் சோர்வு படேல் 52

சொல் - ஒருவருடன் பேசும்பொழுது; சோர்வுபடேல் - மனம் தளர்ந்து பேசக்கூடாது.
மற்றவருடன் பேசும்பொழுது மனம் தளர்ந்து பேசக்கூடாது.

சோம்பித் திரியேல் 53

சோம் - சோம்பேறித்தனமாக; திரியேல் - திரியாதே
முயற்சி இன்றி சோம்பேறித்தனமாக ஊர் சுற்றக் கூடாது.

தக்கோன் எனத் திரி 54

தக்கோன் என - தகுதியுடையவன் என்று எண்ணும்படி; திரி -நடந்துகொள்
கௌரவமானவன் என்று பிறர் கருதும்படி நடக்க வேண்டும்.

தானமது விரும்பு 55

தானம் அது - ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்வதை; விரும்பு - ஆசைகொள்
ஆதரவற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

திருமாலுக்கு அடிமை செய் 56

திருமாலுக்கு - மகாவிஷ்ணுவுக்கு; அடிமை செய் - சேவை செய்.
மகாவிஷ்ணுவுக்கு சேவை செய்தால் புண்ணியம் கிடைக்கும்.

தீவினை அகற்று 57

தீவினை - தீமையான செயல்களை; அகற்று - செய்யாதே.
பிறருக்குத் தீமை உண்டாகும் செயல்களைச் செய்யக் கூடாது.

துன்பத்திற்கு இடம் கொடேல் 58

துன்பத்திற்கு - வருத்தத்திற்கு; இடம் கொடேல் - மனத்தில் இடம் கொடுக்காதே
மனம் வருந்தும்படி நடந்து கொள்ளக்கூடாது.

தூக்கி வினைசெய் 59

தூக்கி - ஆராய்ந்து பார்த்து; வினை செய் - காரியத்தைச் செய்.

எந்தக் காரியத்தையும் நன்கு ஆராய்ந்து தெளிந்து செய்ய வேண்டும்.

தெய்வம் இகழேல் 60

தெய்வம் - கடவுளை; இகழேல் - இகழ்ந்து பேசாதே.

கடவுளை இகழ்ச்சியாகப் பேசக் கூடாது.

தேசத்தோடு ஒத்து வாழ் 61

தேசத்தோடு - தன் நாட்டோடு; ஒத்து வாழ் - இணக்கமாக வாழ்வாயாக.

தன் நாட்டு மக்களோடு ஒற்றுமையாக இணைந்து வாழ வேண்டும்.

தையல் சொல் கேளேல் 62

தையல் - மனைவி; சொல் - இழிவான சொற்களை; கேளேல் - கேட்கக் கூடாது.

மனைவியின் இழிந்த சொற்களைக் கேட்டு அதன்படி நடக்கக் கூடாது.

தொண்மை மறவேல் 63

தொண்மை - பழைமைக் காரியங்களை; மறவேல் - மறவாதே.

பழமையான காரியங்களை மறந்துவிடக் கூடாது.

தோற்பன தொடரேல் 64

தோற்பன - தோல்வி ஏற்படும் என நிச்சயமாகத் தெரிந்தால்; தொடரேல் - அதை மேற்கொள்ளக் கூடாது.

தோல்வி உண்டாகும் எனத் தெரிந்தும் அதில் ஈடுபடக் கூடாது.

நன்மை கடைப்பிடி 65

நன்மை - நல்ல காரியங்களை; கடைப்பிடி - கைக்கொள்.

நற்காரியங்களை உறுதியாகச் செய்து வர வேண்டும்.

நாடு ஒப்பன செய் 66

நாடு - நாட்டு மக்கள்; ஒப்பன - ஏற்றுக்கொள்ளும் படியான காரியங்களை; செய் - செய்வாயாக.

நாட்டு மக்கள் ஒப்புக் கொள்ளத்தக்க காரியங்களைச் செய்ய வேண்டும்.

நிலையில் பிரியேல் 67

நிலையில் - உயர்ந்த நிலையிலிருந்து; பிரியேல் - கீழான நிலைக்கு இறங்கிவிடாதே.

மதிப்போடு இருந்துவிட்டு கேவலமாக நடந்து கொள்ளக்கூடாது.

நீர் விளையாடேல் 68

நீர் - தண்ணீர் பெருகிய இடத்திலே; விளையாடேல் - நீந்தி விளையாடாதே

ஆபத்தான வெள்ளத்தில் நீந்தி விளையாடக் கூடாது.

நுண்மை நுகரேல் 69

நுண்மை - நோய் தரக்கூடிய சிற்றுண்டிகளை; நுகரேல் - உண்ணாதே.

நோயை தரக்கூடிய ஆகாரங்களை உண்ணக் கூடாது.

நூல் பல கல் 70

நூல் - அறிவு நூல்களை, பல - நிறைய; கல் - கற்றுக்கொள்.
அறிவு வளர்ச்சிக்கான நூல்களை அதிகமாகப் படிக்க வேண்டும்.

நெல் பயிர் விளை 71

நெல் பயிர் - நெல் விளையத்தக்க பயிரை; விளை - உற்பத்தி செய்.

நெல் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

நேர்பட ஒழுகு 72

நேர்பட - நேர்மையாக; ஒழுகு - நடந்து கொள்வாயாக.
நேர்மையான வழியில் நடந்துகொள்ள வேண்டும்.

நைவினை நணுகேல் 73

நை - இகழ்வான; வினை - காரியங்களில்; நணுகேல் - ஈடுபடாதே.

இகழ்ச்சியான காரியங்களைச் செய்யக் கூடாது.

நொய்ய உரையேல் 74

நொய்ய - மனம் புண்படும் படியாக; உரையேல் - சொற்களை சொல்லக் கூடாது.

பிறர் மனம் புண்படும் படியான வார்த்தைகளை கூற வேண்டாம்.

நோய்க்கு இடம்கொடேல் 75

நோய்க்கு - வியாதிக்கு; இடம் கொடேல் - உடலில் இடம் கொடுக்கக் கூடாது.

நோய் உடலில் அணுகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

பழிப்பன பகரேல் 76

பழிப்பன - பழி சொல்லத்தக்க; பகரேல் - சொற்களைக் கூறாதே.

பிறர் பழிக்கும் படியான இழிவான சொற்களைக் கூற வேண்டாம்.

பாம்பொடு பழகேல் 77

பாம்பொடு - பாம்புடன்; பழகேல் - விளையாடாதே

பாம்பொடு விளையாடுவது உயிருக்கு ஆபத்து.

பிழைபடச் சொல்லேல் 78

பிழைபட - தவறாக நினைக்கும்படி; சொல்லேல் - சொல்லாதே.

தவறான கருத்து ஏற்படும் சொற்களைச் சொல்ல வேண்டாம்.

பீடு பெற நில் 79

பீடு - பெருமை; பெற - அடையும்படி; நில் - நிலையாக இரு.

பெருமைப் படத்தக்க முறையில் நடந்து கொள்ள வேண்டும்.

புகழ்ந்தாரைப் போற்றி வாழ் 80

புகழ்ந்தாரை - புகழ்மிக்கவர்களை; போற்றி - மதித்து; வாழ் - வாழ்வாயாக.

புகழ் மிக்க பெரியவர்களை வணங்கி, அவர்களைப் பின்பற்றி வாழ வேண்டும்.

பூமி திருத்தி உண் 81

பூமி - விளை நிலத்தை; திருத்தி - உழுது பயிர்செய்து; உண் - உண்பாயாக

நிலத்தை பயிர் செய்து, விளைந்த நெல்லைக் கொண்டு உண்ண வேண்டும்.

பெரியாரைத் துணைக் கொள் 82

பெரியாரை - அறிவு சான்ற ஒழுக்க சீலர்கள்; துணைக் கொள் - துணையாகக் கொள்வாயாக.

அறிவு மிகுந்த ஒழுக்க சீலர்களை அணுகி, அவர்களின் அறிவுரைகளைக் கேட்டு நடக்க வேண்டும்.

பேதைமை அகற்று 83

பேதைமை - அறிவில்லாத் தன்மையை; அகற்று - நீக்கிவிடு.
மூடத்தனமாக நடந்து கொள்ளக் கூடாது.

பையலோடு இணங்கேல் 84

பையலோடு - சிறுவனோடு; இணங்கேல் - சேராதே.
அறிவற்ற சிறுவனோடு பழகக் கூடாது

பொருள்தனைப் போற்றி வாழ் 85

பொருள்தனை - பொருள், செல்வம் ஆகியவற்றை; போற்றி - பாதுகாத்து; வாழ் - வாழ்வாயாக
பொருள்களையும் செல்வத்தையும் கவனமாகப் பாதுகாத்து வைத்துக் கொண்டு வாழ வேண்டும்.

போர்த் தொழில் புரியேல் 86

போர்த் தொழில் - சண்டை, சச்சரவுகளில்; புரியேல் - ஈடுபடாதே
வீணாக சண்டை சச்சரவுகளில் தலையிட வேண்டாம்.

மனம் தடுமாறேல் 87

மனம் - உள்ளம்; தடுமாறேல் - கலங்காதே.
மனங் கலங்கி செய்வது அறியாது தடுமாற வேண்டாம்.

மாற்றானுக்கு இடம் கொடேல் 88

மாற்றானுக்கு - எதிரிக்கு; இடம்கொடேல் - எதிலும் இடம் கொடுக்கக் கூடாது.
எதிரிக்குச் சிறிதளவேனும் இடம் அளிக்கக் கூடாது.

மிகைபடச் சொல்லேல் 89

மிகைபட - அளவுக்கு அதிகமாக, சொல்லேல் - சொல்லாதே
அளவுக்கு மீறிய சொற்களைச் சொல்லக் கூடாது.

மீதூண் விரும்பேல் 90

மீது - அதிகமான; ஊண் - உணவை; விரும்பேல் - உண்ணாதே
அளவுக்கு அதிகமான உணவை உண்ண வேண்டாம்.

முனை முகத்து நில்லேல் 91

முனை முகத்து - போர் முனையிலே; நில்லேல் - ஆயுதம் இன்றி நிற்காதே

போர் முனையில் ஆயுதம் இல்லாமல் நிற்கக் கூடாது.

மூர்க்கரோடு இணங்கேல் 92

மூர்க்கரோடு - முரடர்களோடு; இணங்கேல் - இணையாதே

அறிவு இல்லாத மூடர்களோடு சேரக் கூடாது.

மெல்லி நல்லாள் தோள்சேர் 93

மெல் - மென்மையான; நல்லாள் - நற்குணம் பொருந்திய மனைவியோடு; தோள் சேர் - இணைந்து வாழ்வாயாக

வீட்டிலே நல்ல மனைவியோடு இணைந்து வாழ வேண்டும்.

மேன் மக்கள் சொல் கேள் 94

மேன் மக்கள் - மேன்மைக் குணம் வாய்ந்தவர்களுடைய; சொல் - அறிவுரைகளை; கேள் - கேட்டு நடப்பாயாக

உயர் குணமிக்க பெரியோர்களின் அறிவுரையைக் கேட்டு நடந்தால் நன்மை உண்டாகும்.

மை விழியார் மனை அகல் 95

மை விழியார் - ஒழுக்கம் இல்லாத பெண்ணின்; மனை அகல் வீட்டுக்குப் போகாதே

மயக்கும் விலைமாதர் வீட்டுக்குப் போக வேண்டாம்.

மொழிவது அறமொழி 96

மொழிவது - சொல்வதை; அற - சந்தேகம் இல்லாமல்; மொழி - சொல்வாயாக.

சொல்லக் கூடியதை சந்தேகமின்றித் தெளிவாகக் கூற வேண்டும்.

மோகத்தை முனி 97

மோகத்தை - ஆசையை; முனி - வெறுத்துத் தடை செய்வாயாக.

ஆசையை வெறுத்து அடக்க வேண்டும்.

வல்லமை பேசேல் 98

வல்லமை - உன்னுடைய திறமையை; பேசேல் - புகழ்ந்து பேசாதே.

உன்னுடைய திறமையை நீயே புகழ்ந்து கொள்ளக் கூடாது.

வாது முற்கூறேல் 99

வாது - விவாதம் செய்வதற்கு; முற்கூறேல் - வ்லியச் சென்று அழைக்காதே.

வலியச் சென்று யாரையும் விவாதங்களுக்குக் கூப்பிடக் கூடாது.

வித்தை விரும்பு 100

வித்தை - கலைகளை; விரும்பு - விரும்பிக் கற்றுக் கொள்.

கல்வி முதலான கலைகளை ஆசையோடு கற்றுக் கொள்ள வேண்டும்.

வீடு பெற நில் 101

வீடு - மோட்சத்தை; பெற - அடைவதற்கு; நில் - முயற்சி செய்.

முக்திக்கான வழியை அடைய முயற்சி செய்ய வேண்டும்.

உத்தமனாய் இரு 102

உத்தமனாய் - நல்ல குணம் பொருந்தியவனாக; இரு - வாழ்வாயாக.

நற்குணம் உள்ளவனாக வாழ வேண்டும்.

ஊருடன் கூடிவாழ் 103

ஊருடன் - ஊராருடன்; கூடி - ஒற்றுமையாக; வாழ் - வாழ்வாயாக

ஊர்மக்களோடு ஒற்றுமையாக இணைந்து வாழ வேண்டும்

வெட்டெனப் பேசேல் 104

வெட்டென - வெடுக்கென்று; பேசேல் - பேசக் கூடாது

யாரிடமும் கடுமையான சொற்களைக் கூறக்கூடாது.

வேண்டி வினை செயேல் 105

வேண்டி - வேண்டும் என்றே; வினை செயேல் - தீமையான செயல்களைச் செய்யாதே.

வேண்டும் என்றே எவருக்கும் தீமை செய்யக் கூடாது.

வைகறைத் துயில் எழு 106

வைகறை - விடியற் காலையில்; துயில் எழு - நித்திரையிலிருந்து விழிக்க வேண்டும்.

அதிகாலையில் விழித்து எழுவது சிறப்புடையதாகும்.

ஒன்னாரைத் தேறேல் 107

ஒன்னாரை - எதிரிகளை; தேறேல் - நம்பக்கூடாது.

எதிரிகளிடம் நம்பிக்கை கொள்ளக் கூடாது.

ஓரம் சொல்லேல் 108

ஓரம் - பட்சபாதமாக; சொல்லேல் - எதையும் சொல்லாதே.

ஒருதலைப் பட்சமாகக் கூறக் கூடாது.

ஆத்திசூடி மூலம் – பதவுரை – கருத்துரை

முற்றும்

கொன்றை வேந்தன்

கடவுள் வாழ்த்து

கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை
என்றும் ஏத்தித் தொழுவோம் யாமே

கொன்றை - கொன்றைப் பூ மாலையை அணிந்துள்ள; வேந்தன் - சிவபெருமானுக்கு; செல்வன் - செல்லப்பிள்ளையான விநாயகரின்; இணைஅடி - இரண்டு பாதங்களையும்; யாம் - நாம்; என்றும் - எப்பொழுதும்; ஏத்தி - போற்றி; தொழுவோம் - வணங்குவோம்.

கொன்றைப் பூவை அணிந்துள்ள சிவபெருமானுடைய செல்வப் புத்திரனான விநாயகப் பெருமானை எப்பொழுதும் துதித்துப் போற்றி வணங்குவோம்.

நூல்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் 1

அன்னையும் - அம்மாவும்; பிதாவும் -அப்பாவும்; முன் அறி - கண்முன்னே காணப்படும், தெய்வம் - கடவுள்
அம்மாவும் அப்பாவும் கண்கண்ட கடவுள்

ஆலயம் தொழுவது சாலவும் நன்று 2

ஆலயம் தொழுவது - கோவிலுக்குப் போய் இறைவனை வணங்குவது; சாலவும் - மிகவும்; நன்று - நன்மை.
கோவிலுக்கு போய் இறைவனை வணங்குவது மிகவும் நன்மை தரும்.

இல் அறம் அல்லது நல் அறம் அன்று 3

இல் அறம் - மனைவியோடு சேர்ந்து வீட்டிலிருந்து வாழ்வது; நல் அறம் - நல்ல வாழ்வு; அல்லது - அப்படி இல்லாவிட்டால்; நல் அறம் அன்று - நன்மை தரக் கூடிய நல்ல நெறியுடைய வாழ்க்கை ஆகாது.
மனைவியோடு சேர்ந்து வாழ்வது நல்வாழ்வு; இல்லாவிடில் நல்வாழ்வு ஆகாது.

ஈயார் தேட்டை தீயார் கொள்வர் 4

ஈயார் - கொஞ்சங்கூட பிறருக்கு உதவாத கருமிகளின்; தேட்டை - தேடிய பொருளை; தீயார் - தீயோர்கள்; கொள்வர் - கொள்ளை அடித்துக் கொண்டு போவார்கள்.

எவருக்கும் உதவாத கருமிகளின் பொருள்களை தீயவர்கள் கொள்ளை அடித்துக் கொண்டு போய்விடுவார்கள்.

உண்டி சுருங்குதல் பெண்டிர்க்கு அழகு 5

உண்டி - உணவு; சுருங்குதல் - குறைவாயிருத்தல்; பெண்டிர்க்கு - பெண்களுக்கு அழகு - அழகாகும்.

குறைவாக உண்ணுதல் பெண்களுக்குக் கவர்ச்சியாயிருக்கும்.

ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும் 6

ஊருடன் - ஊரோடு; பகைக்கின் - விரோதித்துக் கொண்டால்; வேருடன் - குடும்பத்தோடு; கெடும் - அழிந்துபோகும்.

ஊரோடு விரோதித்துக் கொண்டால் குடும்பத்தோடு அழிந்து விடுவார்.

எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும் 7

எண்ணும் - கணக்கும்; எழுத்தும் - இலக்கியமும்; கண் என - இரு கண்களைப் போல்; தகும் - கூறத்தகும்.

கணக்கும் இலக்கியமும் கண்களைப் போல சிறப்பானவை.

ஏவா மக்கள் மூவா மருந்து 8

ஏவா - வேலை ஏவு முன்னே குறிப்பை உணர்ந்து செய்யும், மக்கள் - பிள்ளைகள்; மூவா மருந்து - அமுதம் போன்றவர்கள்.

சொல்லும் முன்பே குறிப்பை உணர்ந்து செய்யும் மக்கள் அமுதத்துக்கு இணையானவர்கள்.

ஐயம் புகினும் செய்வன செய் 9

ஐயம் புகினும் - பிச்சை எடுக்க நேரிட்ட போதிலும்; செய்வன - செய்யக் கூடிய நல்ல காரியங்களை; செய் - செய்வாயாக.

வறுமையால் பிச்சை எடுக்க நேர்ந்த போதிலும் செய்ய வேண்டிய நல்ல காரியத்தை செய்யாமல் விட்டு விடக் கூடாது.

ஒருவனைப் பற்றி ஓரகத்து ஒரு 10

ஒருவனைப் பற்றி - நல்லவன் ஒருவனை திருமணம் புரிந்து கொண்டு; ஓர் அகத்து - ஒரு வீட்டில்; இரு - வாழ்வாயாக.

ஒருவனை கணவனாகத் தேர்ந்தெடுத்து ஒரு வீட்டிலேயே அவனுடன் வாழ வேண்டும்.

ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம் 11

வேதியர்க்கு - பிராமணருக்கு; ஒழுக்கம் - உயர்வான நெறியானது; ஓதலில் - வேத பாராயணத்தை விட; நன்றே - நல்லது ஆகும்.

வேதத்தைப் படிப்பதைக் காட்டிலும் பிராமணருக்கு மிகவும் சிறப்பை அளிப்பது ஒழுக்க மேம்பாடே ஆகும்.

ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு 12

ஔவியம் பேசுதல் - பொறாமை எண்ணத்தோடு பேசுவது; ஆக்கத்திற்கு - செல்வத்துக்கு; அழிவு - தீமை உண்டாகும்.

பொறாமை எண்ணத்தோடு பேசுவது செல்வத்தை அழித்துவிடும்.

அஃகமும் காசும் சிக்கெனத் தேடு 13

அஃகமும் - தானியமும்; காசும் - பணமும்; சிக்கென - செட்டோடு; தேடு - சம்பாதி.

சிக்கனமாக இருந்து தானியத்தையும் செல்வத்தையும் சம்பாதிக்க வேண்டும்.

கற்பு எனப்படுவது சொல் திறம்பாமை 14

கற்பு எனப்படுவது - மகளிர் நிறை என்று கூறுவது; சொல் திறம்பாமை - கணவன் சொல்லைத் தட்டாமல் நடப்பது ஆகும்.

கணவன் சொற்படி நடப்பதே பெண்களுக்கு நிறை ஆகும்.

காவல் தானே பாவையர்க்கு அழகு 15

காவல் தானே - தன்னைத் தானே காத்துக் கொள்வதுதான்; பாவையர்க்கு - பெண்களுக்கு; அழகு - சிறப்பாகும்.

ஒழுக்கத்தோடு தங்களைக் காத்துக் கொள்வதே பெண்களுக்கு உரிய சிறப்பாகும்.

கிட்டாதாயின் வெட்டென மற 16

கிட்டாதாயின் - ஆசைப்பட்டது கிடைக்காவிட்டால்; வெட்டென - உடனே; மற - மறந்துவிடு.

ஆசைப்பட்டது கிடைக்காவிடில் அதை உடனே மறந்து விடுவது சிறப்பு.

கீழோர் ஆயினும் தாழ உரை 17

கீழோர் ஆயினும் - அடிமை வேலை செய்வோரானாலும்; தாழ உரை - அவர்களிடம் மரியாதையோடு சொல்ல வேண்டும்.

அடிமை வேலை செய்யக் கூடியவர்களானாலும் கூட அவர்களிடம் மரியாதையோடு பேசிப்பழகுவது நன்மை தரும்.

குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை 18

குற்றம் பார்க்கின் - குறைகளையே பெரிதாகப் பேசினால்; சுற்றம் இல்லை - உறவினர் எவரும் இருக்க மாட்டார்கள்.

குற்றம் குறைகளையே சொல்லிக் கொண்டிருந்தால் சுற்றத்தார் என யாருமே இருக்கமாட்டார்.

கூர் அம்பு ஆயினும் வீரியம் பேசேல் 19

கூர் அம்பு ஆயினும் - கூர்மையான ஆயுதம் இருந்தால் கூட வீரியம் பேசேல் - கர்வத்தோடு வீரம் பேசாதே.

தன் கையில் மிகக் கூர்மையான ஆயுதம் வைத்திருந்த போதிலும் கர்வத்தோடு வீரம் பேசக்கூடாது.

கெடுவது செய்யின் விடுவது கருமம் 20

கெடுவது செய்யின் - ஒருவர் கெடுதல் செய்தால் கூட; விடுவது - பதிலுக்குச் செய்யாமல் விட்டு விடுவது; கருமம் - சிறந்த செயலாகும்.

தீங்கு செய்தவருக்குப் பதிலுக்குத் தீங்கு செய்யாமல் மன்னித்து விடுவது சிறந்த செயலாகும்.

கேட்டில் உறுதி கூட்டும் உடைமை 21

கேட்டில் - வறுமை துன்புறுத்திய போதிலும்; உறுதி - மன வலிமையோடு இருத்தல்; உடைமை - செல்வத்தை; கூட்டும் - சேர்க்கும்.

வறுமையில் வாடினாலும் கூட மனம் தளராமல் இருப்பதே செல்வத்தைச் சேர்ப்பிக்கும்.

கைப் பொருள் தன்னில் மெய்ப் பொருள் கல்வி 22

கைப்பொருள் தன்னில் - கையிலுள்ள செல்வத்தைக் காட்டிலும்; மெய்ப் பொருள் - நிலையான உண்மைப் பொருள்; கல்வி - படிப்பே ஆகும். கைவசம் இருக்கும் செல்வத்தைக் காட்டிலும் கல்வியே நிரந்தரமான உண்மையான செல்வமாகும்.

கொற்றவன் அறிதல் உற்ற இடத்துஉதவி 23

கொற்றவன் - ஆட்சி புரிபவர்; அறிதல் - தெரிந்து கொள்ள வேண்டியது என்ன எனில்; உற்ற இடத்து - மக்களுக்குத் துன்பம் நேரிட்ட இடத்துக்கு உடனே சென்று; உதவி - தகுந்த உதவி புரிவதே.

மக்களுக்கு ஆபத்து உண்டானபோது அதை உடனே அறிந்து தகுந்த உதவி செய்வதே ஆட்சி செய்வோர் கடமை ஆகும்.

கோள் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு 24

கோள் செவி - கோள் கேட்க விரும்பும் காதிலே; குறளை - கோள் மூட்டி விட்டால்; காற்றுடன் நெருப்பு - காற்றும் நெருப்பும் கலந்தது போலாகும்.

கோள் கூறுவதை விரும்பிக் கேட்பவர் காதிலே மேலும் கோள் மூட்டிவிட்டால் காற்றும் நெருப்பும் பற்றி எரிவது போலாகும்.

கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை 25

கௌவை - பழிச் சொற்களை; சொல்லின் - கூறினால்; எவ்வருக்கும் பகை - எல்லோருக்குமே அவன் பகைவன் ஆவான். பிறர் மீது பழிச் சொற்களைக் கூறுவதனால் எல்லோரிடமும் விரோதம் ஏற்படும்.

சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை 26

சந்ததிக்கு அழகு - வம்சம் தழைப்பதற்குச் சிறப்பு என்னவென்றால்; வந்தி செய்யாமை - மலடாக வாழாமல் இருப்பதே ஆகும்.

பரம்பரை விளங்குவதற்கு மக்கட் செல்வத்தோடு வாழ வேண்டும்.

சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு 27

ஈன்றோட்கு - பெற்ற தாய்க்கு; அழகு - சிறப்பைத் தருவது எது எனில்; சான்றோர் என்கை - தான் பெற்ற பிள்ளைகளை உலகோர் அறிஞர் என்று போற்றுவதே ஆகும்.

தன்னுடைய பிள்ளைகளை உலகத்தார் அறிஞர் என்று போற்றுவதே தாய்க்குச் சிறப்பாகும்.

சிவத்தைப் பேணில் தவத்திற்கு அழகு 28

சிவத்தை - சிவபெருமானை; பேணில் - துதி செய்து வணங்கினால், தவத்திற்கு அழகு - தவம் செய்வோருக்கு அதுவே சிறப்பாகும். தவம் செய்வோருக்குச் சிறப்பு சிவபெருமானை துதித்து வழிபாடு செய்வதே.

சீரைத் தேடின் ஏரைத்தேடு 29

சீரை - சிறப்பான வாழ்வை; தேடின் - விரும்பினால்; ஏரைத்தேடு - உழவுத் தொழிலை கைக்கொள்வதே.
சிறப்பாக வாழ ஆசைப்பட்டால் உழவுத் தொழிலைக் கைக்கொள்ள வேண்டும்.

சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல் 30

சுற்றத்திற்கு அழகு - சுற்றத்தாருக்குச் சிறப்பு; சூழ இருத்தல் - நன்மை தீமையில் சூழ்ந்து இருப்பதே.
நன்மையிலும் தீமையிலும் விலகாமல் இருப்பதே உறவினர்களுக்குச் சிறப்பு ஆகும்.

சூதும் வாதும் வேதனை செய்யும் 31

சூதும் - சூதாடுதலும்; வாதும் - தர்க்க வாதம் செய்தலும்; வேதனை செய்யும் - துன்பத்தை உண்டாக்கும்.
குதிரைப் பந்தயம், சீட்டாட்டம், சொக்கட்டான் போன்ற சூதாட்டங்களும் தர்க்கப் பேச்சுக்களும் துன்பத்தை அளிக்கும்.

செய்தவம் மறந்தால் கைத்தவம் ஆளும் 32

செய்தவம் - தவம் புரிவதை; மறந்தால் - மறந்து விட்டால்; கைத்தவம் - அஞ்ஞானம்; ஆளும் - அவனை ஆட்சி செலுத்தும்.
தான் செய்யக் கூடிய தவத்தை எவன் மறந்து விடுகின்றானோ அவனை அறியாமை ஆட்சி செலுத்தும்.

சேமம் புகினும் யாமத்து உறங்கு 33

சேமம் - காவல் காப்பதற்கு; புகினும் - போனாலும்; யாமத்து - நள்ளிரவில்; உறங்கு - தூங்குவாயாக.
காவல் காப்பதற்குச் சென்ற போதிலும் நள்ளிரவில் சிறிது நேரமாயினும் தூங்குவாயாக.

ஐ ஒத்து இருந்தால் ஐயம் இட்டு உண் 34

ஐ ஒத்து இருந்தால் - உதவி புரிய பொருள் இருக்குமானால்; ஐயம் இட்டு உண் - பிறருக்கு உணவு அளித்துவிட்டு உண்பாயாக.
செல்வம் இருக்குமானால் பிறருக்கு உணவு அளித்துவிட்டு உண்ண வேண்டும்.

சொக்கர் என்பவர் அத்தம் பெறுவர் 35

சொக்கர் என்பவர் - தூய்மையான உள்ளமும் பொருள் வசதியும் உடையவரானால்; அத்தம் பெறுவர் - வாழ்வில் சகல இன்பங்களும் அடைவர். - தூய்மையான உள்ளமும், பொருளும் உள்ளவரானால் வாழ்வில் முழு இன்பமும் அடைவர்.

சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர் 36

சோம்பர் என்பவர் - முயற்சி செய்து உழைக்காதவர்; தேம்பித் திரிவர் - வறுமையால் துன்புற்று உழல்வார்.
முயற்சி செய்து உழைக்காதவர் வறுமையால் துன்புற்றுத் திரி-வார்.

தந்தை சொல்மிக்க மந்திரம் இல்லை 37

தந்தை - தன்னைப் பெற்ற தகப்பனாரின்; சொல் - அறிவுரைக்கு; மிக்க - மேலான; மந்திரம் இல்லை - சாஸ்திரம் இல்லை.
தகப்பனார் கூறும் அறிவுரைக்கு மிஞ்சிய சாஸ்திரம் வேறு இல்லை.

தாயிற் சிறந்து ஒரு கோயிலும் இல்லை 38

தாயிற் சிறந்து - பெற்ற தாயைக் காட்டிலும் மேன்மையாக; ஒரு கோயிலும் இல்லை - ஆலயம் வேறு எதுவும் இல்லை.
தாயையே வணங்க வேண்டும். அதற்கு மேலான கோயில் எதுவுமே இல்லை.

திரை கடல் ஓடியும் திரவியம் தேடு 39

திரை கடல் - அலை மோதும் கடலுக்கு அப்பால்; ஓடியும் எப்படியும் போய்; திரவியம் தேடு - பொருள் சம்பாதிப்பாயாக.
அலைகடலுக்கு அப்பால் சென்றாவது பொருள் தேட வேண்டும்.

தீராக் கோபம் போராய் முடியும் 40

தீராக் கோபம் - அடக்க முடியாத கோபம்; போராய் முடியும் - கலகமாக முடிந்துவிடும்.

அடங்காத சினம் பெரிய சண்டையில் கொண்டுவிடும்.

துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு 41

துடியாப் பெண்டிர் - கணவனுக்குத் துன்பம் உற்ற பொழுது மனம் பதறாத மனைவியர்; மடியில் நெருப்பு - வயிற்றில் கட்டி வைத்துள்ள தீயைப் போன்றவர்கள்.

கணவனுக்கு எதிர்பாராத துன்பம் நேரிட்டபொழுது துடிதுடிக்காத மனைவியானவள் வயிற்றில் கட்டி வைத்துள்ள நெருப்புப் போன்றவள்.

தூற்றும் பெண்டிர் கூற்று எனத் தகும் 42

தூற்றும் பெண்டிர் - அவதூறுகளையே பேசித் திரியும் பெண்ணானவள்; கூற்று எனத்தகும் - குடும்பத்துக்கு எமனைப் போன்றவள் ஆவாள்.

அவதூறுகளையே பேசித் திரியும் பெண் எமன் என்று சொல்லக் கூடியவள் ஆவாள்.

தெய்வம் சீறின் கைதவம் மாளும் 43

தெய்வம் சீறின் - கடவுளுடைய கோபம் ஏற்படுமேயானால்; கைதவம் மாளும் - கை வரப்பெற்ற தவம்அழிந்துவிடும்.

கடவுளின் கோபத்துக்கு ஆளானால் கைவரப்பெற்ற தவம் அழிந்து போகும்.

தேடாது அழிக்கின் பாடாய் முடியும் 44

தேடாது - முயற்சி செய்து சம்பாதிக்காமல்; அழிக்கின் - கையிலுள்ள பொருளைச் செலவழித்துக் கொண்டிருந்தால்; பாடாய் முடியும் - பெருந் துன்பமாக முடியும்.

முயன்று பொருளைச் சம்பாதிக்காமல் இருக்கின்றவற்றையே செலவு செய்து கொண்டிருந்தால் முடிவில் துன்பம் உண்டாகும்.

தையும் மாசியும் வையகத்து உறங்கு 45

தையும் மாசியும் - தை, மாசி மாதங்களில்; வையகத்து - வைக்கோல் வேய்ந்த வீட்டில்; உறங்கு - தூங்குவாயாக.

தை, மாசி மாதங்களில் வைக்கோல் வேய்ந்த வீட்டில் உறங்கினால் காலநிலைக்குத் தகுந்தபடி சுகமாக இருக்கும்.

தொழுது ஊண் சுவையின் உழுது ஊண் இனிது 46

தொழுது - வணங்கி வேலை பார்த்து; ஊண் சுவையின் - கிடைக்கும் வருவாயில் உண்டு வாழ்வதைவிட; உழுது ஊண் இனிது - நிலத்தை வேளாண்மை செய்து உண்பதே சுவையாகும்.
வணங்கி வேலை பார்த்து வயிறு வளர்ப்பதைவிட வேளாண்மை செய்து உண்பதே சிறப்புடையதாகும்.

தோழனோடும் ஏழைமை பேசேல் 47

தோழனோடும் - நெருங்கிய நண்பனிடத்திலும்; ஏழைமை -வறுமை நிலைபற்றி; பேசேல் - பேசக் கூடாது.
நெருங்கிய நண்பனிடத்திலும் கூட வறுமை நிலையைச் சொன்னால் மிகவும் கேவலமாக நினைப்பான்.

நல் இணக்கம் அல்லது அல்லல் படுத்தும் 48

நல் இணக்கம் அல்லது - பண்புமிக்க நல்லவர்கள் தொடர்பு இல்லையானால்; அல்லல்படுத்தும் - சங்கடத்தை உண்டாக்கும்.
நல்லவர்கள் தொடர்பு நன்மையாகும். கெட்டவர்கள் தொடர்பு தீமையாகும்.

நாடு எங்கும் வாழக்கேடு ஒன்றும் இல்லை 49

நாடு எங்கும் - நாடு முழுவதும்; வாழ - செழித்து வாழ்ந்தால்; கேடு ஒன்றும் இல்லை - தீங்கு எதுவும் இருக்காது.
தேசம் பூராவும் செழித்துத் தழைத்தால் துன்பமே இல்லை.

நிற்கக் கற்றல் சொல் திறம்பாமை 50

நிற்கக் கற்றல் - நிலைத்து நிற்கும் கல்வி கற்பதானது; செ... திறம்பாமை - சொன்ன சொல்லைக் காப்பாற்றுதல்.
நிலையான கல்வி கற்றவர் என்பவர் வாக்குறுதி உள்ளவரே ஆவர்.

நீர் அகம் பொருந்திய ஊர் அகத்திரு 51

நீர் அகம் - தண்ணீர் தன்னகத்தே; பொருந்திய - அமைந்துள்ள; ஊர் அகத்திரு - ஊரிலே வசிப்பாயாக.
தண்ணீர் வசதி நிறைந்த ஊரிலே வாழ்வாயாக.

நுண்ணிய கருமமும் எண்ணித் துணி 52

நுண்ணிய - மிகச் சிறிய; கருமம் - செயலானாலும்; எண்ணி - நன்கு யோசித்து; துணி - செய்ய முற்படு.

மிகச் சிறிய செயலானாலும் கூட தீர யோசித்தே செய்ய வேண்டும்.

நூன் முறை தெரிந்து சீலத்து ஒழுகு 53

நூன் முறை தெரிந்து - அறநூல்களிலே கூறியுள்ள நீதிகளை உணர்ந்து; சீலத்து ஒழுகு - ஒழுக்கத்தோடு நடந்துகொள்.

அற நூல்களின் நீதிமுறைகளைத் தெரிந்து ஒழுக்கத்தோடு வாழ வேண்டும்.

நெஞ்சை ஒளித்து ஒரு வஞ்சகம் இல்லை 54

நெஞ்சை ஒளித்து மனதுக்குத் தெரியாத; ஒரு வஞ்சகம் இல்லை - ஏமாற்றத்தக்க காரியம் ஏதும் இல்லை.

மனதுக்குத் தெரியாமல் ஏமாற்றமான காரியம் ஏதும் இல்லை

நேரா நோன்பு சீர் ஆகாது 55

நேரா நோன்பு - மனம் இணக்கத்தோடு செய்யாத; நோன்பு சீர் ஆகாது - விரதமானது சிறப்பாகாது.

மனம் இணங்கிச் செய்யாத நோன்பு சிறப்பு அளிக்காது.

நைபவர் எனினும் நொய்ய உரையேல் 56

நைபவர் எனினும் - வலிமையற்றவர் ஆனாலும்; நொய்ய உரை யேல் - மனம் நோகும்படியான சொற்களைக் கூறாதே.

எளியவர் ஆனாலும் மனம் நோகும் படியான சொற்களைக் கூற வேண்டாம்.

நொய்யவர் என்பவர் வெய்யவர் ஆவர் 57

நொய்யவர் என்பவர் - எளியவர் என்று நினைக்கப்படுவோரும்; வெய்யவர் ஆவர் - ஒரு சந்தர்ப்பத்தில் பெரியவராகிவிடுவார்.

தோற்றத்தில் எளிமையாகத் தெரிந்தாலும் செயல் மூலம் பெரிய வராகத் திகழ்ந்துவிடுவார்.

நோன்பு என்பது கொன்று தின்னாமை 58

நோன்பு என்பது - விரதம் எனப்படுவது; கொன்று தின்னாமை - உயிரைக் கொன்று அதன் புலாலை உண்ணாமல் இருப்பதே ஆகும்.

மற்ற உயிர்களைக் கொன்று உண்ணாமல் இருப்பதே விரதம் ஆகும்.

பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும் 59

பண்ணிய பயிரில் - பியர் செய்த விளைச்சலில்; புண்ணியம் தெரியும் - நற்பயன் தெரிந்துவிடும்.

வேளாண்மை செய்துள்ள விளைச்சலைக் காணும்போது அவருடைய நல்வினைப் பயன் தெரிந்துவிடும்.

பாலோடு ஆயினும் காலம் அறிந்து உண் 60

பாலோடு ஆயினும் - பாலுடன் செய்த பதார்த்தமானாலும் கூட; காலம் அறிந்து உண் - நேரத்தோடு உண்ண வேண்டும்.

பாலினால் தயாரித்த உணவுப் பொருளானாலும் நேரம் தவறி சாப்பிடக் கூடாது.

பிறன் மனை புகாமை அறம் எனத்தகும் 61

பிறன் மனை - காம இச்சையால் மற்றவர் வீட்டுக்கு; புகாமை - போகாமல் இருப்பது; அறம் எனத்தகும் - ஒழுக்க நெறி ஆகும்.

பிறர் மனைவியிடம் இச்சை வைத்து அங்கே போகாமல் இருப்பதே சிறந்த ஒழுக்க நெறி ஆகும்.

பீரம் பேணில் பாரம் தாங்கும் 62

பீரம் பேணில் - தாய்ப்பாலை ஊட்டி நன்றாக வளர்த்தால்; பாரம் தாங்கும் - எதிர்காலத்தில் வலிமை மிக்கவனாக வாழ இயலும்.

தன் தாய்ப்பாலைக் குடித்து வளர்ந்த குழந்தை வலிமையோடு பொறுப்பான காரியத்தை நிறைவேற்றும்.

புலையும் கொலையும் களவும் தவிர் 63

புலையும் - புலால் உண்பதையும்; கொலையும் - கொலை செய்வதையும்; களவும் - திருடுவதையும்; தவிர் - தவிர்ப்பாயாக.

புலால் உணவு, உயிர்க்கொலை, திருட்டுத் தொழில் இவற்றை ஒழித்து விடுவாயாக.

பூரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம் 64

பூரியோர்க்கு - கீழ்த்தரமானவர்களிடம்; இல்லை - இருப்பதில்லை; சீரிய ஒழுக்கம் - சிறப்புமிக்க பண்பு.

கீழ்த்தரமானவர்களிடம் சிறப்பு மிக்க பண்பு இருக்காது.

பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும் 65

சுற்றமும் சினமும் - சுற்றத்தார் என்னும் பாசமும் கோபமும்; பெற்றோர்க்கு இல்லை - ஞானம் கைவரப் பெற்றவர்களுக்கு இல்லை.

உண்மையான ஞானிகளுக்கு உறவு என்னும் ஆசை கோபம் எதுவும் இருப்பதில்லை.

பேதைமை என்பது மாதர்க்கு அணிகலம் 66

பேதைமை என்பது - அறியாமை என்பது; மாதர்க்கு அணிகலம் - பெண்களுக்கு ஆபரணத்தைப் போன்றது.

தெரியாதவர் போல் அமைதியாயிருப்பது பெண்களுக்கு ஆபரணத்தைப் போன்ற பண்பாகும்.

பையச் சென்றால் வையம் தாங்கும் 67

பையச் சென்றால் - எந்தச் செயலிலும் நிதானமாகச் சென்றால்; வையம் தாங்கும் - உலகையே ஆளக்கூடிய வெற்றி கிடைக்கும்.

மெதுவாகச் செய்யக் கூடிய செயல் வெற்றி அளிக்கும்.

பொல்லாங்கு என்பது எல்லாம் தவிர் 68

பொல்லாங்கு என்பது - தீயவை என்று கருதப்படும்; எல்லாம் தவிர் - எல்லாவ றையும் நீக்கிவிடுவாயாக.

தீமையான செயல்கள் எல்லாவற்றையும் அகற்றிவிட வேண்டும்.

போனகம் என்பது தான் உழந்து உண்டல் 69

போனகம் என்பது - உணவு என்பது; தான் உழந்து - தன்னுடைய உழைப்பால் கிடைத்ததை; உண்டல் - சாப்பிடுவதாகும்.

தன்னுடைய சுயமுற்சியால் தேடி உண்பதே சிறப்புடையது.

மருந்தே ஆயினும் விருந்தோடு உண் 70

மருந்தே ஆயினும் - கிடைப்பதற்கு அரிய அமிர்தமே கிடைத்த போதிலும் கூட; விருந்தோடு உண் - விருந்தினர்களோடு பகிர்ந்து உண்பாயாக.

அமிர்தமே கிடைத்தாலும் விருந்தினருடன் சாப்பிடுவது சிறப்பு.

மாரி அல்லது காரியம் இல்லை 71

மாரி அல்லது - காலத்தில் மழை பொழியாவிடில்; காரியம் இல்லை - நாட்டில் எந்தக் காரியமும் நடப்பது இல்லை.
உலகில் எல்லாக் காரியங்களுக்கும் மழையே முக்கியமானது.

மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை 72

மின்னுக்கு எல்லாம் - வானத்தில் மின்னல் தோன்றினால்; பின்னுக்கு மழை - அடுத்த மழை வரும் என்பதற்கு அடையாளம்.
மின்னல் தோன்றினால் மழை வரும் என்பதற்கு அடையாளம்.

மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது 73

மீகாமன் இல்லா - மாலுமி இல்லாமல்; மரக்கலம் ஓடாது - பாய்மரக் கப்பல் ஓடாது.
மாலுமி இல்லாமல் மரக்கப்பல் ஓடாது.

முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் 74

முற்பகல் செய்யின் - வாழ்வின் முற்பகுதியில் யாருக்காவது தீங்கு செய்தால்; பிற்பகல் விளையும் - பிற்பகுதியில் தனக்கு அத்தகைய தீங்கு நேரிடும்.
முன் பகுதியில் யாருக்கேனும் தீங்கு செய்திடில் பிற்பகுதியில் தனக்கே தீங்கு நேரிடும்.

மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் 75

மூத்தோர் சொல் - அறிவும் அனுபவமும் முதிர்ந்தோர் கூறக் கூடிய; வார்த்தை அமிர்தம் - அனுபவ மொழிகள் அமிர்தத்தைப் போன்றவை ஆகும்.
அறிவு சான்ற பெரியோர்கள் சொல்லும் அனுபவ மொழிகள் அமிர்தம் போன்றவை ஆகும்.

மெத்தையில் படுத்தல் நித்திரைக்கு அழகு 76

நித்திரைக்கு அழகு - நல்ல தூக்கத்திற்குச் சிறப்பானது; மெத்தையில் படுத்தல் - இலவம் பஞ்சினாலான மெத்தையில் படுத்து உறங்குதல் மெத்தையில் படுத்துத் தூங்கினால் நல்ல தூக்கம் வரும்.

மேழிச் செல்வம் கோழை படாது 77

மேழிச் செல்வம் - உழுது பயிரிட்டுப் பெற்ற வேளாண்மைச் செல்வம்; கோழை படாது - ஒருபோதும் பழுது ஆகாது.
வேளாண்மையில் வந்த செல்வம் பழுதற்றதாகும்.

மைவிழியார் தம் மனை அகன்று ஒழுகு 78

மைவிழியார் தம் - மை தீட்டிய கண்ணால் உருட்டி மயக்கும் பரத்தையரின்; மனை அகன்று ஒழுகு - வீட்டின் அருகில் கூட செல்லாமல் இருப்பாயாக.
கண்ணால் மயக்கும் பொதுமகளிர் வீட்டின் பக்கத்திலே கூட போகாமல் இருப்பது நன்மையாகும்.

மொழிவது மறுக்கின் அழிவது கருமம் 79

மொழிவது - அனுபவம் உள்ளோர் கூறுவதை; மறுக்கின் - கேட்காமல் நடந்தால்; அழிவது கருமம் - காரியம் கெட்டுப் போகும்.
அனுபவம் உள்ளவர் கூறுவதை மீறிச் செய்யும் காரியம் கெட்டுப் போகும்.

மோனம் என்பது ஞான வரம்பு 80

மோனம் என்பது - பேசாமல் இருப்பது என்பதானது; ஞான வரம்பு - மெய்ஞானத்தின் எல்லையை அடைந்ததாகும்.
மௌன நிலை (பேசாமல் இருந்து தியானித்தல் ஞானத்தில் தெளிவைக் கூறும்)

வளவன் ஆயினும் அளவு அறிந்து அழித்து உண் 81

வளவன் ஆயினும் - சோழ மன்னனைப் போல் செல்வச் சிறப்புடையவனாக இருந்த போதிலும்; அளவு அறிந்து - தனக்கு வருகின்ற வருமானத்தை அறிந்து; அழித்து உண் - செலவிட்டு உண்.
சோழ மன்னனுக்கு இணையான செல்வம் இருப்பினும் வரவுக்கு ஏற்ற செலவு செய்தல் வேண்டும்.

வானம் சுருங்கில் தானம் சுருங்கும் 82

வானம் சுருங்கில் - மழை குறைவாகப் பெய்யுமானால்; தானம் சுருங்கும் - தருமத்திற்கான நன்கொடைகள் யாவும் சுருங்கிவிடும்.
மழையின் அளவு குறைந்து விடுமேயானால் தானங்களும் குறைவாகிவிடும்.

விருந்து இல்லோர்க்கு இல்லை பொருந்திய ஒழுக்கம் 83

விருந்து இல்லோர்க்கு - விருந்தினரை உபசரிக்கும் பண்பு இல்லாதவர்க்கு; இல்லை பொருந்திய ஒழுக்கம் - இல்லறத்தின் சிறந்த தர்மம் இல்லை.

விருந்தினரை உபசரிக்கும் பண்பு இல்லாதவர்களிடம் இல்லற தர்மம் நிறைவு பெறாது.

வீரன் கேண்மை கூர் அம்பாகும் 84

வீரன் கேண்மை - வீரனுடைய நட்பானது; கூர் அம்பாகும் - கூர்மையான அம்பு போல் உதவக் கூடியது.

வீரனுடைய நட்பானது தன் கையிலே கூர்மையான அம்பு இருப்பதைப் போலாகும்.

உரவோர் என்கை இரவாது இருத்தல் 85

உரவோர் என்கை - அறிஞர் என்று கூறப்படுவோர்; இரவாது இருத்தல் - பிறரிடம் போய் யாசிக்கக் கூடாது.

அறிஞர் எனக் கூறப்படுவோர் எவரிடமும் சென்று யாசியாமல் இருப்பதே சிறப்பு.

ஊக்கம் உடைமை ஆக்கத்துக்கு அழகு 86

ஊக்கம் உடைமை - உள்ளக் கிளர்ச்சியோடு இருத்தல்; ஆக்கத்திற்கு அழகு - செல்வச் செழிப்புக்கு சிறப்பாகும்.

மனம் தளராமல் உறுதியோடு இருப்பது செழிப்புக்கு உயர்வாகும்.

வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை 87

வெள்ளைக்கு - தூய்மையான உள்ளத்தவர்க்கு; கள்ளச் சிந்தை - வஞ்சக நினைப்பு; இல்லை - ஏற்படாது.

தூய்மையான மனத்தவர்க்கு வஞ்சக நினைப்பு எழாது.

வேந்தன் சீரின் ஆம் துணை இல்லை 88

வேந்தன் சீரின் - மன்னனுடைய கோபத்துக்கு ஆளானால்; ஆம் துணை - அவருக்குத் துணையாக வரக் கூடியவர்; இல்லை - ஒருவரும் இருக்கமாட்டார்.

மன்னனின் கோபத்துக்கு ஆளானவனுக்கு யாருமே துணையாக வரமாட்டார்.

வைகல் தோறும் தெய்வம் தொழு 89

வைகல் தோறும் - நாள்தோறும்; தெய்வம் தொழு - கடவுளை வணங்குதல் வேண்டும்.

நாள்தோறும் கடவுளை வணங்குதல் நன்மை தரும்.

ஒத்த இடத்து நித்திரை கொள் 90

ஒத்த இடத்து - சமமான தளத்தில்; நித்திரை கொள் - படுத்துத் தூங்குவாயாக.

சமமான தரையில் படுத்துத் தூங்குவது நல்லது.

ஓதாதவர்க்கு இல்லை உணர்வோடு ஒழுக்கம் 91

ஓதாதவர்க்கு - அறநூல்களைப் படிக்காதவர்களுக்கு; உணர்வோடு - தெளிவோடு கூடிய; ஒழுக்கம் - பண்பு; இல்லை - இருக்காது.

நீதி நூல்களைப் படிக்காதவர்களுக்கு நல்லொழுக்க அறிவு இருக்காது.

[கொன்றை வேந்தன் மூலமும் உரையும் முற்றும்]

உலக நீதி

காப்பு

உலக நீதி புராணத்தை உரைக்கவே
கலைகளாய் வரும் கரிமுகன் காப்பு

உலக நீதி என்னும் புராதனமான கருத்துக்களைக் கூறுவதற்கு கலை நூல்களை ஆராய்ந்து அறிந்து கொள்ள உதவும் விநாயகக் கடவுள் காப்பு ஆவார்.

ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
ஒருவரையும் பொல்லாங்கு சொல்லவேண்டாம்
மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்
வஞ்சனைகள் செய்வாரோடு இணங்க வேண்டாம்
போகாத இடத்தினிலே போக வேண்டாம்
போகவிட்டுப் புறம் சொல்லித் திரிய வேண்டாம்
வாகாரும் குறவருடை வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 1

கல்வி பயிலாமல் ஒரு நாளும் இருக்கக் கூடாது; எவர் மீதும் அவதூறு சொல்லக் கூடாது; தாயை ஒரு நாளும் மறக்கக் கூடாது; வஞ்சகர்களோடு தொடர்பு கொள்ளக் கூடாது; போகத் தகாத இடத்துக்குப் போகக் கூடாது; இருக்கும் பொழுது புகழ்ந்து கூறி, இல்லாத போது குறை கூறக்கூடாது; வலிமை மிக்க குறவர் குடியிலே பிறந்த வள்ளி நாயகியின் மணாளன் மயில் வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!

நெஞ்சாரப் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்
நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்
நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்
நல் இணக்கம் இல்லாரோடு இணங்க வேண்டாம்
அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்
அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
மஞ்சாரும் குறவருடைய வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே ௨

மனம் தெரிந்தும் வீணாகப் பொய் கூறக் கூடாது; நிலையற்றது எனத் தெரிந்தும் அதை நிலைநிறுத்த முயலக் கூடாது; நஞ்சுடைய பாம்புடன் ஒருபோதும் பழகக் கூடாது; நற்பண்பு இல்லாதவரோடு தொடர்பு கொள்ளக் கூடாது; அச்சமின்றி தன்னந்தனியான வழிப்பயணம் போகக் கூடாது; தன்னிடம் வந்தவரை ஒருபோதும் கெடுக்கக் கூடாது; மலை நாட்டினரின் மகளாகிய வள்ளி நாயகியின் மணாளன் மயில் வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!

மனம்போன போக்கு எல்லாம் போக வேண்டாம்
மாற்றானை உறவு என்று நம்ப வேண்டாம்
தனம் தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்
தருமத்தை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்
சினம் தேடி அல்லலையும் தேட வேண்டாம்
சினந்து இருந்தார் வாசல் வழிச் சேர வேண்டாம்
வனம் தேடும் குறவருடை வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 3

மனம் போனவாறு காரியத்தை செய்யக் கூடாது; பகைவனை உறவினன் என்று நம்பக் கூடாது; செல்வத்தைத் தேடி உண்ணாமல் பத்திரப்படுத்தி வைக்கக் கூடாது; தர்மம் செய்வதை ஒருபோதும் கெடுக்கக் கூடாது; கோபத்தை உண்டாக்கி; அதனால் அல்லல்படக் கூடாது; முன் கோபக்காரர் வீட்டின் பக்கமாகக் கூடப் போகக் கூடாது; காட்டில் மிருகங்களைத் தேடி அலையும் குறவர் குலத்தினரின் மகளாகிய வள்ளி நாயகியின் மணாளன் மயில்வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!

குற்றம் ஒன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்
கொலை களவு செய்வாரோடு இணங்க வேண்டாம்
கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்
கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்
கொற்றவனோடு எதிர்மாறு பேச வேண்டாம்
கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்
மற்று நிகர் இல்லாத வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 4

குறையைப் பெரிதாகச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது; கொலை, திருட்டுச் செய்பவர்களோடு தொடர்பு கொள்ளக் கூடாது; அறிவாளிகளை ஒரு போதும் இகழ்ச்சியாகப் பேசக் கூடாது; கற்புக்கரசியான பெண்களிடம் ஆசை கொள்ளக் கூடாது; ஆட்சி செலுத்துவோரோடு எதிர்வாதம் செய்யக் கூடாது; கோயில் இல்லாத ஊரில் வசிக்கக் கூடாது; இணையற்ற வள்ளிநாயகியின் மணாளன் மயில்வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!

வாழாமல் பெண்ணை வைத்துத் திரிய வேண்டாம்
மனையாளைக் குற்றம் ஒன்றும் சொல்ல வேண்டாம்
வீழாத படுகுழியில் வீழ வேண்டாம்
வெஞ்சமரில் புறம் கொடுத்து மீள வேண்டாம்
தாழ்வான குலத்துடனே சேர வேண்டாம்
தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
வாழ்வாரும் குறவருடைய வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 5

மனைவியோடு வாழாமல்; அவள் வீட்டிலே இருக்கும் போது மற்ற பெண்களை விரும்பி அலையக் கூடாது; மனைவிமீது குற்றம் கூறிக் கொண்டிருக்கக் கூடாது; ஆபத்தை உண்டாக்கக் கூடிய படுகுழியில் விழக் கூடாது; கடுமையான சண்டையில் புறமுதுகு காட்டி ஓடிவரக் கூடாது; தாழ்ந்த குணத்தாருடன் சேரக்கூடாது; எளியவர்களைக் குறை கூறக் கூடாது; வாழ்வு மிக்க குறவர் குலத்தினரின் வள்ளிநாயகியின் மணாளன் மயில் வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!

வார்த்தை சொல்வார் வாய் பார்த்துத் திரிய வேண்டாம்
மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
மூத்தோர் சொல் வார்த்தைகளை மறக்க வேண்டாம்
முன்கோபக் காரரோடு இணங்க வேண்டாம்
வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்
வழிபறித்துத் திரிவாரோடு இணங்க வேண்டாம்
சேர்த்த புகழாளன் ஒரு வள்ளி பங்கன்
திருக்கை வேலாயுதனைச் செப்பாய் நெஞ்சே ௬

வம்பு பேசுவோர் வாயைப் பார்த்து அவர் பின்னே அலையக் கூடாது; தன்னை மதிக்காதவர் வீட்டின் வாசல் படியில் அடி எடுத்து வைக்கக் கூடாது; பெரியவர்கள் சொல்லும் புத்தி மதிகளை மறந்து விடக்கூடாது; முன் கோபக்காரர்களோடு சேரக்கூடாது. எழுத்து அறிவித்த உபாத்தியாருக்குச் சேரவேண்டிய சம்பளத்தைக் கொடுக்காமல் வைத்துக் கொள்ளக் கூடாது; வழிப்பறித் திருடர்களோடு சேரக் கூடாது புகழ்வாய்ந்த வள்ளி நாயகியின் மணாளன் வேலாயுதனை வாழ்த்துவாய் மனமே!

கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்
கணக்கு அழிவை ஒருநாளும் பேச வேண்டாம்
பொருவார் தம் போர்க்களத்தில் போக வேண்டாம்
பொது நிலத்தில் ஒருநாளும் இருக்க வேண்டாம்
இருதாரம் ஒருநாளும் தேட வேண்டாம்
எளியோரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம்
குருகாரும் புனம் காக்கும் ஏழை பங்கன்
குமரவேள் பாதத்தைக் கூறாய் நெஞ்சே 7

சிந்தித்துப் பார்க்காமல் எதையும் செய்யக்கூடாது; பொய்க் கணக்குகளை எழுதக் கூடாது; போர் நிகழக் கூடிய போர்க்களத்துக்குப் போகக் கூடாது; புறம்போக்கு நிலத்திலே வசிக்கக் கூடாது; முதல் மனைவி இருக்க மறு தாரம் செய்து கொள்ளக் கூடாது; ஏழ்மையானவர்களிடம் பகை கொள்ளக் கூடாது; தினைப் புனம் காக்கும் ஏழைபங்காளன் குமரவேளின் திருவடிகளை வாழ்த்துவாய் மனமே!

சேராத இடம் தனிலே சேர வேண்டாம்
செய்த நன்றி ஒரு நாளும் மறக்க வேண்டாம்
ஊரோடும் குண்டுணியாய்த் திரிய வேண்டாம்
உற்றாரை உதாசினங்கள் சொல்ல வேண்டாம்
பேரான காரியத்தைத் தவிர்க்க வேண்டாம்
பிணைபட்டுத் துணை போகித் திரிய வேண்டாம்
வாராரும் குறவருடைய வள்ளிபங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 8

சேரத் தகுதி இல்லாதவர்களோடு சேரக் கூடாது; தனக்கு உதவி புரிந்தவரை ஒருபோதும் மறக்கக் கூடாது; கோள் சொல்லிக் கொண்டு ஊரில் அலையக் கூடாது; உறவினர்களை அவமரி யாதையாகப் பேசக் கூடாது; பெருமை மிக்க காரியங்களைச் செய்யாமல் விட்டுவிடக் கூடாது; ஒருவரோடு சம்மதித்து அவருக்குத் துணையாக அலையக் கூடாது; பெருமையுடைய குறவர் மகளாகிய வள்ளி நாயகியின் மணாளன் மயில் வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!

மண் நின்று மண் ஓரம் சொல்ல வேண்டாம்
மனம் சலித்துச் சிலிக்கிட்டுத் திரிய வேண்டாம்
கண் அழிவு செய்து துயர் காட்ட வேண்டாம்
காணாத வார்த்தையை கட்டுரைக்க வேண்டாம்
புண்படவே வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்
புறம் சொல்லித் திரிவாரோடு இணங்கவேண்டாம்
மண் அளந்தான் தங்கை உமை மைந்தன் எங்கோன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 9

நிலத் தகராறில் ஒருதலைப்பட்சமாகத் தீர்ப்பு அளிக்கக் கூடாது; மனம் சலித்து யாரிடமும் சச்சரவு செய்து அலையக் கூடாது; கண் கலங்கி துன்புறுவதைத் தெரியப்படுத்த முயலக் கூடாது; காணாததைக் கற்பனை செய்து கூறக் கூடாது; பிறர் மனம் நோகும்படி எதையும் கூறக் கூடாது; கோள் சொல்லி அலை பவரோடு சேரக்கூடாது; மகாவிஷ்ணுவின் சகோதரி உமாதேவி யாரின் அருமைக் குமாரன் - எங்கள் தலைவன் மயில்வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!

மறம் பேசித் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வாதாடி வழக்கு அழிவு சொல்ல வேண்டாம்
திறம் பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்
தெய்வத்தை ஒரு நாளும் மறக்க வேண்டாம்
இறந்தாலும் பொய் தன்னைச் சொல்ல வேண்டாம்
ஏசலிட்ட உற்றாரை நத்த வேண்டாம்
குறம் பேசி வாழ்கின்ற வள்ளி பங்கன்
குமரவேள் நாமத்தைக் கூறாய் நெஞ்சே 10

வீரம் பேசி, வலுச் சண்டைக்கு அலைபவரோடு சேரக் கூடாது; வம்பு பேசி, பொய் வழக்குச் சொல்லக் கூடாது; சாமர்த்தியமாகப் பேசி, கலகம் செய்து அலையக் கூடாது; கடவுளை ஒருநாளும் மறந்து விடக் கூடாது; உயிர் போகும் நிலை உண்டானாலும் பொய் சொல்லவே கூடாது; தன்னை இகழ்ந்து கூறிய உறவினரிடம் உதவி கேட்டு நெருங்கக் கூடாது; குறிசொல்லும் குலத்தினரின் வள்ளிநாயகியின் மணாளன் குமரவேளின் நாமத்தை வாழ்த்துவாய் மனமே!

அஞ்சு பேர் கூலியைக் கைக்கொள்ள வேண்டாம்
அது ஏது இங்கு என்னில் சொல்லக் கேளாய்
தஞ்சமுடன் வண்ணான் நாவிதன் தன் கூலி
சகல கலை ஓதுவித்த வாத்தியார் கூலி
வஞ்சமற நஞ்சு அறுத்த மருத்துவச்சி கூலி
மகா நோவுதனைத் தீர்த்த மருத்துவன் கூலி
இன்சொல்லுடன் இவர் கூலி கொடாத பேரை
ஏதேது செய்வானோ எமன்றானே 11

அஞ்சு பேர் கூலியைக் கொடுக்காமல் வைத்துக் கொள்ளக் கூடாது; அது எது என்று கூறுகிறேன்; சலவைத் தொழிலாளியின் கூலி; சவரத் தொழிலாளியின் கூலி; கலைகளைப் போதித்த ஆசிரியரின் சம்பளம்; பிரசவம் பார்த்த மருத்துவச்சி கூலி; நோய்களைக் குணப்படுத்திய மருத்துவரின் கூலி; இவற்றை எல்லாம் கொடாமல் வைத்திருப்போரை எமன் என்ன பாடுபடுத்துவானோ!

கூறாக்கி ஒரு குடியைக் கெடுக்க வேண்டாம்
கொண்டைமேல் பூத்தேடி முடிக்க வேண்டாம்
தூறாக்கித் தலையிட்டுத் திரிய வேண்டாம்
துர்ச்சனராய் திரிவாரோடு இணங்க வேண்டாம்
வீறான தெய்வத்தை இகழ வேண்டாம்
வெற்றியுள்ள பெரியாரை வெறுக்க வேண்டாம்
மாறான குறவருடைய வள்ளி பங்கன்
மயிலேறும் பெருமாளை வாழ்த்தாய் நெஞ்சே 12

ஒற்றுமையோடு வாழும் ஒரு குடும்பத்தை இரண்டு ஆக்கி, கெடுக்கக் கூடாது; மலர்களைத் தலையிலே அணிந்து கொண்டையை உயரமாக்கிக் கொள்ளக் கூடாது; பிறர் மீது அவதூறு சொல்வதையே தொழிலாகக் கொண்டு அலையக் கூடாது; கொடுங்கோலர்களாய் அலைபவர்களோடு சேரக் கூடாது; சக்தியுடைய தெய்வத்தை இகழக் கூடாது; வெற்றியோடு வாழும் பெரியோர்களை வெறுத்துப் பேசக் கூடாது; பகைமிகுந்த குறவர் குலத்தினரின் வள்ளிநாயகியின் மணாளன் மயில்வாகனப் பெருமாளை வாழ்த்துவாய் மனமே!

ஆதரித்துப் பலவகையால் பொருள்கள் தேடி
அருந்தமிழால் ஆறுமுகனைப் பாட வேண்டி
ஓதுவித்த வாசகத்தால் உலகநாதன்
உண்மையாய்ப் பாடி வைத்த உலக நீதி
காதலித்துக் கற்றோரும் கேட்ட பேரும்
கருத்துடனே நாள்தோறும் களிப்பினோடு
போதமுற்று மிக வாழ்ந்து புகழும் தேடிப்
பூலோகம் உள்ள அளவும் வாழ்வார் தாமே 13

பலரை ஆதரித்து, பல வழிகளில் செல்வத்தைச் சேர்த்து உலக நாதன் என்னும் புலவனாகிய யான், அருமையான தமிழில் முருகப்பெருமானைப் பாட விரும்பி முருகப் பெருமானின் திருவருளால் 'உலக நீதி'யை உண்மையாகப் பாடி வைத்தேன்; இதை ஆவலோடு கற்றவரும் கேட்டவரும் களிப்போடு ஞானமும் புகழும் நல்வாழ்வும் பெற்று உலகம் உள்ளவரை வாழ்வார்களாக!

உலகநீதி மூலமும் கருத்துரையும் முற்றும்

வெற்றி வேற்கை

என்னும்

நறுந்தொகை

கடவுள் வாழ்த்து

பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புத மலர் தலைக்கு அணிவோமே

ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருளான விநாயகப் பெருமானின் பாத கமலங்களை வணங்குவோம்.

நூல் பயன்

வெற்றி வேற்கை வீர ராமன்
கொற்கையாளி குலசேகரன் புகல்
நற்றமிழ் தெரிந்த நறுந்தொகை தன்னால்
குற்றம் களைவோர் குறைவிலாதவரே

கொற்றை நகரத்துக்கு அதிபதியும், குலத்துக்கு மகுடாதிபதியுமான அதிவீர ராமபாண்டியன் கூறிய நறுந்தொகை என்னும் நல்ல நீதிகளை அறிந்து குற்றம் நீக்குவோர் ஒரு குறையும் இல்லாதவரே.

வாழிய நலனே! வாழிய நலனே!
எல்லோரும் நலமுடன் வாழ்க!

எல்லா நன்மைகளையும் பெற்று வாழ்க! எல்லோரும் நலமுடன் வாழ வேண்டும்.

நூல்

எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும் 1

எழுத்துக்களை - கல்வியை முதலில் கற்றுத் தந்தவர் தெய்வத் தன்மையானவர்.

கல்விக்கு அழகு கசடு அற மொழிதல் 2

கல்வி கற்றதற்குச் சிறப்பு, குற்றம் இல்லாமல் தெளிவாகப் பேசுதல் ஆகும்.

செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல் 3

பணக்காரர்களுக்குச் சிறப்பு, தங்கள் உறவினர் துன்புறும் போது தகுந்த உதவி அளித்து ஆதரிப்பது.

வேதியர்க்கு அழகு வேதமும் ஒழுக்கமும் 4

அந்தணர்களுக்குச் சிறப்பு; ஒழுக்க நெறியோடு இருந்து, வேதங்களைப் படிப்பது.

மன்னவர்க்கு அழகு செங்கோல் முறைமை 5

அரசர்க்குச் சிறப்பு, நீதி வழுவாமல் ஆட்சி புரிவது.

வைசியர்க்கு அழகு வளர் பொருள் ஈட்டல் 6

வியாபாரிக்குச் சிறப்பு, நேர்மையாகப் பொருள் சம்பாதிப்பது.

உழவர்க்கு அழகு இங்கு உழுது ஊண் விரும்பல் 7

வேளாண்மையாளர்களுக்குச் சிறப்பு உழுது பயிர் செய்து உண்பதை விரும்புவது.

மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல் 8

அமைச்சர்க்குச் சிறப்பு, வருங்கால நிகழ்ச்சியைப் பற்றி முன்னரே தெரிவிப்பது.

தந்திரிக்கு அழகு தறுகண் ஆண்மை 9

சேனாதிபதிக்குச் சிறப்பு, அஞ்சா நெஞ்சமும் வீரமும் ஆகும்.

உண்டிக்கு அழகு விருந்தோடு உண்டல் 10

உணவுக்குச் சிறப்பு, விருந்தாளிகளுடன் அமர்ந்து உண்பது.

பெண்டிர்க்கு அழகு எதிர் பேசாது இருத்தல் 11

பெண்களுக்குச் சிறப்பு, எதிர்த்துப் பேசாமல் இருப்பது.

குலமகட்கு அழகு தன் கொழுநனைப் பேணுதல் 12

குடும்பப் பெண்ணுக்குச் சிறப்பு, தன் கணவனைப் பாதுகாப்பது.

விலை மகட்கு அழகு தன் மேனி மினுக்குதல் 13

தாசிக்குச் சிறப்பு, தன் உடலை அலங்கரித்துக் கொள்வது.

அறிஞர்க்கு அழகு கற்று உணர்ந்து அடங்கல் 14

அறிவாளிக்குச் சிறப்பு கற்று அறிந்து, அடக்கமாக இருப்பது.

வறிஞர்க்கு அழகு வறுமையில் செம்மை 15

தரித்திர நிலையில் இருந்த போதிலும் அப்பொழுது நேர்மையோடு இருப்பது சிறப்பாகும்.

தேம்படு பனையின் திரள் பழுத்து ஒரு விதை
வானுற ஓங்கி வளம் பெற வளரினும்
ஒருவருக்கு இருக்க நிழல் ஆகாதே 16

பனைமரத்தின் சுவைமிக்க பெரிய பழத்தின் ஒரு விதையானது வானளாவி உயர்ந்து வளமாக வளர்ந்து இருந்தாலும் ஒருவர் தங்கி இருக்க நிழல் தராது.

தெள்ளிய ஆலின் சிறு பழத்து ஒரு விதை
தெண்ணீர் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர் புரவி ஆள்பெரும் படையொடு
மன்னர்க்கு இருக்க நிழல் ஆகும்மே 17

சிறிய மீனின் முட்டையைக் காட்டிலும் மிகச் சிறியதான ஆலமரத்து விதையானது முளைத்து பெரியமரம் ஆனபின், யானை, குதிரை, தேர், பெரிய காலாட்படை முதலானவற்றோடு அரசர் தங்கி இருக்க நிழல் தரும்.

பெரியோர் எல்லாம் பெரியரும் அல்லர் 18

உடல் அமைப்பிலும் உடல் அலங்காரத்திலும் பெரியோர் போலக் காட்சி அளிப்பவர் அனைவரும் உண்மையான பெரிய மனிதர்கள் அல்லர்.

சிறியோர் எல்லாம் சிறியரும் அல்லர் 19

சிறியவர் போல பார்வைக்குத் தோன்றினாலும் அவர்கள் எல்லோரும் உண்மையில் சிறிய மனிதர்கள் அல்லர்.

பெற்றோர் எல்லாம் பிள்ளைகள் அல்லர் 20

பெற்ற பிள்ளைகள் அனைவரும் நல்ல பெயர் எடுக்க மாட்டார்கள்.

உற்றோர் எல்லாம் உறவினர் அல்லர் 21

உற்றார் அனைவரும் உண்மையான உறவினராக இருக்க மாட்டார்கள்.

கொண்டோர் எல்லாம் பெண்டிரும் அல்லர் 22

மணம் செய்து கொண்ட மனைவியர் அனைவரும் மனம் இசைந்தவர்களாக இருக்கமாட்டார்கள்.

அடினும் ஆவின்பால் தன் சுவை குன்றாது 23

எவ்வளவு காய்ச்சிய போதிலும் பசுவின்பால் சுவை குறையாது.

சுடினும் செம் பொன் தன் ஒளி கெடாது 24

நெருப்பிலே போட்டுச் சுட்ட போதிலும் தங்கத்தின் ஒளி குறையாது.

அரைக்கினும் சந்தனம் தன் மணம் மாறாது 25

சந்தனக் கட்டையை எவ்வளவு அரைத்தாலும் அதன் மணம் குறையாது.

புகைக்கினும் கார் அகில் பொல்லாங்கு கமழாது 26

தீயில் இட்டு அகில் கட்டையை புகைத்தாலும் மணம் வீசுமே தவிர கெடுதல் இருக்காது.

கலக்கினும் தண் கடல் சேறு ஆகாது 27

சமுத்திரத்தை எவ்வளவு கலக்கினாலும் சேறு ஆகாமல் தெளிவாக இருக்கும்.

அடினும் பால் பெய்து கைப்பு
அறாது பேய்ச் சுரைக்காய் 28

பாலோடு கலந்து பேய்ச் சுரைக்காயைச் சமைத்தாலும் அதனுடைய கசப்பு மாறவே மாறாது.

ஊட்டினும் பல் விரை உள்ளி கமழாதே 29

வெள்ளைப் பூண்டுடன் எத்தனை வாசனைப் பொருளைக் கலந்தாலும் அது கமழாது.

பெருமையும் சிறுமையும் தான் தர வருமே 30

மதிப்பும் தாழ்வும் அவரவர் செயலின் காரணமாகவே வரும்.

சிறியோர் செய்த சிறு பிழை எல்லாம்
பெரியோர் ஆயின் பொறுப்பது கடனே 31

சிறுவர்கள் அறியாமல் செய்த தவறுகளை எல்லாம் பெரியவர்கள் பொறுத்துக் கொள்வது கடமை ஆகும்.

சிறியோர் பெரும் பிழை செய்தனராயின்
பெரியோர் அப்பிழை பொறுத்தலும் அரிது 32

சிறுவர்கள் பெரிய தவறுகளைச் செய்தார்களானால் பெரியவர்கள் அதைப் பொறுத்துக் கொள்வது அரிது.

நூறு ஆண்டு பழகினும் மூர்க்கர் கேண்மை
நீர்க்குள் பாசிபோல் வேர் கொள்ளாதே 33

முரடர்களோடு நூறு ஆண்டுகள் பழகினாலும், அந்தப் பழக்கமானது நீரிலுள்ள பாசிபோல் காணப்படுமே ஒழிய,. வேர் கொள்ளாது.

ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை
இரு நிலம் பிளக்க வேர்வீழ்க்கும்மே 34

பெரியோர்களுடன் ஒருநாள் பழகிய போதிலும் அந்தப் பழக்கமானது பூமிக்குள் வேர் விடுவது போன்றது ஆகும்.

கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே 35

கல்வி பயில்வது நன்மையே தரும்; பிச்சை எடுக்க நேரிட்டாலும் கல்வி கற்பது நன்மையே அளிக்கும்.

கல்லா ஒருவன் குல நலம் பேசுதல்
நெல்லினுள் பிறந்த பதர் ஆகும்மே 36

கல்வி இல்லாத ஒருவன், தன் குடும்பப் பெருமையைப் பேசுவது நெல்லில் காணப்படும் பதர் போல ஆகும்.

நாற்பால் குலத்தின் மேற்பால் ஒருவன்
கற்றிலன் ஆயின் கீழ் இருப்பவனே 37

நான்கு வகை குலங்களிலே, மேற்குலத்தில் பிறந்தவன் ஒருவன் கல்வி இல்லாதவன் ஆயின் அவன் தாழ்ந்தவனே.

எக்குடி பிறப்பினும் யாவரே ஆயினும்
அக்குடியில் கற்றோரை மேல் வருக என்பர் 38

யாரானாலும், எந்தக் குலத்தில் பிறந்திருந்த போதிலும் கற்றவரை எல்லோரும் மதிப்போடு வரவேற்பார்கள்.

அறிவுடை ஒருவனை அரசும் விரும்பும் 39

அறிவுடையோரை அரசும் விரும்பும் மதிக்கும்.

அச்சம் உள் அடக்கி அறிவு அகத்து இல்லாக்
கொச்சை மக்களைப் பெறுதலின் அக்குடி
எச்சம் அற்று ஏமாந்து இருக்கை நன்று 40

பயந்த அறிவு இல்லாத உபயோகமற்ற மக்களைப் பெறுவதை விட அந்தக் குடும்பத்தினர் பிள்ளைப்பேறு இல்லாமலே இன்பமாக வாழ்வது நன்மையாகும்.

யானைக்கு இல்லை தானமும் தருமமும் 41

(கை இருந்தால் போதுமா!) யானையின் தும்பிக்கை மிகவும் நீளம்; ஆனால் அது தான தருமம் செய்வது இல்லை.

பூனைக்கு இல்லை தவமும் தயையும் 42

பூனையானது கண்களை மூடிக் கொண்டிருந்த போதிலும் தவமும் தயையும் அதற்கு இல்லை.

ஞானிக்கு இல்லை இன்பமும் துன்பமும் 43

ஞானவான்களுக்கு இன்பமும் துன்பமும் இல்லை.

சிதலைக்கு இல்லை செல்வமும் செருக்கும் 44

பணக்காரர், கர்வம், உள்ளவர் என்று பாராமல் எல்லோருடைய பொருளையும் கரையான் அரித்து விடுகிறது.

முதலைக்கு இல்லை நீத்தும் நிலையும் 45

தண்ணீரில் வாழும் முதலைக்கு ஆழமான இடம், நிலை கொள்ளும் இடம் என்பது இல்லை.

அச்சமும் நாணமும் அறிவு இல்லோர்க்கு இல்லை 46

அறிவு இல்லாதவர்கள் தீமையைக் கண்டு பயப்படமாட்டார்கள். பழியைக் கண்டு நாணமாட்டார்கள்.

நாளும் கிழமையும் நலிந்தோர்க்கு இல்லை 47

நோயினால் வாடுவோர்க்கு நல்ல நாள், கெட்ட நாள் என்பது இல்லை.

கேளும் கிளையும் கெட்டோர்க்கு இல்லை 48

கெட்டுப் போனவர்களுக்கு நண்பர்களோ சுற்றத்தார்களோ இல்லை.

உடைமையும் வறுமையும் ஒரு வழி நில்லா 49

செல்வமும் வறுமையும் ஒரு இடத்திலே நிற்பது இல்லை.

குடை நிழல் இருந்து குஞ்சரம் ஊர்ந்தோர்
நடைமெலிந்து ஓர் ஊர் நண்ணினும் நண்ணுவர் 50

யானைமீது குடை நிழலில் அமர்ந்து, பவனி வந்த மன்னரும்கூட வறுமையால் வாகனம் இன்றி நடந்து, மெலிந்து, வேறு ஊர் செல்லவும் கூடும்.

சிறப்பும் செல்வமும் பெருமையும் உடையோர்
அறக் கூழ் சாலை அடையினும் அடைவர் 51

சீர், சிறப்பு, செல்வம், பெருமையோடு வாழ்ந்தவர்கள் வறுமை யால் அன்ன சத்திரத்துக்குப் போகவும் கூடும்.

அறத்திடு பிச்சை கூவி இரப்போர்
அரசோடு இருந்து அரசாளினும் ஆளுவர் 52

தர்மம் கேட்டு, வீடு வீடாகப் பிச்சை எடுத்தவர், அரசுப் பதவி கிடைத்து ஆட்சி புரியவும் கூடும்.

குன்று அத்தனை இரு நிதியைப் படைத்தோர்
அன்றைப் பகலே அழியினும் அழிவர் 53

குன்று போல பொன்னும் மணியும் உள்ளோர் ஒரே நாளில் அனைத்தும் அழிந்து வறியவர் ஆகவும் கூடும்.

ஏழுநிலை மாடம் கால் சாய்ந்து உக்கு
கழுதை மேய் பாழ் ஆயினும் ஆகும் 54

ஏழு அடுக்கு மாளிகை சாய்ந்து வீழ்ந்து, கழுதை மேயும் பாழ் நிலமாகவும் கூடும்.

பெற்றமும் கழுதையும் மேய்ந்த அப்பாழ்
பொற்றொடி மகளிரும் மைந்தரும் செறிந்த
நெற்பொலி நெடு நகர் ஆயினும் ஆகும் 55

எருமையும் கழுதையும் மேய்ந்த பாழ் நிலத்திலே பொன் வளை பூண்ட பெண்களும் ஆண்களும் கூடி, நெல் குவியும் பெரிய தோர் நகரமானாலும் ஆகலாம்.

மண அணி அணிந்த மகளிர் ஆங்கே
பிண அணி அணிந்து தம் கொழுநரைக் தழீஇ
உடுத்த ஆடை கோடியாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர் 56

மணக்கோலம் பூண்ட பெண் அங்கே விதவைக் கோலம் கொண்டு தன் கணவரைத் தழுவி, மணநாளில் உடுத்திய புடவையோடு கூந்தலை விரித்து அழுது புலம்பவும் கூடும்.

இல்லோர் இரப்பதும் இயல்பே இயல்பே 57

இல்லாதவர் யாசிப்பதும் இயல்புதான்.

இரந்தோர்க்கு ஈவதும் உடையோர் கடனே 58

வசதி உடையோர் யாசிப்பவர்க்கு கொடுப்பதும் கடமையே

நல்ல ஞாலமும் வானமும் பெறினும்
எல்லாம் இல்லை இல் இல்லோர்க்கே 59

நல்ல உலகையும் வானத்தையும் பெற்றிருப்பவர் ஆனாலும் மனைவி இல்லையானால் அவருக்கு ஒரு சுகமும் இல்லை.

தறுகண் யானை தான் பெரிது ஆயினும்
சிறுகண் மூங்கில் கோலுக்கு அஞ்சுமே 60

வீரம் மிக்க யானை பெரிதாக இருந்தாலும் சிறு கணுக்களுடைய மூங்கில் கோலுக்குப் பயப்படும்.

குன்றுடை நெடும் காடு ஊடே வாழினும்
புன் தலைப் புல்வாய் புலிக்கு அஞ்சுமே 61

மலை சூழ்ந்த நீண்ட காட்டினுள் சிறிய தலை உள்ள மான் வாழ்ந்த போதிலும் புலிக்கு அஞ்சும்.

ஆரையாம் பள்ளத்து ஊடே வாழினும்
தேரை பாம்புக்கு மிக அஞ்சுமே 62

ஆரைப் பூண்டுகள் படர்ந்த பள்ளத்தில் தேரை வாழ்ந்தாலும் பாம்புக்கு ரொம்பவும் பயப்படும்.

கொடுங்கொல் மன்னர் வாழும் நாட்டில்
கடும் புலி வாழும் காடு நன்றே 63

கொடுமையான ஆட்சி புரியும் மன்னனின் நாட்டில் வாழ்வதைவிட கடும் புலி வாழும் காடு நன்மை ஆகும்.

சான்றோர் இல்லாத் தொல்பதி இருத்தலின்
தேன் தேர் குறவர் தேயம் நன்றே 64

அறிவு மிக்க பெரியோர்கள் இல்லாத தொன்மையான ஊரில் இருப்பதை விட தேனைத்தேடி அலையும் குறவரின் காட்டில் வாழ்வது நன்மையே.

காலையும் மாலையும் நான் மறை ஓதா
அந்தணர் என்போர் அனைவரும் பதரே 65

காலையிலும் மாலையிலும் வேதம் ஓதாத அந்தணர் என்பவர் அனைவரும் பதர் போன்றவர்களே.

குடி அலைத்து இரந்து வெங்கோலோடு நின்ற
முடியுடை இறைவனாம் மூர்க்கனும் பதரே 66

மக்களை கொடுமைப்படுத்தி, வரிவசூலித்துக் கொடுங்கோல் செலுத்தும் மூர்க்கனான மன்னனும் பதரே.

முதல் உள பண்டம் கொண்டு வாணிபம் செய்து
அதன் பயன் உண்ணா வணிகரும் பதரே 67

இருக்கும் முதலைக் கொண்டு வியாபாரம் செய்து, அதில் வருகின்ற லாபத்தைக் கொண்டு உண்ணாத வியாபாரியும் பதர் போன்றவரே

வித்தும் ஏரும் உளவா இருப்ப
எய்த்து அங்கு இருக்கும் ஏழையும் பதரே 68

விதை நெல்லும் ஏரும் கைவசம் இருந்தும் உழுது பயிரிடாமல் சோம்பியிருக்கும் ஏழையும் பதர் போன்றவனே.

தன் மனையாளைத் தாய் மனைக்கு அகற்றிப்
பின்பு அவள் பாராப் பேதையும் பதரே 69

தன்னுடைய மனைவியைத் தாய் வீட்டுக்கு அனுப்பி, பிறகு அவளைத் திரும்பியே பாராத அறிவற்றவனும் பதரே.

தன் மனையாளைத் தன் மனை இருத்திப்
பிறர் மனைக்கு ஏகும் பேதையும் பதரே 70

தன்னுடைய மனைவியை தனியே வீட்டில் இருக்கச் செய்து பிறருடைய வீட்டுக்குச் செல்லும் அறிவில்லாதவனும் பதரே.

தன் ஆயுதமும் தன் கையில் பொருளும்
பிறன் கையில் கொடுக்கும் பேதையும் பதரே 71

தொழில் செய்வதற்கான கருவிகளையும் கையிலுள்ள பொருளையும் பிறரிடம் கொடுக்கும் அறிவற்றவனும் பதரே.

வாய் பறையாகவும் நாக்கு அடிப்பாகவும்
சாற்றுவது ஒன்றைப் போற்றிக் கேண்மின் 72

வாய்தம்பட்டம், நாக்கு அதை அடிக்கும் கோல்; இவ்வாறு பெரியோர் முரசு கொட்டி முழங்கும் அறிவுரைகளைப் போற்றிக் கேட்பீர்களாக!

பொய்யுடை ஒருவன் சொல் வன்மையினால்
மெய் போலும்மே மெய் போலும்மே 73

பொய் சொல்லுபவன் சாமர்த்தியத்தால் அவன் சொல்லக் கூடிய பொய்யானது மற்றவர்களுக்கு உண்மை என எண்ணத் தோன்றும்.

மெய்யுடை ஒருவன் சொல்ல மாட்டாமையால்
பொய் போலும்மே பொய் போலும்மே 74

உண்மை பேசக்கூடியவன் ஒருவன் திறமையாகச் சொல்லத் தெரியாததால் அவன் சொல்லுவதை பொய் என எண்ணத் தோன்றும்.

இருவர் தம் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையார் ஆயின்
மனுமுறை நெறியின் வழக்கு இழந்தவர் தம்
மனமுற மறுகி நின்று அழுத கண்ணீர்
முறை யுறந் தேவர் மூவர் காக்கினும்
வழி வழி ஈர்வதோர் வாளாகும் மே 75

வழக்கு ஒன்றில், இரு தரப்பினர் சொல்லும் சொற்களை ஏழு முறை கேட்டு, இருவரும் பொருத்தமாகச் சொல்லாவிட்டால், உண்மையை ஆராய்ந்து, மனுநீதி முறைப்படி இருவரும் ஏற்றுக் கொள்ளுமாறு தீர்ப்பு அளிக்காவிடில், வழக்கிலே தோற்றவர், மனம் நொந்து, அழும் கண்ணீரானது வாளாக மாறி, நீதி வழங்கியவர் சந்ததியை வேர் அறுத்துவிடும். மும்மூர்த்திகள் வந்துதடுத்த போதிலும் இயலாது.

பழியா வருவது மொழியாது ஒழிவது **76**

பழி வந்து துன்புறுத்தும் வார்த்தைகளைச் சொல்ல வேண்டாம்.

சுழியா வரு புனல் இழியாது ஒழிவது **77**

சுழித்து வரும் வெள்ளத்திலே இறங்க வேண்டாம்.

துணையோடு அல்லது நெடு வழிபோகேல் **78**

தகுந்த துணை இல்லாமல் நெடுந்தூரம் பயணம் போக வேண்டாம்.

புணை மீது அல்லது நெடும் புனல் ஏகேல் **79**

தெப்பத்தின் துணை இல்லாமல் வெள்ளத்தில் இறங்க வேண்டாம்.

ஏழிலார் முலைவரி விழியார் தந்திரம்
இயலாதன கொடு முயல்பு ஆகாதே **80**

மயக்கும் கவர்ச்சிப் பெண்களின் தந்திரத்தினால் தகாத செயல்களில் இறங்கக் கூடாது.

வழியே ஏகுக வழியே மீளுக **81**

வழியோடு போக வேண்டும்; வழியோடு திரும்ப வேண்டும்.

இவை காண் உலகிற்கு இயலாமாறே **82**

உலகில் நடந்து கொள்வதற்கு இவையே முறையாகும்.

[வெற்றி வேற்கை மூலமும் உரையும் முற்றும்]

மூதுரை

கடவுள் வாழ்த்து

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக்கு உண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

வாக்கு உண்டாம் - சொல்வளம் உண்டாகும்: நல்ல மனம் உண்டாம்: நல்ல சிந்தனை உண்டாகும்: மாமலராள் - பெருமை மிக்க தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளின்: நோக்கு உண்டாம் - அருள் பார்வை உண்டாகும்: மேனி நுடங்காது - உடலை நோய் துன்புறுத்தாது: துப்பு ஆர் - பவளம் போல் சிவந்த: திருமேனி - உடலும்: தும்பிக்கையான் - துதிக்கை உடைய விநாயகக் கடவுளின்: பாதம் - திருவடிகளை: பூக்கொண்டு - மலர்கொண்டு: தப்பாமல் - நாள் தோறும்: சார்வார் தமக்கு - பூஜை செய்வோருக்கு.

தினந்தோறும் மலர் கொண்டு, விநாயகப் பெருமான் திருவடிகளைத் தொழுவோருக்கு, சொல்வளம் உண்டாகும். திருமகள் அருள் பார்வை கிடைக்கும், உடலை நோய் வருத்தாது.

நூல்

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந் நன்றி
'என்று தருங் கொல்?' என வேண்டா - நின்று
தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால் 1

நின்று - நிலைபெற்று: தளரா - சோர்வு அடையாமல்: வளர் - வளர்ச்சியுற்ற: தெங்கு - தென்னைமரம்: தாள் உண்ட நீரை - அடியில் வேர் மூலம் குடித்த தண்ணீரை: தலையாலே - தலையிலே காய்க்கும் இளநீராக: தான் தருதலால் - அது கொடுப்பது போல்: ஒருவர்க்கு - நல்லவர் ஒருவருக்கு: நன்றி செய்தக்கால் -

நன்மை செய்தால்: அந்நன்றி - அந்த உதவிக்கு: என்று தருங் கொல் - அவர் எப்பொழுது பதிலுக்கு உதவி புரிவாரோ: என வேண்டா - என்று நினைக்க வேண்டியதில்லை.

தென்னை மரத்துக்கு அடியிலே நீர் பாய்ச்சுகிறோம், சுவையு டைய இளநீர் மேலே காய்க்கிறது. அதுபோல நற்குணமுள்ள ஒருவருக்கு நன்மை செய்தால் நமக்கு நன்மையே உண்டாகும். பதிலுக்கு உதவியை எதிர்பார்த்து எதையும் செய்ய வேண்டாம்.

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல் மேல் எழுத்துப் போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர் 2

நல்லார் ஒருவர்க்கு - நல்ல குணம் உடையவருக்கு; செய்த உபகாரம் - செய்த உதவி; கல்மேல் எழுத்துப் போல் - கல்லிலே செதுக்கிய எழுத்தைப்போல; காணுமே - நிலை யாகக் காணப்படும்; அல்லாத - நல்லவர் அல்லாத; ஈரம் இலா நெஞ்சத்தார்க்கு - இரக்கம் இல்லாத மனத்தவருக்கு; ஈந்த உபகாரம் - செய்த உதவியானது; நீர்மேல் எழுத்துக்கு - தண்ணீரிலே எழுதப்பட்ட எழுத்துக்கு; நேர் - சமமாகும்.

நல்லவருக்கு செய்த உதவி, கல்லிலே செதுக்கப்பட்டதுபோல் நிலையாக விளங்கும், இரக்கமற்றவருக்குச் செய்த உதவி யானது தண்ணீரிலே எழுதிய எழுத்தைப்போல் அப்பொழுதே அழிந்துவிடும்.

இன்னா இளமை வறுமை வந்து எய்தியக் கால்
இன்னா அளவில் இனியவும் - இன்னாத
நாளி அல்லா நாளி பூத்த நன் மலரும் போலுமே
ஆளி இல்லா மங்கைக்கு அழகு 3

இளமை - வாலிபத்தின்; வறுமை வந்து எய்தியக்கால் - தரித்திரம் உண்டாகுமானால்; இன்னா - மிகவும் துன்பமாகும்; இன்னா அளவில் - துன்பத்தை அளிக்கும் முதுமையில்; இனியவும்

- இன்பத்தைத் தரும் பொருள்களை அடைந்தால்; இன்னாத - அதுவும் இன்பத்தை அளிக்கும்; நாள் அல்லா நாள் - காலம் அல்லாத காலத்தில்; பூத்த நல்மலரும் - மலர்ந்த நல்ல மலரும்; ஆள் இல்லா மங்கைக்கு அழகு - கணவன் இல்லாத மங்கை பெற்றிருக்கும் அழகையும்; போலுமே - ஒப்பாகும்.

வாலிபத்தில் வறுமையும் முதுமையில் செல்வமும் உண்டானால் அதனால் துன்பமே விளையும்; இன்பத்தைக் காண இயலாது. தேவை இல்லாத போது மலரை யார் சூடிக்கொள்வர்; கணவனைப் பெற்றிராத மங்கை என்னதான் அழகோடு திகழ்ந்தாலும் அதனால் பயன் என்ன?

அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன் மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும் 4

பால் - பசுவின் பாலை; அட்டாலும் - காய்ச்சினாலும்; சுவையில் குன்றாது - ருசியில் குறையாது; சங்கு - சங்கை; சுட்டாலும் - சுட்டு நீறாக்கிலும்; வெண்மை தரும் - வெண்மையான நிறமாக-வே இருக்கும்; மேன்மக்கள் - பண்புடைய மேலோர்; கெட்டாலும் - வறுமையுற்ற போதிலும்; மேன்மக்களே - பண்புள்ள மேலோரா-கவே விளங்குவர்; நண்பு அல்லார் - நட்பின் பெருமை அறியாத கீழோர்; அளவளாய் நட்டாலும் - நெருங்கிப் பழகிய போதிலும்; நண்பு அல்லார் - நல்ல நண்பர் ஆகமாட்டார்.

பாலை எவ்வளவு காய்ச்சினாலும் அதன் சுவை குறையாது; சங்கைச் சுட்டாலும் அதன் நிறம் வெண்மையாகவே காணப்படும் பண்புடைய மேலோர்கள் வறுமையில் வாடிய போதிலும் தங்கள் தகுதியை இழக்க மாட்டார்கள். பண்பற்றவர்கள் நெருங்கிப் பழகினாலும் நல்ல நண்பர்களாக இருக்க மாட்டார்கள்.

அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த
உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா 5

தொடுத்த - கிளைகள் உடைய; உருவத்தால் நீண்ட - தோற்றத்தில் உயரமான; உயர் மரங்கள் எல்லாம் - நீண்ட உயர்ந்த மரங்கள் அனைத்தும்; பருவத்தால் அன்றி - தகுந்த பருவகாலத்தால் அல்லாமல்; பழா - பழம்தர மாட்டா; அடுத்து முயன்றாலும் - அடிக்கடி முயற்சி செய்தாலும்; ஆகும் நாள் அன்றி - கைகூடும் காலத்தில் அல்லாமல்; எடுத்த கருமங்கள் - மேற்கொண்ட காரியங்கள்; ஆகா - கைகூடா.

நீண்ட உயர்ந்த மரங்கள்; ஆனாலும் தகுந்த பருவகாலத்திலேதான் பழங்களை அளிக்கும்; என்னதான் அடிக்கடி முயன்ற போதிலும் மேற்கொண்ட காரியங்கள் ஆகும் காலத்திலேதான் கைகூடும்.

உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தம்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ? - கல்தூண்
பிளந்து இறுவது அல்லால் பெரும் பாரம் தாங்கின்
தளர்ந்து விளையுமோ தான் 6

கல் தூண் - கருங்கல் தூண்; பெரும் பாரம் - பெரிய பளுவை; தாங்கின் - தாங்குமானால்; பிளந்து இறுவது அல்லால் - முறிந்து விடுவது அல்லால்; தளர்ந்து வளையுமோ - நெகிழ்ந்து வளையுமோ (வளையாது; அதுபோல்) உற்ற இடத்தில் - அவ மானம் உண்டாகும் இடத்தில்; உயிர் வழங்கும் தன்மையோர் - உயிரை விடக் கூடிய குணம் உடையோர்; பற்றலரை - விரோதி-களை; கண்டால் - பார்த்தால்; பணிவரோ - வணங்குவரோ?

கருங்கல் தூணான போதிலும் அதிகமான பாரத்தைச் சுமத்தினால் அது முறிந்து உடைவதுபோல, மானம் உள்ளோர், விரோதிகளைக் கண்டு பயந்து வணங்காமல் உயிரையே விட்டு விடக்கூடிய இயல்புடையவர்கள் ஆவார்கள்.

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆம்பல்; தான் கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு - மேலைத்
தவத்து அளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்து அளவே ஆகும் குணம் 7

நீர் ஆம்பல் - தண்ணீரில் உள்ள அல்லி; நீர் அளவே ஆகுமாம் - தண்ணீரின் உயரத்திற்கு ஏற்ப இருக்கும்; நுண் அறிவு - கூர்மையான அறிவு; தான் கற்ற - தான் பயின்ற; நூல் அளவே ஆகுமாம் - நூல்களின் தரத்துக்கு ஏற்ப இருக்கும்; தான் பெற்ற செல்வம் - தான் அடைந்த செல்வம்; மேலை - முன்பிறவியில் செய்த; தவத்து அளவே ஆகும் - நல்வினையை ஒட்டியே இருக்கும்; குணம் - குணமானது; குலத்து அளவே ஆகும் - தான் பிறந்த குடும்பத்தை அனுசரித்தே இருக்கும்.

அல்லி, தண்ணீரின் அளவுக்குத் தகுந்தபடி உயர்ந்து வளரும்; ஒருவர் படித்த நூல்களின் தரத்திற்கு ஏற்ப கல்வி அமையும்; செல்வமும் நல்வினையை ஒட்டியே இருக்கும்; குணமும் குடும்பத்தை அனுசரித்தே காணப்படும்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று 8

நல்லாரை - நல்ல குணம் உள்ளவர்களை; காண்பதுவும் - பார்ப்பதும்; நன்றே - நன்மையே; நல்லார் - நற்குணம் உள்ளவரது; நலம் மிக்க - நன்மை தரக்கூடிய; சொல் - சொல்லை; கேட்பதுவும் நன்றே - கேட்பதும் நன்மையே; நல்லார் - நற்குணம் உடையோருடைய; குணங்கள் - பண்புகளை; உரைப்பதுவும் - கூறுவதும்; நன்றே - நன்மையே; அவரோடு - அத்தகையவரோடு; இணங்கி இருப்பதுவும் - நெருங்கி இருப்பதும்; நன்றே - நன்மையே.

நல்ல குணம் உள்ளவரைக் காண்பது, அவர் கூறும் வழிகளைக் கேட்பது அவருடைய பண்புகளை எடுத்துச் சொல்வது, அத்தகையவரோடு இணைந்து இருப்பது எல்லாமே நன்மை தரும்.

தீயாரைக் காண்பதுவும் தீதே; திரு அற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே - தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது 9

தீயாரை - கெட்ட குணம் உள்ளவரை; காண்பதுவும் - பார்ப்பதும்; தீதே - தீமையே, தீயார் - கெட்டவர்களது; திரு அற்ற - பயன் இல்லாத; சொல் கேட்பதுவும் - சொல்லைக் கேட்பதும்; தீதே - தீமையே விளைவிக்கும்; தீயார் - கெட்டவர்களுடைய; குணங்கள் - தீய குணங்களை; உரைப்பதுவும் - பேசுவதும்; தீதே - கெடுதலே உண்டாக்கும்; அவரோடு - அத்தகையவரோடு; இணங்கி இருப்பதுவும் - கூடி இருப்பதும்; தீதே - தீமையே ஏற்படுத்தும்.

கெட்ட குணத்தவரைக் காண்பது, அவருடைய பயனற்ற மொழிகளைக் கேட்பது, அவருடைய் கெட்ட குணங்களைப் பேசுவது, அத்தகையவரோடு சேர்ந்து இருப்பது யாவுமே தீமையை உண்டாக்கும்.

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை 10

நெல்லுக்கு - நெல் பயிருக்கு; இறைத்த நீர் - இறைக்கப்பட்ட தண்ணீரானது; வாய்க்கால் வழி ஓடி - கால்வாய் வழியாகச் சென்று; ஆங்கு - அங்கேயுள்ள; புல்லுக்கும் பொசியும் - புல்களுக்கும் கசிந்து ஊறும்; தொல் உலகில் - பழமையான இவ்வுலகில்; நல்லார் ஒருவர் உளரேல் - நல்லவர் ஒருவர் இருப்பாரானால்; அவர் பொருட்டு - அவர் காரணமாக; எல்லார்க்கும் - எல்லோருக்கும்; மழை - மழையானது; பெய்யும் - பொழியும்.

நெல் பயிருக்கு இறைத்த தண்ணீரானது கால்வாய் வழியாகச் சென்று புல்லுக்கும் பயன்படுகிறது; இவ்வுலகில் நல்லவர் ஒருவர் இருக்கும் காரணமாகப் பொழியும் மழையானது மற்ற அனைவருக்கும் பயன்படுகிறது.

பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்
விண்டு உமிபோனால் முளையாதாம் - கொண்ட பேர்
ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவு இன்றி
ஏற்ற கருமம் செயல் 11

பண்டு முளைப்பது - உமிக்கு முன்னே முளைப்பது; அரிசியே ஆனாலும் - அரிசியே ஆனாலும்; உமி விண்டுபோனால் - உமி யானது நீங்கிவிட்டால்; முளையாது - முளைக்காது; கொண்ட - அடைந்த; பேர் ஆற்றல் - மிகுந்த திறமையுடையோருக்கும்; அளவு இன்றி - துணை இல்லாமல்; ஏற்ற கருமம் - கைக்கொண்ட காரியம்; செயல் ஆகாது - செய்து முடிக்க இயலாது.

அரிசி விளைவதற்கு உமியின் துணை தேவைப்படுகிறது. ஒரு காரியத்தை செய்து முடிக்க எவ்வளவு திறமை இருந்த போதி லும், தகுந்த ஒருவர் துணை இல்லாமல், தனியாக அதைச் செய்துவிட முடியாது.

மடல் பெரிது தழை; மகிழ் இனிது கந்தம்
உடல் சிறியர் என்று இருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது; அதன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும் 12

தாழை மடல் பெரிது - தாழம் பூவின் இதழ் பெரிதாயிருக்கிறது; மகிழ் கந்தம் இனிது - மகிழம்பூ (சிறிதானாலும்) மணத்திலே இனியது; கடல் பெரிது - சமுத்திரம் பெரிதாயிருக்கிறது; மண் நீரும் ஆகாது - அதன் தண்ணீர் உடல் அழுக்கைப் போக்குவதற்கும் உதவாது; அதன் அருகே சிற்றூறல் - கடற்கரையின் பக்கத்தில் தோண்டக் கூடிய சிறிய ஊற்று நீர்; உண் நீரும் ஆகிவிடும் - குடிப்பதற்கு ஏற்ற தண்ணீர் ஆகும்; உடல் சிறியர் என்று இருக்க வேண்டா - ஒருவருடைய சிறிய உருவத்தைக் கண்டு அவரை அலட்சியமாக எண்ண வேண்டாம்.

தாழம்பூவின் மடல் பெரிது; ஆனால் அதைவிட மகிழம் பூ சிறிது என்றாலும் மணம் அதிகம்; கடல் பெரிதாக இருந்த போதிலும் அதன் நீர் அழுக்கைப் போக்கக் கூட உதவாது; அதன் அருகே உள்ள ஊற்று நீரோ குடிப்பதற்கு உபயோக மாகும். சிறிய உருவமாயிருந்த போதிலும் அவரை மதியாமல் இருக்க வேண்டாம்.

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே
நீட்டு ஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய
மாட்டாதவன் நன் மரம் 13

கவை ஆகி - கிளைகளை உடைய; கொம்பு ஆகி - கொம்புகளை உடைய; காட்டு அகத்தே நிற்கும் - காட்டிலே நிற்கின்ற; அவை - அந்த மரங்கள்; நல்ல மரங்கள் அல்ல - நல்ல மரங்கள் ஆகமாட்டா, சபை நடுவே - கல்வி அறிவுடையோர் சபையின் மத்தியிலே; நீட்டு ஓலை - ஒருவர் காட்டிய ஓலைச் சுவடியை; வாசியா நின்றான் - படிக்கத் தெரியாமல் நிற்பவனும்; குறிப்பு அறிய மாட்டாதவன் - பிறருடைய உள்ளக் குறிப்பை உணராதவனும்; நல்ல மரம் - நல்ல மரத்தை போன்றவன்.

கல்வி அறிவுடையோர் சபையிலே ஒருவர் கொடுக்கும் ஓலைச் சுவடியைப் படிக்கத் தெரியாத்வனும் பிறருடைய உள்ளக் குறிப்பை உணராமல் நிற்பவனும் கொம்பு கிளைகளுடன் காட்டிலே நிற்கின்ற மரத்தைப் போன்றவன்.

கான மயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி
தானும் அதுவாகப் பாவித்து - தானும் தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
கல்லாதான் கற்றகவி 14

கல்லாதவன் - படிக்க வேண்டியவற்றைப் படிக்காதவன்; கற்ற கவி - பிறர் கூறுவதைக் கேட்டு கவி பாடுதல்; கானம் மயில்ஆட - காட்டிலே உள்ள மயில் தோகை விரித்து ஆட; கண்டு இருந்த வான் கோழி - அதைப் பார்த்து கொண்டிருந்த வான் கோழியானது; தானும் அதுவாக பாவித்து - தானும் மயில் போல எண்ணிக் கொண்டு; தானும் தன் பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலும் - தன்னுடைய அழகற்ற சிறகை விரித்து ஆடியது போல். ஆகும்.

முறையாகக் கல்வி கற்காமல், கற்றவரைப் போல் பாசாங்கு செய்வது, தோகை விரித்து ஆடும் மயிலைப் பார்த்து தானும் மயிலாகக் கருதி வான் கோழி தன்னுடைய சிறகை விரித்து ஆடுவது போலாகும்.

வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி
ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால்போல் - பாங்கு அழியாப்
புல் அறிவாளருக்குச் செய்த உபகாரம்
கல்லின் மேல் இட்ட கலம் 15

வேங்கை வரிப்புலி நோய் - வரிகளை உடைய வேங்கைப் புலியின்; நோயை தீர்த்த - குணமாக்கிய; விடகாரி - விஷ வைத்தியன்; ஆங்கு - அப்பொழுதே; அதனுக்கு - அப்புலிக்கு; ஆகாரம் ஆனால் போல - இரையானால் போல்; பாங்கு அறியா - நன்றி உணர்வில்லாத; புல் அறிவாளர்க்கு - அற்ப புத்தியுடையவர்களுக்கு; செய்த உபகாரம் - செய்யப்பட்ட உதவியானது; கல்லின் மேல் இட்ட கலம் - கல்லின் மேலே போட்ட மண்பாண்டம் அப்பொழுதே நொறுங்கிச் சிதறிவிடும்.

பாம்பு கடித்துக் கிடந்த வரிப்புலிக்கு விஷ வைத்தியம் செய்த மருத்துவன் அப்போதே அந்தப் புலிக்கு இரையானது போல் அற்பபுத்தி உடையவர்களுக்கு உதவி செய்தால், கல்லின் மேல் போட்ட மண்பானையைப் போல் நமக்கே தீமையாய் முடியும்.

அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத் தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வரும் அளவும்
வாடி இருக்குமாம் கொக்கு 16

கொக்கு - கொக்கானது; மடைத் தலையில் - நீர் ஓடும் மடையிலே; ஓடும் மீன் ஓட - சிறு மீன்கள் ஓடிக் கொண்டிருக்க; உறுமீன் - பெரிய மீன்; வரும் அளவும் - வரும் வரையில்; வாடி இருக்கும் - அடங்கியிருக்கும்; (அதுபோல) அடக்கம் உடையார் - அடங்கி இருப்பவரை; அறிவிலர் - அறிவற்றவர்; என்று எண்ணி - என்று நினைத்து; கடக்க - அலட்சியம் செய்வதற்கு; கருதவும் வேண்டா - எண்ண வேண்டியதில்லை.

ஓடையிலே சிறு மீன்கள் ஓடுவதை விட்டுவிட்டு, பெரிய மீனாக வருவதைக் கொத்திப் பிடிப்பதற்காகக் கொக்கு அடங்கி இருக்கும்; அதுபோல, அடக்கமாக இருப்பவர் அறிவற்றவர் என்று அவரை அலட்சியமாக நினைக்க வேண்டாம்.

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர்; - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறவார் உறவு 17

அற்ற குளத்தில் - தண்ணீர் வற்றிய குளத்தில்; அறு - விட்டுச் செல்லுகின்ற; நீர்ப்பறவைபோல் - நீரிலே வாழும் பறவைகள் போல்; உற்றுழி - துன்பம் நேரிட்டபொழுது; தீர்வார் - விட்டுச் செல்பவர்; உறவு அல்லர் - உறவினர் ஆகமாட்டார்; கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே - கொட்டி, ஆம்பல், நெய்தல் ஆகியனபோல்; ஒட்டி உறவார் - நீங்காமல் சேர்ந்து இருந்து அனுபவிப்பவரே; உறவு - உறவினர் ஆவார்.

தண்ணீர் உள்ள குளத்திலே கொட்டி, ஆம்பல், நெய்தல் ஆகி யன முளைக்கின்றன. அதிலே நீர்ப்பறவைகளும் வாழ்கின்றன; குளத்திலே நீர் வற்றியதும் பறவைகள் எல்லாம் பறந்து விடுகின்றன; ஆனால், கொட்டி, ஆம்பல், நெய்தல் மட்டும் வாடிக் கிடக்கின்றன; அதுபோல், வாழ்விலும் தாழ்விலும் நீங்காமல் சேர்ந்து இருப்பவரே உண்மையான உறவினர் ஆவார்.

சீரியர் கெட்டாலும் சீரியரே; சீரியர் மற்று
அல்லாதார் கெட்டால் அங்கு என்னாகும்? - சீரிய
பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும், என் ஆகும்
மண்ணின் குடம் உடைந்தக் கால்? 18

சீரியர் கெட்டாலும் - சிறப்பு மிக்கவர்கள் தாழ்வுற்றாலும்; சீரி யரே - சிறப்பானவர்களே; மற்று சீரியர் அல்லாதார் கெட்டால் - பண்பு இல்லாதவர்கள் தாழ்வுற்றால்; அங்கு என் ஆகும் - அப்பொழுது அவர்களுடைய நிலை எப்படி இருக்கும்? சீரிய பொன்னின் குடம் உடைந்தால் - சிறந்த தங்கக்குடம் உடைந்தால்; பொன் ஆகும் - பழையபடி தங்கம் ஆகிவிடும்; மண்ணின் குடம் உடைந்தக்கால் - மண்ணால் செய்த குடம் உடைந்துவிடுமானால்; என் ஆகும் - என்ன பயன் உண்டாகும்?

சிறப்புமிக்கவர்கள் வறுமையில் வாடிய போதிலும் அவர்களுடைய சிறப்புக் குன்றாது; பண்பற்றவர்கள் கெட்டால் அவர்கள் கதி என்ன ஆகும்? தங்கக்குடம் உடைந்து விடுமானால் மறுபடியும் தங்கமாகிவிடும், மண் குடம் உடைந்தால் என்ன பயன்?

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நானாழி - தோழி
நிதியும் கணவனும் நேர் படினும் தம்தம்
விதியின் பயனே பயன் 19

ஆழ்கடல் நீர் - ஆழமான கடல் நீரை - ஆழ அமுக்கி முகக்கினும் - நன்றாக அமிழ்த்தி மொண்டாலும்; நாழி - ஒருபடியானது; நானாழி முகவாது; நான்கு படி நீரை மொள்ளாது; (அது போல) தோழி - சிநேகிதியே; நிதியும் கணவனும் நேர்படினும் - மிகுந்த பொருளும் தகுந்த கணவனும் பெண்களுக்குக் கிடைத்த போதிலும்; தம்தம் - அவரவர்; விதியின் பயனே பயன் - ஊழ்வினைக்கு ஏற்றவாறே சுகம் அமையும்.

கடலிலுள்ள நீரை எவ்வளவுதான் அமிழ்த்தி மொண்டாலும் ஒரு படி அளவில் நான்குபடி கொள்ளாது; செல்வமும் கணவனும் ஒரு பெண்ணுக்குக் கிடைத்த போதிலும் அவள் விதிப்படியே தான் வாழ்வு அமையும்.

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்கவேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்
அம் மருந்து போல் வாரும் உண்டு 20

வியாதி - நோயானது; உடன் பிறந்தே கொல்லும் - உடலில் தோன்றியே அதனைக் கொல்லுகின்றது; (ஆகையால்) உடன் பிறந்தார் - கூடப் பிறந்தவர் எல்லோரும்; சுற்றத்தார் என்று இருக்க வேண்டா - நன்மை செய்யும் உறவினர் என்று எண்ணிக் கொண்டிருக்க வேண்டியதில்லை; உடன் பிறவா - கூடப்பிறவாத; மாமலையில் உள்ள மருந்தே - பெரிய மலையிலுள்ள மூலிகையே; பிணி தீர்க்கும் - நோயைக் குணமாக்கும்; அம்மருந்து போல் வாரும் உண்டு - அந்த மூலிகையைப் போல (அயலாரானாலும் உதவி புரியக் கூடியவர் சிலர் இருப்பார்கள்)

உடலில் தோன்றிய நோயே அதனைக் கொல்லுகிறது; அதைப்போல, கூடப் பிறந்தோர் உதவிபுரியும் உறவினர் என எண்ண வேண்டாம்; பெரிய மலையில் உள்ள மூலிகை உயிரைக் காப்பாற்றுவது போல, எவரோ ஒருவர் உதவி செய்யக்கூடும்.

இல்லாள் அகத்து இருக்க இல்லாதது ஒன்று இல்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்
புலி கிடந்த தூறாய் விடு 21

இல்லாள் அகத்து இருக்க - நல்ல குணமும் செயலும் உடைய மனைவி வீட்டில் இருந்தால்; இல்லாதது ஒன்று இல்லை - அவ்வீட்டில் இல்லாத பொருள் ஒன்றும் இல்லை; இல்லாளும் இல்லாளே ஆயின் - மனைவி மனைவியாக இல்லாமல் போனாலும்; இல்லாள் வலிகிடந்த மாற்றம் உரைக்கு மேல் - மனைவி கொடூரமான சொற்களைக் கூறி, எதிர்த்துப் பேசினாலும்; அவ் இல் புலி கிடந்த தூறாய்விடும் - அந்த வீடானது புலி வசித்த குகைபோல் ஆகிவிடும்.

நற்குணம் உள்ள மனைவி ஒரு இல்லத்துக்கு வாய்த்து விடுவாளானால், அங்கே எந்தக் குறையும் இருக்காது; கொடுமையும் எதிர்த்து வாதாடுவதுமான மனைவி இருப்பாளானால் அந்த இல்லமானது புலி தங்கிய குகைபோல் ஆகும்.

எழுதியவாறே தான் இரங்கும் மட நெஞ்சே!
கருதியவாறு ஆமோ கருமம்? - கருதிப் போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்கும் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பாவத்தில் செய்த வினை 22

இரங்கும் மட நெஞ்சே - ஏங்குகின்ற பேதை மனமே; கருதிப் போய்க் கற்பகத்தைச் சேர்ந்தோர்க்கு - நிறையப் பெறலாம் என நினைத்து கற்பக விருட்சத்தை அடைந்தோருக்கு; காஞ்சிரங்காய் ஈந்ததேல் - எட்டிக் காய் கிடைத்தது என்றால்; (அதற்குக் காரணம்) முற்பாவத்தில் செய்த வினை - முன்பிறப்பில் செய்த தீவினை ஆகும்; கருமம் கருதியவாறு ஆமோ - நினைத்தபடி செயல்கள் ஆகுமோ; எழுதியவாறே காண் - எல்லாம் விதிப்படியே ஆகும் என்று உணர்ந்து கொள்வாயாக.

நினைத்தபடி எல்லாம் நடந்து விடுமா? விதிப்படியே தான் எல்லாம் நடக்கும்; கற்பக விருட்சத்தை அடைந்தோருக்கு எட்டிக்காய் கிடைக்குமானால், விதியின் பயனே என்று உணர்ந்து கொள்ள வேண்டும்.

கற்பிளவோடு ஒப்பர் கயவர்; கடும் சினத்துப்
பொற் பிளவோடு ஒப்பாரும் போல்வரே - வில் பிடித்து
நீர் கிழிய எய்த வடுப் போல மாறுமே
சீர் ஒழுகு சான்றோர் சினம் 23

கயவர் - கீழ்த்தரமானவர்; கடுஞ்சினத்து - கடுங்கோபத்தால் வேறுபட்டால்; கல்பிளவோடு ஒப்பர் - கல்பிளந்தது போல் பிரிந்து விடுவர்; பொன் பிளவோடு ஒப்பாரும் போல்வார் - தங்கம் பிளந்தாலும் மறுபடியும் இணைந்து விடுவது போல் யாரேனும் கூட்டுவித்தால் கூடிவிடுவர்; சீர் ஒழுகு சான்றோர் சினம் - சீலம் பொருந்திய அறிஞருடைய கோபமானது; வில் பிடித்து நீர் கிழிய எய்த வடுப்போல மாறும் - தண்ணீரில் வில்லைக் கொண்டு எய்த அம்பினால் உண்டான பிளவு போல் மாறிவிடும்.

கீழ்த்தரமானவர்களுடைய கோபமானது கல் பிளப்பது போல் உடைந்து பிரிந்து விடும் தன்மையானது; தங்கத்திலே பிளவு உண்டானால் மீண்டும் இணைந்து விடுவது போல் யாரேனும் கூட்டுவித்தால் கூடிவிடும் தன்மையுடையோரும் உள்ளனர். நீரிலே அம்பு எய்தால் அது உடனே மறைவது போல் சான்றோர்களுக்கு ஏற்படும் கோபமானது உடனே மாறிவிடும் தன்மை கொண்டது.

நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்ந்தாற் போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம் **24**

கயத்தில் - குளத்தில் உள்ள; நல் தாமரை - நல்ல தாமரை மலரை; நல் அன்னம் சேர்ந்தாற்போல் - நல்ல அன்னப் பறவை அடைந்தது போல; கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கல்வியாளரைக் கல்வியாளரே விரும்பிச் சேர்வர்; முதுகாட்டில் சுடுகாட்டில் உள்ள; பிணம் - பிணத்தை; காக்கை உகக்கும்- காக்கை விரும்பும்; அதுபோல், கற்பு இலா மூர்க்கரை - கல்வி அறிவு இல்லாத மூடரை; மூர்க்கர் - மூடரே; முகப்பர் - விரும்புவர்.

அன்னப் பறவையானது தாமரை உள்ள குளத்தைச் தேடிச் செல்வது போல, அறிஞர் அறிஞரையே தேடிச் செல்வர்; காக்கையானது சுடு காட்டில் பிணத்தைத் தேடிச் செல்வதுபோல், அறிவற்றவரை அறிவற்றவரே தேடிச் செல்வர்.

நஞ்சு உடைமை தான் அறிந்து நாகம் கரந்து உறையும்
அஞ்சாப் புறம் கிடக்கும் நீர்ப் பாம்பு - நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர் **25**

நாகம் - விஷம் உடைய பாம்பானது; தான் நஞ்சு உடைமை அறிந்து - தன்னிடம் விஷம் இருப்பதை உணர்ந்து; கரந்து உறையும் - புற்றில் மறைந்து வசிக்கும்; நீர்ப்பாம்பு - தண்ணீர் பாம்பானது; அஞ்சாப் புறம் கிடக்கும் - பயமின்றி வெளியே கிடக்கும்; அவைபோல, நெஞ்சில் கரவுடையார் - வஞ்சக மனத்தினர்; தம்மைக் கரப்பர் - கபடமாகப் பேசுவர்; கரவு இலா நெஞ்சத்தவர் - வஞ்சனையற்ற மனத்தினர்; கரவார் - ஒளித்துப் பேச மாட்டார்.

விஷம் இல்லாத நீர்ப்பாம்பானது பயமின்றி எங்கும் கிடப்பதுபோல், வஞ்சனை இல்லாத உள்ளத்தினர் வெளிப்படையாகப் பேசுவர்; விஷத்தோடு கூடிய நாகபாம்பானது புற்றில் மறைந்து வசிப்பது போல், வஞ்சகர் கபடமாகவே பேசுவர்.

மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்பு உடையன் - மன்னர்க்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பு இல்லை கற்றோர்க்குச்
சென்ற இடம் எல்லாம் சிறப்பு **26**

மன்னனும் - அரசனையும்; மாசு அறக் கற்றோனும் - நன்கு பயின்ற அறிஞனையும்; சீர்தூக்கின் - ஆராய்ந்து பார்த்தால்; மன்னனில் கற்றோன் சிறப்பு உடையன் - அரசனைக் காட்டிலும் அறிஞனே சிறப்பு மிக்கவன்; மன்னற்கு - அரசனுக்கு; தன் தேசம் அல்லால் - தன்னுடைய நாட்டைத் தவிர; சிறப்பு இல்லை - மதிப்பு இல்லை; கற்றோர்க்கு - அறிஞர்க்கு; சென்ற இடம் எல்லாம் சிறப்பு - போகும் இடங்களில் எல்லாம் பெருமை உண்டாகும்.

அரசனையும் அறிஞனையும் ஒப்பிட்டால், அறிஞனே சிறந்தவன்; அரசனுக்குத் தன்னுடைய நாட்டிலே மட்டும் கௌரவம்; அறிஞனுக்குப் போகும் இடங்களில் எல்லாம் பெருமை உண்டாகும்.

கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார் சொல் கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் கூற்றமே
இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண் 27

கல்லாத மாந்தர்க்கு - கல்வி அறிவு இல்லாதவர்க்கு; கற்று உணர்ந்தார் சொல் - கற்றறிந்தவருடைய உறுதியான மொழி; கூற்றம் - எமனாகும்; அல்லாத மாந்தர்க்கு - தருமத்தில் விருப்பமற்ற தீயவர்க்கு; அறம் - தர்மமே; கூற்றம் - எமனாகும்; மெல்லிய வாழைக்கு - மென்மையான வாழை மரத்துக்கு; தான் ஈன்ற காய் கூற்றம் - அது தள்ளியகுலையே (காயே) எமனாகும்; இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண் - இல் வாழ்க்கைக்கு இணங்கி நடவாத மனைவியானவள், கணவனுக்கு எமன் ஆவாள்.

மூடருக்குக் கற்றவர் சொல்லும், தீயவர்களுக்கு தருமமும், வாழைக்கு அதன் காயும், பொருத்தமற்ற மனைவியால் கணவனுக்கும் எமன் போல, துன்பத்தை அளிக்கக் கூடியதாகும்.

சந்தன மென் குறடு தான் தேய்ந்த காலத்தும்
கந்தம் குறை படாது; ஆதலால் - தம்தம்
தனம் சிறியர் ஆயினும் தார் வேந்தர் கேட்டால்
மனம் சிறியர் ஆவரோ மற்று? 28

மென் சந்தனம் குறடு - மிருதுவான சந்தனக் கட்டையானது; தான் தேய்ந்த காலத்தும் - அது தேய்ந்து போனாலும் கூட; கந்தம் குறைபடாது - மணம் குறையாது; ஆதலால் - ஆகையினாலே; தார் வேந்தர் - படைபலம் உள்ள அரசர்; தம் தம் தனம் சிறியர் ஆயினும் - தங்களுடைய செல்வம் குறைவுற்ற போதிலும், கேட்டால் வறுமையினால்; மனம் சிறியர் ஆவரோ - தாராள மனத்தை இழந்து விடுவரோ?

சந்தனக் கட்டையானது எவ்வளவு தேய்ந்த போதிலும் அதன் மணம் குன்றாது; அரசருடைய செல்வமானது குறைந்து, வறுமையுற்ற போதிலும் அவர்களுடைய தாராளத் தன்மையானது குறைந்துவிடாது.

மருவு இனிய சுற்றமும் வான் பொருளும் நல்ல
உருவும் உயர் குலமும் எல்லாம் - திரு மடந்தை
ஆம் போது அவளோடும் ஆகும்; அவள் பிரிந்து
போம் போது அவளோடும் போம் 29

மருவு இனிய சுற்றமும் - தழுவி வாழக்கூடிய இனிய உறவின ரும்; வான் பொருளும் - பெருமையுடைய செல்வமும்; நல்ல உருவும் - அழகான தோற்றமும்; உயர் குலமும் எல்லாம் - உயர்வான குலம் இவை அனைத்தும்; திருமடந்தை ஆம்போது - திருமகள் வந்து சேரும் பொழுது; அவளோடு ஆகும் - அவளு டன் வந்து சேர்ந்துவிடும்; அவள் பிரிந்து போம்போது - அவள் நீங்கிச் செல்லும்பொழுது; அவளோடு போம் - அவளுடனே சென்று விடும்.

சூழ்ந்து வாழும் உறவினர், அடைந்துள்ள செல்வம், அழகான தோற்றம் இவை யாவும் லட்சுமி தேவியின் அருள் இருந்தால் கைகூடும். அவள் அருள் நீங்கும் பொழுது எல்லாம் போய்விடும்.

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆந்தனையும் காப்பர்அறிவுடையோர் - மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம் 30

மரம் - மரமானது; மாந்தர் குறைக்கும் தனையும் - மனிதர் வெட்டுகின்றவரையும்; குளிர் நிழலைத் தந்து மறைக்கும் - குளிர்ச்சியான நிழலைக் கொடுத்து வெயிலை மறைக்கும்; அதுபோல, அறிவுடையோர் - சான்றோர்; சாம்தனையும் - தாம் சாகும்வரை; தீயனவே செய்திடினும் - தமக்கு, பிறர் தீமை-களைச் செய்த போதிலும்; தாம் அவரை ஆம்தனையும் காப்பர் - தம்மால் இயன்றவரை அவரைக் காத்திடுவார்.

மரத்தை வெட்டுகின்ற வரை அது வெயிலை மறைத்து குளிர்ந்த நிழலைத் தருவது போல் தாம் சாகும் வரை தமக்குப் பிறர் தீமை புரிந்த போதிலும் சான்றோர் இயன்றவரை அவரைக் காப்பாற்றுவர்.

[மூதுரை மூலமும் உரையும் முற்றும்]

நல்வழி

கடவுள் வாழ்த்து

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் - கோலம்செய்
துங்கக் கரி முகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

கோலம் செய் - அழகினைத் தரும்; துங்கம் - உயர்ந்த; கரிமுகத்து - யானை முகத்தையுடைய; தூமணியே - பரிசுத்தமான மாணிக்கம் போன்ற விநாயகக் கடவுளே; பாலும் தெளிதேனும், பாகும் பருப்பும் - பசுவின் பாலும் சுத்தமான தேனும் வெல்லப்பாகும் பருப்பும் ஆகிய; இவை நாலும் - இந்நான்கையும் கலந்து; நான் உனக்குத் தருவேன் - அடியேன் உமக்கு நிவேதனம் செய்வேன்; சங்கத் தமிழ் மூன்றும் - சங்கம் வளர்த்த இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழையும்; நீ எனக்குத் தா - தேவரீர் அடியேனுக்கு அருள்வீராக.

விநாயகப் பெருமானே, அடியேனுடைய பூஜையையும் நிவேதனத்தையும் ஏற்றுக்கொண்டு இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்ச் செல்வத்தையும் எனக்கு அருள் புரிய வேண்டும்.

நூல்

புண்ணியம் ஆம் பாவம் போம் போன நாள் செய்த அவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் - என்னும் கால்
ஈது ஒழிய வேறு இல்லை; எச்சமயத்தார் சொல்லும்
தீது ஒழிய நன்மை செயல் 1

புண்ணியம் ஆம் - அறமானது ஆக்கம் தரும்; பாவம் போம் - தீவினையானது அழிவைச் செய்யும்; போன நாள் செய்த அவை - முற்பிறப்பில் செய்த புண்ணிய பாவங்களே; மண்ணில் பிறந்தார்க்கு - பூமியிலே பிறந்தவர்களுக்கு வைத்த பொருள்

- நன்மை தீமைகளை அனுபவிக்கும்படி தேடி வைத்த பொருளாகும், எண்ணுங்கால் ஆராய்ந்து பார்த்தால்; எச்சமயத்தார் சொல்லும் - எந்த மதத்தினர் கூறுவதும்; ஈது ஒழிய வேறு இல்லை - இதைத் தவிர வேறு எதுவும் இல்லை. தீது ஒழிய நன்மை செயல் - தீமை செய்யாமல் நன்மையைச் செய்க.

முற்பிறப்பில் செய்த பாவபுண்ணியங்களே இப்பிறப்பில் தேடி வைத்த பொருளாகும்; தீமையை விலக்கி நன்மையைச் செய்வதே எல்லா மதத்தினரும் போதிக்கும் உபதேச மொழியாகும்.

சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை; சாற்றும் கால்
நீதி வழுவா நெறி முறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர், இடாதார் இழிகுலத்தோர்
பட்டாங்கில் உள்ளபடி 2

சாற்றுங்கால் - சொல்லுமிடத்து; மேதினியில் - பூமியில்; சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை - இரண்டு வகையான சாதியைத் தவிர வேறு இல்லை; நீதி வழுவா நெறி - நீதிதவறாத நல்ல வழியில் நின்று; முறையின் - ஒழுங்கோடு; இட்டார்-துன்புறுவோர்க்கு உதவியவரே; பெரியோர் உயர்ந்தவர்; இடாதார் - உதவி புரியாதவர்; இழி குலத்தோர் - தாழ்ந்த சாதியார்; பட்டாங்கில் உள்ளபடி - உண்மை நூலில் உள்ளதும் இதுவே.

இரண்டே சாதிகள்தான் உலகிலே உள்ளன. துன்புறுவோர்க்கு உதவி புரிவோர் உயர்ந்த சாதியினர்; உதவி புரியாதவர் - தாழ்ந்த சாதியினர்; உண்மை நூல்கள் போதிப்பதும் இதுவே.

இடும்பைக்கு இடும்பை இயல்பு உடம்புஇது அன்றே
இடும் பொய்யை மெய் என்று இராதே - இடும் கடுக
உண்டாயின் உண்டாகும் ஊழில் பெரு வலி நோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு 3

இயல் உடம்பு இது - இயங்குகின்ற இந்த உடம்பானது; இடும்பைக்கு - துன்பமான பொருள்களுக்கு; இடும்பை அன்றே - போட்டு வைக்கக் கூடிய பை அல்லவா; இடும் பொய்யை-உணவினை இடுகின்ற நிலையற்ற இவ்வுடம்பை; மெய் என்று

இராதே - நிலையானது என எண்ணாதே; கடுக - விரைவில்; இடும் - வறியவர்க்கு வழங்குங்கள்; உண்டாயின் - இவ்வறம் உண்டானால்; பெருவலி நோய் - பாசப் பிணிகளை; விண்டாரை - நீங்கியவரை; கொண்டாடும் - போற்றும்; வீடு - முக்திமயமானது; ஊழின் - முறையால் உண்டாகும் - உங்களுக்குக் கிடைக்கும்.

நிலையற்ற இவ்வுடலை நிலையானது என்று எண்ணிக் கொண்டிருக்காமல், விரைவாக தர்மம் செய்வீர்களாக, பந்தபாசங்களை நீக்கியவர்களைப் போற்றுவர், முக்தி அடைவர்.

எண்ணிஒரு கருமம் யார்க்கும் செய்ய ஒண்ணாது
புண்ணியம் வந்து, எய்த போது அல்லால் - கண் இல்லான்
மாங்காய் விழ எறிந்த மாத்திரை கோல் ஒக்குமே
ஆங்காலம் ஆகும் அவர்க்கு 4

யாருக்கும் - எத்தகையோர்க்கும்; புண்ணியம் வந்தபோது அல்லால் - முன் செய்த புண்ணியம் வந்து கூடும்பொழுது அல்லாமல்; ஒரு கருமம் - ஒரு காரியத்தை; எண்ணி -ஆலோசித்து; செய்ய ஒண்ணாது - செய்து முடிக்க இயலாது; ஆம் காலம் - கை கூடும் காலத்திலே; அவர்க்கு ஆகும் - அது நிறை வேறும்; (மற்ற காலத்தில் செய்ய எண்ணுவது) கண் இல்லான் - பார்வையற்றவன்; மாங்காய் விழ - மரத்திலுள்ள மாங்காய் விழுவதற்காக; எறிந்த - வீசிய; மாத்திரைக் கோல் ஒக்கும் - மாத்திரைக் கோல் போலாகும்.

ஒரு காரியத்தைச் செய்ய முற்பட்டாலும் புண்ணியமான காலத்திலே தான் அது கைகூடும். மற்ற காலத்தில் செய்ய எண்ணுவது, பார்வையற்றவன் மாங்காய் பறிக்க மாத்திரைக் கோலை வீசியது போலாகும்.

வருந்தி அழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமின் என்றால் போகா - இருந்து ஏங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரம் தாம் நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில் 5

வாராத - கிடைக்கக் கூடாதவைகள்; வருந்தி அழைத்தாலும் - பரிந்து வரவேற்ற போதிலும்; வாரா - கிடைக்க மாட்டா;

பொருந்துவன - நமக்கு வரவேண்டியவற்றை; போமின் என்றால் - வேண்டாம் என்று வெறுத்தாலும்; போகா - போகமாட்டா; (இந்த உண்மையை உணராமல்) இருந்து ஏங்கி - ஏக்கமுற்று இருந்து; நெஞ்சம் புண்ணாக - மனம் நொந்து; நெடுந்தூரம் தாம் நினைந்து - நீண்ட நாள் அதைப்பற்றியே நினைத்துக் கொண்டு; துஞ்சுவதே - உயிர் விடுவதே; மாந்தர் தொழில் - மனிதர் தொழில் ஆகிவிட்டது.

எவ்வளவுதான் முயன்ற போதிலும் கிடைக்கக் கூடியவை-தான் கிடைக்கும்; கிடைக்க வேண்டியதை வேண்டாம் என்று வெறுத்தாலும் விட்டு நீங்காது; இதை உணராமல், நினைத்து, மனம் நொந்து வாடி மாண்டு போவதே மனிதரின் தொழில் ஆகிவிட்டது.

உள்ளதுஒழிய ஒருவர்க்கு ஒருவர் சுகம்
கொள்ளக் கிடையா குவலயத்தில் வெள்ளக்
கடல் ஓடி மீண்டு கரையேறினால் என்
உடலோடு வாழும் உயிர்க்கு ௬

ஒருவர்க்கு - ஒருவருக்கு, உள்ளது ஒழிய - கிடைக்க வேண்டியதைத் தவிர; ஒருவர் சுகம் - மற்றொருவருடைய சுகங்களை; கொள்ள - அனுபவிக்க விரும்பினால்; கிடையா - கைகூடாது; குவலயத்தில் - பூமியில்; உடலோடு வாழும் உயிர்க்கு - உடம்போடு கூடி வாழும் இந்த உயிருக்கு; வெள்ளக் கடல் ஓடி - அலை கடல் கடந்து சென்று; மீண்டும் கரையேறினால் - பொருளைத் தேடிக் கொண்டு திரும்பி வந்து கரைசேர்ந்தாலும்; என் - என்ன சுகம் கிடைத்து விடப்போகிறது?

இவ்வுலகில் வாழ்பவர்க்குக் கிடைக்கக் கூடியதே கிடைக்கும்; பிறர் சுகம் அனுபவிக்கக் கிடையாது; கடல் கடந்து போய் பொருள் ஈட்டித் திரும்பினாலும் கிடைப்பதுதான் கிடைக்கும்.

எல்லாப் படியாலும் எண்ணினால் இவ் வுடம்பு
பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை - நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினால் ஆம் கமல நீர் போல்
பிரிந்திருப்பர் பேசார் பிறர்க்கு 7

எல்லாப் படியாலும் - எல்லா வகையாலும்; எண்ணினால் - நினைத்துப் பார்த்தால்; இவ்வுடம்பு - இந்த உடம்பானது; பொல்லாப்புழு - கெட்ட புழுக்களும்; மலிநோய் - ஏராள-மான பிணிகளுக்கும்; புன்குரம்பை - இருப்பிடமாக உள்ளது. நல்லார் - நல்ல அறிவுடையோர்; அறிந்திருப்பார் - இழிவென்று இதை அறிந்திருப்பார்; ஆதலினால் - ஆகையால்; (அவர்கள்) கமலநீர் போல் - தாமரை இலைத்தண்ணீர் போல; பிரிந்து இருப்பர் - ஒட்டாமல் இருப்பார். பிறர்க்குப் பேசார் - இதைப்பற்றி பிறரிடத்தில் பேசமாட்டார்கள்.

பல வகையாலும் நினைத்துப் பார்த்தால், இந்த உடலானது பலவிதமான நோய்களுக்கு இருப்பிடமாகும்; அறிவுடையோர் இதை அறிந்திருப்பதோடு, இதைப்பற்றி எவரிடமும் பேசாமல் தாமரை இலைத் தண்ணீர் போல வாழ்வர்.

ஈட்டும்பொருள் முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்
கூட்டும்படி அன்றிக் கூடாவாம் - தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண் மின்
தரியாது காணும் தனம் 8

மகிதலத்தீர் - பூமியில் வாழும் மனிதர்களே; கேண்மின் - கேளுங்கள், முயற்சி எண்ணிறந்த ஆயினும் - அளவற்ற முயற்சி செய்தாலும்; ஊழ் கூட்டும்படி அன்றிக்கூடாவாம் - நல்ல காலமிருந்து கை கூடினால் அன்றிக் கூடாது; தரியாது காணும் தனம் - நற்காலம் இல்லாவிடில் அந்தச் செல்வம் நிலைக்காது என்பதைக் காண்பீராக; தேட்டம் மரியாதை காணும் - தேடத் தகுந்தது மரியாதையே ஆகும்.

உலகில் வாழ்பவர்களே, பெரு முயற்சியால் அளவற்ற செல்வத்தைத் தேடினாலும் நல்லகாலம் இருந்தால் அது நிலைக்கும்; இல்லையேல் நிலைக்காது மரியாதை ஒன்றே நிலையாக இருக்கக் கூடியது.

ஆற்றுப் பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும் அவ்ஆறு
ஊற்றுப் பெருக்காம் உலகுஊட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை என மாட்டார் இசைந்து 9

ஆற்றுப் பெருக்கு அற்று - ஆற்றில் வெள்ளம் வடிந்து; அடி சுடும் அந்நாளுல் - வெயிலினால் மணல் நடப்பவருடைய பாதங்களைச் சுடுகின்ற அந்நாளிலும்; அவ் ஆறு - அந்த ஆறானது; ஊற்றுப் பெருக்கால் - ஊற்று நீரால்; உலகு ஊட்டும் - உலக மக்களை உண்ணச் செய்யும்; நல்ல குடிப்பிறந்தார் - உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர்கள்; நல்கூர்ந்தார் ஆனாலும் - வறுமையுற்றிருந்தாலும்; ஏற்றவர்க்கு - வந்து கேட்பவர்களுக்கு; இசைந்து - மனம் ஒப்பி; இல்லை எனமாட்டார் - இல்லை என்று சொல்ல மாட்டார்.

ஆற்றிலே வெள்ளம் வடிந்து, வெப்பத்தால் மணல் சுட்ட போதிலும், மக்களுக்கு ஊற்று நீர் வழங்குவது போல், நல்ல குடும்பத்தினர் வறுமை நிலையில் இருந்த போதிலும், வந்து யாசிப்பவர்க்கு இல்லை என்று கூறாமல் இயன்றதைக் கொடுப்பர்.

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ? மா நிலத்தீர் - வேண்டாம்
"நமக்கும் அது வழியே; நாம் போம் அளவும்
எமக்கு என்" இட்டு உண்டு இரும் 10

மாநிலத்தீர் - பெரிய பூமியில் வாழ்பவர்களே, ஆண்டு ஆண்டு தோறும் அழுது புரண்டாலும் - வருடம் தோறும் அழுது புரண்டாலும்; மாண்டர் வருவரோ? - இறந்தவர் எழுந்து வருவரோ? (வரமாட்டார்) வேண்டா - அடி வேண்டாம்; நமக்கும் அது வழியே - நமக்கும் அதைப்போல மரணமே வழியாகும்; நாம் போம் அளவும் - நாம் இறக்கும் வரை; எமக்கு என் என்று - எமக்கு என்ன தொடர்பு இருக்கிறது என்று எண்ணி; இட்டு உண்டு இரும் - பிறருக்கு வழங்கி, நீங்களும் நன்றாகச் சாப்பிட்டு கவலையற்று இருப்பீர்களாக.

இறந்தவரை நினைத்து வருடக் கணக்கில் அழுது புலம்பிக் கொண்டிருந்த போதிலும் அவர் ஒருபோதும் திரும்பிவரப் போவதில்லை; நாமும் ஒருநாள் அவ்வாறே போக வேண்டியதுதானே! என்று எண்ணி, இருக்கும் வரையில் தர்மங்கள் செய்து, நன்றாகச் சாப்பிட்டு சுகமாக இருப்பீர்களாக!

ஒருநாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்
ஒரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய் - ஒரு நாளும்
என் நோவு அறியாய் இடும்பைகூர் என் வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது 11

இடும்பைகூர் என் வயிறே - துன்பம் தரும் என்னுடைய வயிறே; ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய் - ஒருநாள் சாப்பாட்டை விட்டுவிடு என்றால் விடமறுக்கின்றாய்; இரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய் - (கிடைக்கின்ற போது) இரண்டு நாட்களுக்கும் சேர்த்து ஏற்றுக் கொள் என்றாலும் ஏற்க மறுக்கின்றாய்; ஒரு நாளும் என் நோ அறியாய் - என்னுடைய வேதனையை ஒரு நாளாவது அறியமாட்டாய்! உன்னோடு வாழ்தல் அரிது - உன்னுடன் வாழ்வது எனக்கு சிரமமாக இருக்கின்றது.

தினந்தோறும் உண்பதை ஒழிக்க இயலாது; இரண்டு நாட்களுக்கு சேர்ந்தாற்போல் உண்ணவும் முடியாது; என்னுடைய துன்பத்தை உணராத இந்த வயிறுடன் வாழ்வது மிகவும் சிரமம்.

ஆற்றங் கரையின் மரமும் அரசு அறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே - ஏற்றம்
உழுதுஉண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டீர்
பழுது உண்டு வேறு ஓர் பணிக்கு 12

ஆற்றங்கரையின் மரமும் - ஆற்றின் கரையிலுள்ள மரமும்; அரசு அறிய வீற்று இருந்த வாழ்வும் - அரசு அறிய பெருமையோடு வாழ்ந்த வாழ்க்கையும்; விழும் அன்றே - அழிந்து போகும் அல்லவா; உழுது உண்டு வாழ்வதற்கு - வேளாண்மை செய்து வாழ்வதே சிறப்பாகும்; ஒப்பு இல்லை கண்டீர் - அதற்கு நிகரானது இல்லை என்பதைக் காணுங்கள்; வேறு ஓர் பணிக்கு - வேறு வகையான தொழில்களுக்கெல்லாம்; பழுது உண்டு - குறைபாடு இருக்கும்.

ஆற்றங்கரையில் இருக்கும் மரம் கூட அறியும்படி, அரசு மரியாதையோடு வாழ்ந்த வாழ்வும்கூட, ஒருநாள் அழிந்து விடும்; ஆனால், வேளாண்மை செய்து வாழ்வதற்கு இருக்கும் சிறப்பு வேறு எந்தத் தொழிலுக்கும் இல்லை.

ஆவாரை யாரே அழிப்பார்? அது அன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்? ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்?
மெய் அம்புவி அதன் மேல் 13

அம்புவி அதன் மேல் - அழகு நிறைந்த பூமியிலே; மெய் உண்மையாக; ஆவாரை அழிப்பார் யாரே? - வாழ்வதற்குத் தகுந்தவரை அழிக்கக் கூடியவர் யார், அது அன்றி - அது அல்லாமல்; சாவாரை தவிர்ப்பவர் யார்? இறந்து போகக் கூடிய-வரை தடுத்து நிறுத்துபவர் யார்? ஓவாமல் - ஓயாமல்; ஐயம் புகுவாரை - பிச்சை எடுக்கச் செல்பவரை விலக்குவார் யாரே? யார் தடுப்பவர்?

உண்மையோடு உலகில் வாழ்பவரை எவராலும் அழிக்க முடியாது; மரணம் அடையக் கூடியவரை தடுத்து நிறுத்தவும் இயலாது; தினந்தோறும் பிச்சை எடுத்து திரிவோரையும் நிறுத்த முடியாது.

பிச்சைக்கு மூத்தகுடி வாழ்க்கை பேசுங்கால்
இச்சை பல சொல்லி இடித்து உண்கை - *சீச்சீ*
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர் விடுகை சால உறும் 14

பேசுங்கால் - சொல்லுமிடத்து; பிச்சைக்கு மூத்தகுடி வாழ்க்கை - பிச்சை எடுத்து உண்பதைக் காட்டிலும் இழிவான பெரிய குடும்ப வாழ்க்கையானது; பல இச்சை சொல்லி இடித்து உண்கை -பலவாறான ஆசை வார்த்தைகளைக் கூறி, ஒருவரை அடுத்து இடிபட்டு வாங்கி உண்பதானது; *சீச்சீ* - இது என்ன கேவலம்; வயிறு வளர்க்கைக்கு - இப்படி வயிறு வளர்ப்பதைக் காட்டிலும்; மானம் அழியாது - மானம் கெடாமல்; உயிர் விடுகை - உயிரை விட்டு விடுவது; சால உறும் - மிகவும் பொருந்தும்.

பிச்சை எடுத்து உண்பதைக் காட்டிலும் இழிவானது, பிறரிடம் ஆசை வார்த்தைகளைக் கூறி, அவமானத்துக்கு ஆளாகி வயிறு வளர்ப்பதாகும்; அதைக் காட்டிலும் மானத்தோடு உயிரைத் துறப்பது உயர்வாகும்.

சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை - உபாயம்
இதுவே; மதியாகும்; அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும் 15

சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு - சிவாய நம என்னும் பஞ்சாட்சர மந்திரத்தைத் தியானித்துக் கொண்டிருப்பவருக்கு; ஒரு நாளும் அபாயம் இல்லை - ஒரு பொழுதும் ஆபத்து உண்டாகாது; இதுவே உபாயம் - இது ஒன்றே துன்பத்தை வெற்றி கொள்ளும்; மதி - அறிவாகும் அல்லாத எல்லாம் - பிற அறிவுகள் அனைத்தும்; விதியே ஆய்விடும் - விதிப்படியே ஆகும்.

பஞ்சாட்சர மந்திரத்தை தினந்தோறும் தியானிப்பவர்களுக்கு ஒரு கெடுதலும் நேராது; இதுவே துன்பத்தை நீக்க வழி; மற்றவையாவும் விதிப்படியே ஆகும்.

தண்ணீர் நில நலத்தால் தக்கோர் குணம் கொடையால்
கண் நீர்மை மாறாக் கருணையால் - பெண்ணீர்மை
கற்பு அழியா ஆற்றால்! கடல் சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி 16

தண்ணீர் நில நலத்தால் - நீரானது நிலத் தன்மையினாலும்; தக்கோர் குணம் கொடையால் - நல்லவர்களுடைய சுபாவம் ஈகையினாலும்; கண் நீர்மை மாறாக்கருணையால் - கண்களுடைய சுபாவமானது நீங்காத அருளினாலும்; பெண் நீர்மை கற்பு அழியா ஆற்றால் - பெண்களின் சுபாவமானது கற்புநிலை கெடாத முறையினாலும்; கடல் சூழ்ந்த வையகத்துள் - கடலால் சூழப்பட்டுள்ள உலகில்; அற்புதமாம் - வியக்கத்தக்க சிறப்புடையதாகும்; என்று அறி - என அறிந்து கொள்வாயாக.

நிலத்தின் தன்மையால் தண்ணீரையும், ஈயும் தன்மையால் நல்லவர்களுடைய சுபாவத்தையும், கருணை மிகுந்த பார்வையால் கண்களின் பெருமையையும், கற்பு நெறியால் பெண்களின் நேர்மையையும் காணலாம். இவையே உலகில் வியக்கத்தக்கது என அறிவீர்களாக!

செய் தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இரு நிதியம்? - வையத்து
அறும் பாவம் என்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று
வெறும் பானை பொங்குமோ மேல்! 17

வையத்து பாவம் அறும் என்ன அறிந்து - உலகில் அறம் செய்வதன் மூலம் பாவம் அகலும் என உணர்ந்து; அன்று இடார்க்கு - அக்காலத்தில் வழங்காதவர்களுக்கு; செய்தீவினை இருக்கா - முன் செய்த அப்பாவம் இருக்கும்போது; இன்று தெய்வத்தை நொந்தக்கால் - இப்பொழுது கடவுளை நொந்து கொண்டால்; இரு நிதியம் எய்த வருமோ - பெரிய செல்வம் வந்து விடுமோ; (வராது) வெறும்பானைமேல் பொங்குமோ - வெற்றுப் பானையை அடுப்பிலே வைத்தால் மேலே பொங்குமோ?

முற்பிறவியில் செய்த தீவினையால் துன்புறும்போது தெய்வத்தை நொந்து கொண்டால் செல்வம் யாவும் சேர்ந்து விடுமா? வாழ்ந்த காலத்தில் பாவத்தை நீக்க, வழங்காதவர்களுக்கு இப்பொழுது வெற்றுப்பானை பொங்கிவிடுமா?

பெற்றார் பிறந்தார் பெரு நாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் என வேண்டார் - மற்றோர்
இரணங் கொடுத்தால் இடுவர்; இடாரே
சரணம் கொடுத்தாலும் தாம் 18

பேர் உலகில் - பரந்த நிலவுலகத்திலே; பெற்றார் - நம்மைப் பெற்றவர்; பிறந்தார் - நம்முடன் பிறந்தார்; பெருநாட்டார் - நமது நாட்டினர்; உற்றார் - நம்முடைய உறவினர்; உகந்தார் - நமக்குப் பிரியமானவர்; என வேண்டார் - என்று விரும்பாத உலோபிகள்; மற்றோர் - மற்றவர்கள்; இரணம் கொடுத்தால் இடுவர் - அவர்களைப் புண் உண்டாகுமாறு துன்புறுத்தினால் கொடுப்பார்; சரணம் கொடுத்தாலும் இடார் - அவர்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்கினாலும் ஒன்றும் கொடுக்க மாட்டார்கள்.

பெற்றோர், கூடப்பிறந்தவர், ஊர்க்காரர், உறவினர், பிரியமானவர், வேண்டாத உலோபிகள், தங்களைத் துன்புறுத்தியவர்களுக்கே கொடுப்பார்கள்; மற்றப்படி அவர்கள் காலில் வீழ்ந்து பணிந்தாலும் கொடுக்க மாட்டார்கள்.

சேவித்தும் சென்று இரந்தும் தெண் நீர்க்கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்படும் பாட்டு இசைத்தும் போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம் 19

வயிற்றின் கொடுமையால் - வயிற்றின் பசித்துன்பத்தால்; சேவித்தும் - பிறரை வணங்கியும்; சென்று இரந்தும் - பலரிடம் சென்று யாசித்தும்; தெண்நீர்க் கடல் கடந்தும் - தெளிந்த நீரையுடைய கடலைக் கடந்து சென்றும்; பாவித்தும் - பெரிய மனிதராகக் கருதியும்; பார் ஆண்டும் பாட்டு இசைத்தும் - பூமியை ஆட்சி செய்தும், செல்வரைப் புகழ்ந்து பாடியும்; நாம் - நம்முடைய; உடம்பை - இந்த உடலை; நாழி அரிசிக்கே - ஒருபடி அரிசிக்காகவே; பாழின் - வீணில் போவிப்பம் - போக்குகின்றோம்.

பசியின் கொடுமை தாளாமல், பிறரை வணங்கியும் யாசித்தும், கடல் கடந்து சென்றும், அறிவற்றவரை பெரிய மனிதராகக் கருதியும், புகழ்ந்து பாடியும் ஒரு படி அரிசிக்காக இந்த உடலைப் போக்குகிறோம்.

அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு ஒக்கும்
கொம்மை முலை பகர்வார் கொண்டாட்டம் - இம்மை
மறுமைக்கும் நன்று அன்று மாநிதியம் போக்கி
வறுமைக்கு வித்தாய் விடும் 20

கொம்மை முலை - திரண்ட தனங்களை; பகர்வார்க்கொண்டாட்டம் - விற்கின்ற விலைமகளை விரும்பி மகிழ்தல்; அம்மி துணையாக - அம்மிக் கல்லை துணையாகக் கொண்டு; ஆறு இழிந்தவாறு ஒக்கும் - ஆற்று வெள்ளத்தில் இறங்கியதைப்போல்; மாநிதியம் போக்கி - பெரும் செல்வத்தை அழித்து; வறுமைக்கு வித்து ஆய்விடும் - தரித்திரத்துக்கு விதை விதைப்பதாகும்; இம்மைக்கும் மறுமைக்கும் நன்று அன்று - இப் பிறப்புக்கும் அடுத்த பிறப்புக்கும் நல்லது ஆகாது!

அம்மிக்கல்லை துணையாகக் கட்டிக்கொண்டு ஆற்றுவெள்ளத்தில் இறங்குவதுபோல், விலைமகளை விரும்பி, ஆசைப்பட்டுப் பெரும் செல்வத்தை அழித்து இன்புறுவது வறுமைக்கு ஆளாகி இப்பிறப்பிலும் அடுத்த பிறப்பிலும் துன்புற நேரிடும்.

நீரும் நிழலும் நிலம் பொதியும் நெல் கட்டும்
பேரும் புகழும் பெரு வாழ்வும் - ஊரும்
வருந்திருவும் வாழ்நாளும் வஞ்சமில்லார்க்கு என்றும்
தரும் சிவந்த தாமரையாள் தான் 21

சிவந்த தாமரையாள் - செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள்; வஞ்சம் இல்லார்க்கு - வஞ்சனை இல்லாதவர்க்கு; நீரும் - தண்ணீர் வசதியையும்; நிழலும் - வசிப்பதற்கு வீடும்; நிலமும் பொதியும் நெற்கட்டும் - நிலத்திலே நிறையும் நெல்போரும்; பேரும் - நல்ல பெயரும்; புகழும் - கீர்த்தியும்; பெருவாழ்வும் - சிறந்த வாழ்வையும்; ஊரும் - கிராமத்தையும்; வரும் திருவும் - வளர்கின்ற செல்வத்தையும்; வாழ்நாளும் - நீண்ட ஆயுளையும்; என்றும் தரும் - எந்நாளும் தந்து அருள்வாள்.

வஞ்சனை இல்லாதவருக்கு நீர், வீடு, நெல், பெயர், புகழ் சிறப்பான வாழ்வு, கிராமம், வளரும் செல்வம், நீடித்த ஆயுள் ஆகியன திருமகளின் திருவருளால் எந்நாளும் கிடைக்கும்.

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்கேடுகெட்ட
மானிடரே கேளுங்கள்; கூடு விட்டு இங்கு
ஆவிதான் போயின பின்பு யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம் 22

பணத்தைப் பாடுபட்டுத் தேடி - வருந்தி உழைத்துப் பணத்தைச் சேர்த்து; புதைத்து வைத்து - தானும் உண்ணாமல் பிறருக்கும் கொடாமல் பூமியிலே புதைத்து வைத்து; கேடு கெட்ட மானிடரே - அழிந்து கெடும் மனிதர்களே; கேளுங்கள் - கேட்பீர்களாக, கூடுவிட்டு - உடலைவிட்டு; ஆவி போயின பின்பு - உயிர் பிரிந்த பின்; பாவிகள் - பாவிகளே; அந்தப் பணம் - அந்தப் பணத்தை; இங்கு ஆர் அனுபவிப்பார் - இங்கே அனுபவிப்பவர் யார்?

வருந்தி உழைத்துத் தேடிய செல்வத்தைக் கொண்டு தானும் சுகப்படாமல், பிறருக்கும் வழங்காமல், பூமியில் புதைத்து வைத்து, அலையும் கேடு கெட்ட மனிதர்களே, உங்களுடைய உயிர் போன பிறகு, அந்தப் பணத்தை யார் அனுபவிப்பார்?

வேதாளம் சேரும் வெள் எருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்று ஓரம் சொன்னார் மனை 23

மன்று ஓரம் சொன்னார் மனை - நீதி மன்றத்தில் ஒரு தலைப்பட்சமாக நீதி வழங்கியவர் வீட்டிலே; வேதாளம் சேரும் - பேய்கள் வந்து அடையும்; வெள் எருக்குப் பூக்கும் - வெள்ளெருக்கம் பூ பூக்கும்; பாதாளமூலி படரும் - பாதாள மூலி என்னும் கொடி படரும் மூதேவி சென்று இருந்து வாழ்வள் - மூதேவியானவள் போய் குடி இருப்பாள்; சேடன் குடிபுகும் - பாம்பு வசிக்கும்.

நீதி மன்றத்தில் ஒரு சார்பாக (நடுநிலமை இல்லாமல்) நீதி வழங்குபவர் வீட்டிலே பேய்கள், மூதேவி, பாம்புகள் முதலி யன குடி இருப்பதோடு எருக்கம் பூவும் பாதாள மூலிக்கொடியும் படர்ந்து பாழ் அடைந்து போகும்.

நீறு இல்லா நெற்றி பாழ்; நெய் இல்லா உண்டிபாழ்
ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ் - மாறுஇல்
உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ்; பாழே
மடக் கொடி இல்லா மனை 24

நீறு இல்லா நெற்றி பாழ் - திருநீறு அணியாத நெற்றி வீணா-கும்; நெய் இல்லா உண்டி பாழ் - நெய் ஊற்றிக் கொள்ளாத உணவு கெடுதல் ஆகும்; ஆறு இல்லாத ஊருக்கு அழகு பாழ் - நதி இல்லா ஊருக்கு அழகு இருக்காது; மாறு இல் உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ் - மாறுபடாத சகோதரர் இல்லாத உடம்பு கெடுதல் ஆகும்; மடக் கொடி இல்லா மனை பாழே - இல்லறத்துக்கு தகுந்த மனைவி இல்லா வீடும் வீணாகும்.

திருநீறு அணியாத நெற்றி, நெய் இல்லாத உணவு, நதி இல்லாத ஊர், கூடப் பிறவாத பிறப்பு, மனைவி இல்லாத வீடு இவை யாவும் சிறப்புடையன அல்ல.

ஆன முதலில் அதிகம் செலவு ஆனால்
மானம் அழிந்து மதி கெட்டுப் - போன திசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ் பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு 25

ஆன முதலில் செலவு அதிகம் ஆனால் - தன்னிடம் இருக்கும் முதலுக்குச் செலவு அதிகரித்தால்; மானம் அழிந்து - மானம் கெட்டு; மதி கெட்டு - அறிவு இழந்து; போன திசை எல்லார்க்கும் கள்ளனாய் - போகும் இடத்தில் எல்லாம் அனைவருக்கும் திருடனாகிய; ஏழ் பிறப்பும் தீயனாய் - ஏழுவகையான பிறவிகளிலும் கெட்டவனாகி, நல்லார்க்கும் பொல்லனாம் - நல்லவர்களுக்கும் பொல்லாதவன் ஆவான்; நாடு - இதனை உணர்வாயாக.

முதலுக்குமேல் செலவு செய்பவன் மானம் கெட்டு அறிவு இழந்து திருடனாகி, ஏழு பிறப்பிலும் தீயவனாகி நல்லவர்களுக்கும் பொல்லாதவன் ஆவான் என்பதை அறிவாயாக!

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம் 26

பசி வந்திட - பசி உண்டாகி விட்டால்; மானம் - பெருமை; குலம் - குடும்பச் சிறப்பு; கல்வி - படிப்பு; வண்மை - அழகு; அறி வுடைமை - உண்மை உணர்வு; தானம் - ஈகை; தவம் - நோன்பு; உயர்ச்சி - உயர்வு; தாளாண்மை - தொழில் முயற்சி; தேனின் கசிவந்த சொல்லியற் மேல் காமுறுதல் - தேனினும் இனிமையான சொல்லையுடைய மங்கையரிடம் ஆசை கொள்ளுதல் ஆகிய; பத்தும் பறந்து போம் - இப்பத்தும் ஓடிவிடும்.

பெருமை, குடும்பப் பெருமை, படிப்பு, அழகு, உண்மை உயர்வு, ஈகை, நோன்பு, உயர்வு, தொழில் முயற்சி, மங்கையரிடம் ஆசை ஆகிய பத்தும் பசி வந்துவிட்டால் பறந்து ஓடிவிடும்.

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்
அன்றி அதுவரினும் வந்து எய்தும் - ஒன்றை
நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்
எனை ஆளும் ஈசன் செயல் 27

ஒன்றை நினைக்கின் - ஒரு பொருளைப்பெற எண்ணினால்; அது ஒழிந்திட்டு ஒன்றாகும் - அது கிடைக்காமல் வேறு ஒரு பொருள் கிடைத்தாலும் கிடைக்கும்; அன்றி அது வரினும் வந்து எய்தும் - அல்லாமல், அந்தப் பொருளே வந்து கிடைத்தாலும் கிடைக்கும்; ஒன்றை நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும் - ஒரு பொருளை எண்ணாமல் இருக்கும் முன், அது தானாக வந்து நின்றாலும் நிற்கும்; எனை ஆளும் ஈசன் செயல் - இவை அனைத்தும் என்னை ஆண்டு அருளும் இறைவன் செயலே ஆகும்.

ஒன்றை நினைத்தால் அதற்கு பதிலாக வேறு ஒன்று கிடைக்கும்; அல்லது அதுவே கிடைத்தாலும் கிடைக்கக் கூடும்; எண்ணாதது ஒன்று எதிரே வந்து நின்றாலும் நிற்கும்; எல்லாம் இறைவனுடைய திருவருளே ஆகும்.

உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன - கண் புதைந்த
மாந்தர் குடி வாழ்க்கை மண்ணின் கலம் போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான் **28**

உண்பது நாழி - சாப்பிடுவது ஒருபடி அரிசி சோறு ஆகும்; உடுப்பது நான்கு முழம் - உடுத்திக் கொள்வது நான்கு முழ வேஷ்டி; நினைந்து எண்ணுவன என்பது கோடி - நினைந்து எண்ணம் காரியங்களோ எண்பது கோடி; கண் புதைந்த - கண்மூடிகளான; மாந்தர் குடி வாழ்க்கை - மனிதர்களின் குடும்ப வாழ்க்கையானது; மண்ணின் கலம் போல - மண்பாண்டம் போல; சாம் துணையும் - சாகும் வரை; சஞ்சலமே தான் - துன்பமாகவே இருக்கும்.

சாப்பிடுவது ஒருபடி சோறு; உடுத்திக் கொள்வது நான்கு முழ வேஷ்டி; ஆனால், எண்பது கோடி காரியங்களை நினைத்துக் கொண்டிருக்கும் கண்மூடித்தனமான இந்த மனித வாழ்வானது உயிர் உள்ளவரை துன்பமாகத்தான் இருக்கும்.

மரம் பழுத்தால் வௌவாலை வாவென்று கூவி
இரந்து அழைப்பார் யாவரும் அங்கில்லை - சுரந்து அமுதம்
கற்றா தரல் போல் கரவாது அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர் **29**

மரம் பழுத்தால் - மரம் பழுத்திருந்தால்; வா என்று வௌவாலைக் கூவி இரந்து அழைப்பார் - வௌவாலை என்று கெஞ்சிக் கூவி அழைப்பவர்; அங்கு யாவரும் இல்லை - அந்த மரத்தின் அரு கில் ஒருவரும் இல்லை; கன்று ஆ அமுதம் சுரந்து தரல்போல் - கன்றையுடைய பசுவானது பாலைச் சுரந்து கொடுப்பது போல; கரவாது அளிப்பரேல் - ஒளிக்காமல் கொடுத்தால்; உலகத்தார் உற்றார் - உலகத்தில் உள்ள அனைவரும் உறவினர் ஆவார்கள்.

மரத்தில் பழம் பழுத்திருக்கும் பொழுது வௌவாலை யாரும் கூவி அழைப்பது இல்லை. பசு கன்றுக்குப் பால் சுரந்து கொடுப்பது போல், தாராளமாக அள்ளிக் கொடுத்தால், உலகத்தில் எல்லோரும் உறவினரைப் போல் வந்து கூடுவார்கள்.

தாம் தாம் முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்
பூந்தாமரை யோன் பொறி வழியே - வேந்தே
ஒறுத்தாரை என் செயலாம் ஊரெல்லாம் ஒன்றா
வெறுத்தாலும் போமோ விதி 30

வேந்தே - மன்னனே; தாம் தாம் முன் செய்த வினை - ஒவ்வொரு வரும் முன் பிறவியிலே செய்த நல்வினை தீவி னைகளை; பூந்தாமரையோன் பொறி வழியே - தாமரைப் பூவில் வீற்றிருக்கும் பிரமன் விதிப்படியே; தாமே அனுபவிப்பர் - தாங்களே அனுபவிப்பார்கள்; ஒறுத்தாரை என் செயலாம் - தீவினை செய்தவர்களை நாம் என்ன செய்ய இயலும்? ஊர் எல்லாம் ஒன்றா வெறுத்தாரை விதி போமோ - ஊரில் உள்ளோர் அனைவரும் கூடி வெறுத்த போதிலும் விதி போகுமா (போகாது)

முன் பிறவியிலே, அவரவர் செய்த நல்வினை தீவினை-களை பிரமன் விதித்தபடியே அனுபவிப்பார்கள்; தீவினை செய்தவர்களை நாம் என்ன செய்ய இயலும்? ஊர் முழுதும் ஒன்று திரண்டு வெறுத்தாலும் விதி விட்டுப் போகுமா?

இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று; சாலும்
ஒழுக்கம் உயர் குலத்தின் நன்று - வழுக்குடைய
வீரத்தின் நன்று விடாநோய்; பழிக்கு அஞ்சாத்
தாரத்தின் நன்று தனி 31

இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று - குற்றத்தோடு கூடிய பாட்டைக் காட்டிலும் வெறும் ஒலியே நல்லது. உயர் குலத்தின்சாலும் ஒழுக்கம் நன்று - உயர்வான குடும்பம் என கூறிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் நிறைவான ஒழுக்கம் நல்லது; வழுக்கு உடைய வீரத்தின் விடா நோய் நன்று - தவறுதலான வீரத்தைக் காட்டிலும் தீராத நோய் நல்லது; பழிக்கு அஞ்சாத் தாரத்தின் தனி நன்று - பிறர் பழிக்கு ஆளான மனைவியோடு கூடிவாழ்வதைக் காட்டிலும் தனியாக வாழ்வது நல்லது.

குற்றம் உடைய பாட்டும் ஒழுக்கம் இல்லாத உயர் குடும்பமும் தவறான வீரமும் பிறர் பழிக்கு ஆளான மனைவியுடன் வாழ்வதும் துன்பத்தைத் தரும்.

ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறு இடும்
தண்ணீரும் வாரும்; தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து 32

மாநிலத்தீர் - பரந்த உலகில் வாழும் மக்களே; ஆறு இடும் மேடும் மடுவும் போல் - ஆற்று வெள்ளத்தினால் உண்டாகும் மேடும் பள்ளமும் போல; செல்வம் ஏறிடும் மாறிடும் - செல்வமானது வளர்வதும் குறைவதுமாக இருக்கும்; (ஆகையால்) சோறு இடும் - யாசிப்பவருக்கு உண்ண அளியுங்கள்; தண்ணீரும் வாருங்கள் - குடிப்பதற்குத் தண்ணீரும் வழங்குங்கள்; தருமமே சார்பாக - இவ்வாறு செய்யக்கூடிய நற்காரியத்தின் துணையாக; உள் நீர்மை உயர்ந்து வீறும் - உள்ளம் தூய்மை பெற்று விளங்கும்.

செல்வமானது ஆற்று வெள்ளத்தின் மேடு பள்ளம் போன்றது; ஆகையால் செல்வம் இருக்கும் பொழுதே யாசிப்பவருக்கு உணவும் நீரும் வழங்குங்கள்; அந்தத் தர்மத்தின் பயனாக உள்ளத்திலே தூய்மை பொலிவுறும்.

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம்; வேழத்தில்
பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்கு விடாப்பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும் 33

வேழத்தில் பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது - யானை- மீது பாய்ந்து உருவும் அம்பானது பஞ்சுப் பொதியில் பாயாது: நெடு இருப்புப் பாரைக்கு நெக்கு விடாப் பாறை - நீண்ட கடப்பாறைக்குப் பிளவாத கருங்கல் பாறையானது; பசுமரத்தின் வேருக்கு நெக்கு விடும் - பச்சை மரத்தின் வேருக்கு பிளந்து கொடுக்கும்; (அவ்வாறு) வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம் - கடுமையான சொற்கள் இனிமையான சொற்களை வெற்றி கொள்ளமாட்டா.

யானை மேலே பாயும் அம்பானது பஞ்சுப் பொதியில் பாயாது; கடப் பாறைக்குப் பிளக்காத கற்பாறையானது பச்சை மரத்தின் வேருக்குப் பிளந்து கொடுக்கும்; கடுமையான சொல்லானது இனிமையான சொல்லை வெற்றி கொள்ளாது.

கல்லாரே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின்
எல்லோரும் சென்று அங்கு எதிர்கொள்வர் - இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற்றுஈன்று எடுத்த தாய் வேண்டாள்
செல்லாது அவன் வாயிற் சொல் 34

கல்லானே ஆனாலும் கைப் பொருள் ஒன்று உண்டாயின் - கல்வி கற்காதவன் ஆனாலும் அவன் கையில் பொருள் மட்டும் இருந்தால்; எல்லோரும் சென்று எதிர்கொள்வர் - யாவரும் போய் அவனை உபசரிப்பார்கள்; இல்லானை இல்லாளும் வேண்டாள் - பொருள் இல்லாதவனை அவன் மனைவி கூட விரும்ப மாட்டாள்; ஈன்று எடுத்த தாய் வேண்டாள் - பெற்று வளர்த்த அன்னையும் விரும்பமாட்டாள்; அவன் வாயில் சொல் செல்லாது - அவன் கூறும் வார்த்தைக்கு மதிப்பே இருக்காது.

படியாதவன் என்றாலும் அவனிடம் பணம் இருந்தால் எல்லோரும் அவனை மதிப்பார்கள்; பணம் இல்லாதவனை அவன் மனைவி யும், பெற்ற தாயும்கூட விரும்பமாட்டார்கள்; அவன் பேச்சுக்கு மதிப்பு இருக்காது.

பூவாதே காய்க்கும் மரமும் உளமக்கள் உளும்
ஏவாதே நின்று உணர்வார் தாம் உளரே - தூவா
விரைத்தாலும் நன்று ஆகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு 35

பூவாதே காய்க்கும் மரமும் உள - பூக்காமல் காய்க்கின்ற மரங்களும் உண்டு; மக்கள் உளும் ஏவாதே நின்று உணர்வார் உளர் - மக்களிடையேயும் சொல்லாமலே தாமாகவே அறிந்து செய்யக்கூடியவர்களும் இருக்கின்றனர்; தூவா விரைத்தாலும் நன்று ஆகாவித்து என - நன்றாகத் தூவி விதைத்தாலும் முளையாத விதைபோல; பேதைக்கு உரைத்தாலும் தோன்றாது உணர்வு - மூடனுக்கு விளக்கமாகச் சொன்னாலும் அறிந்து கொள்ளமாட்டான்.

பூக்காமல் காய்க்கின்ற மரங்கள் இருப்பதைப்போல, மனிதர்களிடையேயும் குறிப்பு அறிந்து செயலாற்றக் கூடியவர்களும் இருக்கின்றனர். நன்றாக விதைத்த போதிலும் முளைக்காத விதையைப் போல, என்ன சொன்னாலும் உணர இயலாத மூடர்களும் இருக்கின்றனர்.

நண்டு சிப்பிவேய் கதலி நாசமுறும் காலத்தில்
கொண்ட கரு அளிக்கும் கொள்கைபோல் - ஒண்தொடி
போதம் தனம் கல்வி போன்ற வரும் காலம் அயல்
மாதர் மேல் வைப்பார் மனம் 36

ஒண் தொடி - ஒளி மிக்க வளையல் அணிந்தவளே; நண்டு சிப்பி வேய் கதலி - நண்டும் முத்துச் சிப்பியும் மூங்கிலும் வாழையும்; நாசம் உறும் காலத்தில் - நாம் அழியும் காலத்தில்; கொண்ட கரு அளிக்கும் கொள்கை போல - உள்ளே கொண்ட கருக்களை (அதாவது குஞ்சு, முத்து, அரிசி, காய்க்குலை ஆகியன) ஈனும் தன்மை போல; போதம் தனம் கல்வி போன்ற வரும் காலம் - ஞானமும் செல்வமும் வித்தையும் அழியும் காலத்திலே; அயல் மாதர் மேல் மனம் வைப்பார் - பிற பெண்கள் மீது ஆசை கொள்வார்கள்.

நண்டு, முத்துச்சிப்பி, வாழை, மூங்கில் ஆகியவற்றில் கருவே அவற்றை அழித்துவிடும். ஒருவருடைய ஞானம், செல்வம், வித்தை அழியும் காலத்தில் பிற பெண்களை நாடிச் செல்வர்.

வினைப் பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்
அனைத்தாயநூலகத்தும் இல்லை - நினைப்பது எனக் கண்ணுறுவது
அல்லால் கவலைப்படேல் நெஞ்சேமெய்
விண் உறுவார்க்கு இல்லை விதி 37

வினைப் பயனை வெல்வதற்கு - முன் பிறவியில் செய்த தீவினையின் பயனை வெற்றி காண்பதற்கு; வேதம் முத லாம் அனைத்து ஆயநூல் அகத்தும் இல்லை - வேதம் முத லான எல்லா நூல்களையும் கற்பதனால் பயன் இல்லை; நெஞ்சே - மனமே; கவலைப்படேல் - கவலையுறாதே; மெய் விண் உறுவார்க்கு - மெய்யாகிய முக்தி நெறி நிற்பவருக்கு; நினைப்பது எனக் கண்ணுறுவது அல்லால் - அவர் நினைப்பது போல் தோன்றுமே அன்றி; விதி இல்லை - விதி என ஒன்று இல்லை.

பிறவியால் உண்டாகும் வினைப்பயனை வெற்றி காண்பதற்கு வேதம் முதலான நூல்களில் ஆதாரம் இல்லை; முக்தி நெறி யாகிய தியான சமாதிகளில் ஆழ்ந்திருப்போருக்கு நினைப்பது போல தோன்றும்; விதி அவர்களை துன்புறுத்தாது.

நன்று என்றும் தீது என்றும் நான் என்றும் தான் என்றும்
அன்று என்றும் ஆம் என்றும் ஆகாதே - நின்ற நிலை
தானதாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள் 38

நன்று என்றும் - இது நல்லது எனவும்; தீது என்றும் - தீயதும் எனவும்; நான் என்றும் - இதை நான் செய்தேன் எனவும்; தான் என்றும் - இது அவன் செய்தது எனவும்; அன்று என்றும் - இது அல்லாதது எனவும்; ஆம் என்றும் - இது ஆகும் எனவும்; ஆகாதே நின்ற நிலை - பேதம் இல்லாமல் இரண்டறக் கலந்து நின்ற நிலையே; தான் அதுவாம் தத்துவமாம் - தான் அதுவாகின்ற உண்மை நிலையாகும்; தேடும் பொருள் - மெய்ப் பொருளாகிய இறைவனைத் தேடுவது; சம்பு அறுத்தார் யாக்கைக்குப் போனவா - புல்லை அறுத்தவர் அதைக் கட்டுவதற்கு அதுவே அமையும் என அறியாமல் கயிறு தேடிப் போனதை ஒக்கும்.

நல்லது, தீயது, நான் அவன், இல்லை, ஆம் ஆகிய பேதங்களைக் கடப்பதேதான் அது வாழும் உண்மைப் பொருள் ஆகும். புல்லை அறுத்தவர் அதை கட்டுவதற்குக் கயி றைத் தேடிச் சென்றதைப் போல இறைவன் எங்கோ இருப்பதாக எண்ணி அலைவது வீணாகும்.

முப்பதாம் ஆண்டு அளவில் மூன்றற்று ஒரு பொருளை
தப்பாமல் தன்னுள் பெறான் ஆயின் - செப்பும்
கலை அளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்
முலை அளவே ஆகுமாம் மூப்பு 39

முப்பதாம் ஆண்டு அளவில் - முப்பது வயது ஆகும் பொழுது; மூன்று அற்று - காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்று வித ஆசைகளை நீக்கி; ஒரு பொருளை - ஒரே பொருளான இறைவனை; தப்பாமல் தன்னுள் பெறான் ஆயின் - தவறாமல் அனுபவ உணர்வால் அடையாமல் போனால்; காரிகையாற் தங்கள் மூப்புமுலை அளவே ஆகுமாம் - அழகான பெண்கள் முதுமையில், தங்களுடைய தனங்களுக்கு ஏற்ப இருப்பது போல; செப்பும் கலை அளவே ஆகுமாம் - கற்றதையே திருப்பித் திருப்பிக் கூறிக் கொண்டிருக்கும் அளவில்தான் இருப்பான்.

முப்பது வயது அளவில் காமம், வெகுளி, மயக்கம் ஆகிய மூன்றையும் ஒழித்து, மெய்ப் பொருளான இறைவனை அடையும் வழியை அறியாதவன் கிளிப் பிள்ளையைப் போல கற்றதையே உருப்போட்டு ஒப்புவிப்பவன் போன்றவன் ஆவான்.

தேவர் குறளும் திருநான் மறை முடிவும்
மூவர் தமிழும் முனி மொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகம் என்று உணர் 40

தேவர் குறளும் - திருவள்ளுவருடைய திருக்குறளும்; திருநான் மறை முடிவும் - சிறப்பான நான்கு வேதங்களின் முடிவாகிய உபநிடதங்களும்; மூவர் தமிழும் - திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய தேவாரமான தமிழ் மறையும்; முனி மொழியும் - மாணிக்கவாசகர் அருளிய; கோவை திருவாசகமும் - திருக்கோவையாரும்; திருவாசகமும்; திருமூலர் சொல்லும் - திருமூலர் அருளிய திருமந்திரமும்; ஒரே வாசகம் என்று உணர் - அவையாவும் ஒரு கருத்தைக் கூறுவன என்பதை உணர்வாயாக.

திருக்குறள், தேவாரம், திருக்கோவையார், திருவாசகம், நான்கு வேதங்களின் உபநிடதங்கள், திருமந்திரம் ஆகிய அனைத்தும் ஒரு பொருளையே உணர்த்துகின்றன என்பதை அறிந்து கொள்வாயாக.

[நல்வழி மூலமும் உரையும் முற்றும்]

நன்னெறி

கடவுள் வாழ்த்து

மின்னெறி சடாமுடி விநாயகன் அடிதொழ
நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே

மின் எறி - மின்னல் போன்ற ஒளி வீசுகின்ற; சடாமுடி - சடைமுடியுடைய; விநாயகன் அடி தொழ - விநாயகப் பெருமான் திருவடிகளை வணங்குதலால்; நன்னெறி வெண்பா நாற்பதும் வருமே - நன்னெறி என்னும் நூலில் உள்ள நாற்பது வெண்பாக்களும் மனதில் பதியும்.

என்று முகமன் இயம்பாதவர் கண்ணும்
சென்று பொருள் கொடுப்பர் தீது அற்றோர் - துன்று சுவை
பூவின் பொலி குழலாய்! பூங்கை புகழவோ
நாவிற்கு உதவும் நயந்து 1

பூவின் பொலி குழலாய் - மலர் சூடி விளங்குகின்ற கூந்தலையுடையவளே; பூங்கை - அழகான கையானது; புகழவோ - புகழ்ச்சி கருதியோ; நாவிற்கு - நாக்குக்கு; துன்று சுவை - மிகுந்த சுவையுடைய உணவினை; நயந்து உதவும் - விரும்பிக் கொடுக்கும்; தீது அற்றோர் - குற்றம் இல்லாத உள்ளத்தவராகிய பெரியோர்; என்று முகமன் இயம்பாதவர் கண்ணும் - எந்த நாளிலும் தமக்கு உபசார வார்த்தைகளைக் கூறாதவரிடத்தும்; சென்று பொருள் கொடுப்பர் - தாமே வலிய சென்று அவருக்குப் பொருள் கொடுத்து உதவுவார்.

அழகான கைகள், நாவுக்கு ருசியான உணவுப் பொருள்களை புகழ்ச்சி கருதியா விரும்பிக் கொடுக்கின்றன; மாசற்ற மனத்தினரான பெரியோர்; தம்மை உபசரித்தவர்களிடத்தில் தாமே வலியச் சென்று பொருள் கொடுத்து உதவி புரிவார்.

மாசற்ற நெஞ்சுடையார் வன்சொல் இனிது ஏனையவர்
பேசுற்ற இன்சொல் பிறிது என்க - ஈசற்கு
நல்லோன் எறி சிலையோ நன்னுதால் ஒண்கரும்பு
வில்லோன் மலரோ விருப்பு 2

நல்நுதால் - நல்ல நெற்றியையுடையவளே; மாசு அற்ற நெஞ்சு உடையார் வன் சொல் இனிது - குற்றமற்ற மனத்தினரின் கடுஞ்சொல்லும் இனிய சொல்லாகும்; ஏனையவர் பேசுற்ற இன்சொல் பிறிது என்க - குற்றமுள்ளவரின் இனிய சொல் கொடியதாகும் என்று அறிவாயாக; ஈசற்கு - இறைவனுக்கு; நல்லோன் எறிசிலையோ - அன்புடையவரான சாக்கிய நாயனார் அன்போடு எறிந்த கல்லோ; ஒண் கரும்பு வில்லோன் மலரோ - கரும்பு வில்லையுடைய மன்மதன்; மலரோ - மலர்க்கணையோ; விருப்பு எது விருப்பந்தந்தது.

தூய உள்ளத்தினர் கூறும் கடுஞ்சொற்கள் நன்மையே தரும்; கபடமானவர் கூறும் இனிய சொற்கள் துன்பம் விளைவிக்கும். இறைவன்மீது பக்தியால் கல்லை எறிந்த சாக்கிய நாயனாருக்கு அருள் பாலித்தார்; மலர்க்கணை எய்திய மன்மதனை எரித்தார்.

தங்கட்கு உதவிலர் கைத்தாம் ஒன்று கொள்ளின் அவர்
தங்கட்கு உரியவரால் தாம் கொள்க - தங்க நெடும்
குன்றினால் செய்தனைய கொங்கையாய் ஆவின் பால்
கன்றினால் கொள்ப கறந்து **3**

நெடும் தங்கக் குன்றினால் கொங்கையாய் - பொன்மலையால் செய்தது போன்ற தனங்களையுடையவளே; ஆவின்பால் கன்றினால் கறந்து கொள்ப - பசுவின் பாலை கன்றைக் காட்டிக் கறந்து கொள்வார்கள்; (அது போல) தங்கட்கு உதவிலர்கை - தங்களுக்கு உதவாதவர்களுடைய கையிலிருந்து; தாம் ஒன்று கொள்ளின் - தாங்கள் ஒரு பொருளை பெற விரும்பினால்; அவர்தங்கட்கு உரியவரால் தாம் கொள்க - அவர்களுக்கு வேண்டியவரால் அந்தப் பொருளைப் பெற்றுக் கொள்வீர்களாக.

தனக்கு உதவி புரியாதவரிடத்திலிருந்து ஒரு உதவி பெற விரும்பினால் கன்றைக் காட்டி பசுவின் பாலை கறப்பதுபோல், அவருக்கு வேண்டியவர் எவரோ அவரைக் கொண்டு அந்த உதவியைப் பெற்று கொள்வாயாக.

பிறர்க்கு உதவி செய்யார் பெரும் செல்வம் வேறு
பிறர்க்கு உதவியாக்குபவர் பேறாம் - பிறர்க்கு உதவி
செய்யாக் கருங்கடல் நீர் சென்று புயல்முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு 4

பிறர்க்கு உதவி செய்யா - மற்றவர்களுக்கு உபகாரம் செய்யாத; கருங்கடல் நீர் - கருமையான கடலின் நீரை; புயல் சென்று முகந்து - மேகமானது போய் மொண்டு வந்து; பிறர்க்குப் பெய்யாக் கொடுக்கும் - பிறருக்கு மழையாகப் பொழியும்; (அதுபோல) பிறருக்கு உதவி செய்யார் பெருஞ்செல்வம் - பிறருக்கு உபகாரம் செய்யாதவருடைய பெரிய செல்வமானது; வேறு - வேறான போதிலும்; பிறர்க்கு உதவி ஆக்குபவர் பேறாம் - பிறருக்கு உபகாரம் செய்பவருடைய செல்வமாகும்.

கடல்நீரை மேகம் கொண்டு சென்று மழையாகப் பொழிவது போல, பிறருக்கு உதவாதவர்களுடைய பெருஞ்செல்வத்தை, யார் எடுத்து அனுபவிக்கிறாரோ அவர் தம்முடையதாகவே பாவிப்பார்.

நீக்கம் அறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர் பெருமை நொய்தாகும் - பூக்குழலாய்
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமை போல்
புல்லினும் திண்மை நிலை போம் 5

பூக்குழலாய் - மலர்களைச் சூடிய கூந்தலையுடையவளே; நெல்லின் உமி சிறிது நீங்கி - நெல்லின் உமியானது சிறிது விலகி; பழமை போல் புல்லினும் - முன்போலவே சேர்ந்தாலும்; திண்மை நிலை போம் - முளைக்கக் கூடிய வலிமை போய்விடும்; நீக்கம் அறும் இருவர் நீங்கிப் புணர்ந்தாலும் - நீங்க முடியாத உற்ற நண்பர் இருவர் நீங்கிப் பிறகு முன் போலவே கூடினாலும்; நோக்கின் அவர் பெருமை நொய்து ஆகும் - பார்க்கும் போது, அவர்களுடைய பெருமை குறைவாகும்.

நெல்லில் உமி சிறிது நீங்கி, மறுபடி இணைந்தாலும் முளைக்கும் வலிமையை இழந்துவிடும். நெருங்கிய நண்பர்கள் இருவர் வேற்றுமையால் பிரிந்து, மீண்டும் கூடிய போதிலும் அந்த நட்பு முன்போல் அவ்வளவு நெருக்கமாக இருக்காது.

காதல் மலையாளும் காதலனும் மாறின்றித்
தீதில் ஒருகருமம் செய்பவே - ஓது கலை
எண்ணிரண்டும் ஒன்றுமதி என் முகத்தாய் நோக்கல் தான்
கண் இரண்டும் ஒன்றையே காண் 6

ஓது - புகழ்ந்து கூறப்படுகின்ற; எண்ணிரண்டு கலையும் ஒன்றும் - பதினாறு கலைகளும் பொருந்திய; மதி என முகத்தாய் - சந்திரன் என கூறத் தகும் முகம் உடையவளே; கண் இரண்டும் - இரண்டு கண்களும்; நோக்கல் - பார்த்தல்; ஒன்றையே - ஒரு பொருளையே; (அதுபோல) காதல் மனையாளும் காதலனும் - அன்புடைய மனைவியும் கணவனும்; மாறு இன்றி தீது இல் ஒரு கருமமே செய்ப - வேறுபாடு இல்லாமல் குற்றமற்ற ஒரு காரியத்தையே செய்வர்.

இரண்டு கண்களும் சேர்ந்து ஒரு பொருளைப் பார்ப்பது போல அன்புள்ள கணவனும் மனைவியும் வேற்றுமை இன்றி, நல்ல காரியத்தையே செய்வார்கள்.

கடலே அனையம் யாம் கல்வியால் என்னும்
அடலேறு அனைய செருக்கு ஆழ்த்தி - விடலே
முனிக்கரசு கையால் முகந்து முழங்கும்
பனிக்கடலும் உண்ணப் படும் 7

முழங்கும் பனிக்கடலும் - முழங்குகின்ற குளிர்ச்சியுடைய கடலும்; முனிக்கு அரசு கையால் - முனிவர்களுக்கெல்லாம் தலைவரான அகத்திய முனிவர் கையால்; முகந்து உண்ணப்படும் - மொண்டு பருகப்படும்; (ஆதலால்) யாம் - நாம்; கல்வியால் கடல் அனையம் - கல்வியில் கடலுக்கு நிகர் ஆவோம்; என்னும் - என்று; அடல் ஏறு அனைய செருக்கு - வலிமையுள்ள ஆண் சிங்கம் என்ற கர்வத்திலே; ஆழ்த்திவிடலே - ஆழ்ந்து விடாதீர்கள்.

முனிவர்களிலே பெரியவரான அகத்திய முனிவர் கடலை கையால் மொண்டு குடித்துவிட்டார்; நாம் கல்விக் கடல், வலிமையான ஆண் சிங்கம் என்பன போன்ற கர்வத்திலே ஆழ்ந்து விடக்கூடாது.

உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் காத்துக்
கொள்ளும் குணமே குணம் என்க - வெள்ளம்
தடுத்தல் அரிதோ தடம் கரைதான் பேர்த்து
விடுத்தல் அரிதோ விளம்பு 8

உள்ளம் கவர்ந்து எழுந்து ஓங்கு சினம் - மனதைக் கொள்ளை கொண்டு எழுந்து அதிகரிக்கின்ற கோபத்தை; காத்துக் கொள்ளும் குணமே குணம் என்க - அடக்கிக் கொள்ளும் குணமே அருமையான குணம் என்று அறிவாயாக; வெள்ளம் தடுத்தல் அரிதோ - பெருகி வரும் வெள்ளத்தைக் கரை கட்டி தடுத்தல் அரிதோ; தடம் கரை பேர்த்து விடுத்தல் அரிதோ - கட்டப்பட்டுள்ள கரையை உடைத்து வெள்ளத்தை வெளியே விடுதல் அரிதோ; விளம்பு - கூறுவாயாக.

வெள்ளத்தைக் கரைபோட்டுத் தடுப்பது அரியதா? அல்லது கரையை உடைத்து விடுவது அரியதா? சீறி எழுகின்ற கோபத்தை அடக்கிக் கொள்ளும் குணமே அருமையானதாகும்.

மெலியோர் வலிய விரவலரை அஞ்சார்
வலியோர் தமைத் தாமருவில் - பலியேல்
கடவுள் அவிர் சடைமேல் கட்செவி அஞ்சாதே
படர் சிறையப் புள் அரசைப் பார்த்து 9

பலி ஏல் - பக்தர்களுடைய பூசையை ஏற்றுக்கொள்ளும்; கடவுள் - சிவபெருமானது; அவிர்சடை மேல் கட்செவி - முடிமீதுள்ள பாம்பானது; படர்சிறை - விரிந்த சிறகையுடைய; அப்புள் அரசைப் பார்த்து - பறவைகளுக்கெல்லாம் அரசனான கருடனைப் பார்த்து; அஞ்சாது - பயப்படுவதில்லை; (அவ்வாறே) மெலியோர் - வலிமை குறைந்தவர்; வலிய விரவலரை - வலிமை மிக்க பகைவருக்கு; தாம் வலியோர் தமை மருவில் அஞ்சார் - தாம் அவரைக் காட்டிலும் வலிமை மிக்கவரைச் சேர்ந்தால் பயப்படமாட்டார்.

சிவபெருமான் முடிமீது உள்ள பாம்பானது, பறவைகளுக்கெல்லாம் அரசனான கருடனைப் பார்த்துப் பயப்படுவதில்லை. வலிமை குன்றியவரானாலும் வலிமை மிக்கவரிடம் சேர்ந்து கொண்டால் பலம் பொருந்திய பகைவனைக் கண்டு பயப்பட வேண்டியதில்லை.

தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்க்கிற்பார் விழுமியோர் - திங்கள்
கறையிருளை நீக்கக் கருதாது உலகில்
நிறை இருளை நீக்கும் மேல் நின்று 10

திங்கள் - சந்திரன்; கறை இருளை நீக்கக் கருதாது - தனது களங்கமாகிய இருளை நீக்க நினையாமல்; மேல் நின்று உலகின் நிறை இருளை நீக்கும் - வானத்தில் நின்று உலகத்து இருளை நீக்குவான்; (அதுபோல்) விழுமியோர் - மேலோர்; தம் குறைவு தீர்வு உள்ளார் - தம்முடைய குறை நீங்குவதை நினை யாமல்; தளர்ந்து - மனம் இளகி; பிறர்க்கு உறும் - பிறருக்கு வரும்; வெங்குறையை - துன்பத்தை; தீர்க்கிற்பார் - நீக்குவார்.

சந்திரன் தன்னுடைய களங்கத்தை நீக்கிக்கொள்ள நினையா-மல் வானத்திலே நின்று உலகின் இருளைப் போக்குவது போல், மேன்மை மிக்கவர் தன் துன்பத்தைப் பெரிதாகக் கருதாமல் பிறருக்கு நேரிட்ட துன்பத்தை நீக்குவார்.

பொய்ப் புலன்கண் ஐந்து நோய் புல்லியர் பால் அன்றியே
மெய்ப்புலவர் தம்பால் விளையாவாம் - துப்பின்
சுழற்றும் கொல் கல்தூணைச் சூறாவளி போய்
சுழற்றும் சிறுபுன் துரும்பு 11

சூறாவளி போய் - சுழற் காற்றானது சென்று; சிறு புல் துரும்பு - சிறிய அற்பமான துரும்பை; சுழற்றும் - எடுத்துச் சுழலச் செய்யும்; துப்பின் - அது தன் வலிமையால்; கல் தூணைச் சுழற்றும் கொல் - கல் கம்பத்தைச் சுழலச் செய்யுமோ - சுழற்ற மாட்டாது; (அதுபோல) பொய்ப் புலன்கள் ஐந்தும் - பொய்யாகிய ஐந்து புலன்களும்; புல்லியர் பால் அன்றி - கீழானவர்களிடம் அன்றி; மெய்ப் புலவர் தம்பால் - மெய்யறிவு உடையவரிடத்திலே; நோய் விளையா - துன்பத்தை உண்டாக்க மாட்டா.

சிறு துரும்பைச் சூறாவளிக் காற்று சுழலச் செய்யும்; தன் வலிமையால் கல்தூணைச் சுழற்றுமோ? பொய்யான புலன்கள் ஐந்தும் எளியவர்களை துன்புறுத்தும்; மெய்யறிவுடையோரை ஒன்றும் செய்யமாட்டா.
(புலன்கள் ஐந்து; ஓசை, ஊறு, உருவம், சுவை, நாற்றம் என்பன)

வருந்தும் உயிர் ஒன்பான் வாயில் உடம்பில்
பொருந்துதல் தானே புதுமை - திருந்திழாய்
சீதநீர் பொள்ளல் சிறு குடத்து நில்லாது
வீதலோ? நிற்றல் வியப்பு 12

திருந்து இழாய் - திருந்திய அணிகளை அணிந்துள்ள பெண்ணே; சீதநீர் - குளிர்ந்த நீரானது; பொள்ளல் சிறு குடத்து நில்லாது வீதலோ - ஓட்டைக் குடத்தில் நில்லாது ஒழுகு வதோ (ஆச்சரியம்); நிற்றல் வியப்பு - நிற்பதே ஆச்சரியமாகும்; (அதுபோல) வருந்தும் உயிர் - துன்புறும் உயிரானது; ஒன்பான் வாயில் உடம்பில் பொருந்துதலே புதுமை - ஒன்பது துவாரங்களையுடைய உடம்பிலே தங்குதல் ஆச்சரியம்.

ஓட்டையுள்ள குடத்தில் நீர் நிற்காததும் ஆச்சரியம்; நிற்பதும் ஆச்சரியம். ஒன்பது துவாரங்களையுடைய இந்த உடலிலிருந்து வருந்தும் உயிரானது ஓடாமல் இருக்கின்றதே அதுவே ஆச்சரியம் அல்லவா?

பெருக்க மொடு சுருக்கம் பெற்ற பொருட்டு ஏற்ப
விரும்பமொடு கொடுப்பர் மேலோர் - சுரக்கும்
மலையளவு நின்ற முலைமாதே மதியின்
கலையளவு நின்ற கதிர் 13

மதியன் கதிர் கலை அளவு நின்ற - சந்திரனுடைய கிரணங்கள் வளர்வதையும் தேய்வதையும் பொருந்திய கலைகளின் அளவாக இருக்கும்; (அதுபோல) மேலோர் - பெரியோர்; பெருக்கமோடு சுருக்கம் பெற்ற பொருட்டு ஏற்ப - வளர்வதையும் குறைவதையும் பொருந்திய செல்வத்துக்கு இசைய; விருப்பமொடு கொடுப்பர் - அன்புடன் பிறருக்கு அளிப்பர்.

சந்திரனது ஒளியானது வளர்வதையும் தேய்வதையும் பொறுத்து இருப்பது போல், மேலோர் தம்முடைய செல்வ நிலையின் ஏற்ற இறக்கத்தை அனுசரித்து அன்போடு வழங்குவர்.

தொலையாப் பெரும் செல்வத் தோற்றத்தோம் என்று
தலையாயவர் செருக்குச் சார்தல் இலையால்
இரைக்கும் வண்டு ஊதும் மலர் ஈர்ங்கோதாய் மேரு
வரைக்கும் வந்தன்று வளைவு 14

இரைக்கும் வண்டு ஊதும் - ரீங்காரம் செய்யும் வண்டுகள் ஊதுகின்ற; மலர் ஈர்ங் கோதாய் - குளிர்ந்த மலர் மாலை அணிந்தவளே; மேரு வரைக்கும் வளைவு வந்தன்று - அசை யாமல் இருந்த மகா மேரு - மலைக்கும் ஒரு சமயம் வளைவு வந்து; (ஆதலால்) தலையாயவர் - முதன்மையான அறிஞர்கள்; தொலையா - அழியாத; ப்ெருஞ் செல்வம் - பெரிய செல்வத்திலே; தோற்றத்தோம் என்று - பிறந்திருக்கிறோம் என்று; செருக்குச் சார்தல் இலை - கர்வம் கொள்வது இல்லை.

மகாமேரு மலைக்குக்கூட ஒரு சமயம் வளைவு வந்தது; அழியாத பெருஞ்செல்வத்தைப் பெற்றிருக்கிறோம் என்னும் கர்வம் அறிவுடையோர்களிடம் இல்லை.

இல்லானுக்கு அன்பு இங்குஇடம் பொருளி ஏவல் மற்று
எல்லாம் இருந்தும் அவற்கு என் செய்யும் நல்லாய்
மொழியிலார்க்கு ஏதுமுது நூல் தெரியும்
விழியிலார்க்கு ஏது விளக்கு 15

நல்லாய் - நற்குணத்தவளே; மொழி இலார்க்கு முது நூல் ஏது? - பேச இயலாத ஊமைக்குப் பழமையான நூல்களால் என்ன பயன்; தெரியும் விழியிலார்க்கு விளக்கு ஏது - பார்வையற்றவர்களுக்கு விளக்கு எதற்கு? (அது போல) இங்கு அன்பு இல்லாதவனுக்கு - இவ்வுலகில் அன்பு இல்லாதவனுக்கு; இடம், பொருள் ஏவல் எல்லாம் இருந்தும் - இடமும் பொருளும் ஏவலாளரும் இருந்தும்; அவற்கு என் செய்யும் - அவனுக்கு என்ன பயன்?

ஊமைக்கு நூல்களும், குருடனுக்கு விளக்கும் எதற்கு? அன்பு இல்லாதவனுக்கு இடம் பொருள் ஏவல் முதலான வசதிகள் இருந்தும் அதனால் என்ன பயனை அடைந்தான்?

தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்து உயர்ந்தோர்
தம்மை மதியார் தமை அடைந்தோர் - தம்மின்
இழியினும் செல்வர் இடர் தீர்ப்பர் அல்கு
கழியினும் செல்லாதோ கடல் 16

கடல் - பெரிய கடலானது; அல்கு கழியினும் - தன்னை அடுத்த சிறிய உப்பங்கழியிலும்; செல்லாதோ - போய்ப் பாயாதோ; (போய்ப் பாயும்; அதுபோல) உயர்ந்தோர் - அறிவுடையோர்கள்; தமை அடைந்தோர் தம்மின் இழியினும் - தங்களைச் சார்ந்தவர்கள் தங்களைக் காட்டிலும் தாழ்ந்தவர்களாயினும்; தம்மையும் தங்கள் தலைமையையும் பார்த்துத் தம்மை மதியார் - தங்களையும் தங்களுடைய முதன்மை நிலையையும் எண்ணிப் பார்த்து தங்களைப் பெரிதாகக் கருதாமல்; செல்வர் இடர் தீர்ப்பார் (அவர்கள் இருக்கும் இடம் சென்று) அவர்களுடைய துன்பத்தை நீக்குவார்கள்.

கடலானது தன்னை அடுத்துள்ள உப்பங்கழியிலும் சென்று பாய்வது போல, மேன்மையானவர்கள் தம்மைச் சார்ந்தவர்கள் தாழ்ந்து இருப்பினும், தங்களைப் பெரிதாகக் கருதாமல், அவர்கள் இருக்குமிடம் சென்று அவர்களுடைய துன்பத்தை நீக்குவார்கள்.

எந்தை நல்கூர்ந்தான் இரப்பார்க்கு ஈந்து என்றவன்
மைந்தர் தம் ஈகை மறுப்பரோ - பைந்தொடீ!
நின்று பயன் உதவி நிற்பது அரம்பையின் கீழ்
கன்றும் உதவும் கனி **17**

பைந் தொடீ - பசும் பொன்னால் ஆன வளையல்களை அணிந்தவளே; எந்தை இரப்பார்க்கு ஈந்து நல்கூர்ந்தான் என்று - எங்கள் தகப்பனார் யாசிப்பவர்க்கு ஈந்து வறுமை அடைந்தார் என்று; அவன் மைந்தர் தம் ஈகை மறுப்பரோ - அவனுடைய புதல்வர்கள் கொடுப்பதை கை விடுவார்களோ; (விட மாட்டார்கள்) நின்று பயன் உதவி நில்லா - நின்று கொண்டு இலையும் காயும் ஆன பயனைக் கொடுத்து; (அதனால்) அழிவை அடைந்த; அரம்பையின் - வாழைமரத்தின்; கீழ்க் கன்றும் - கீழே நிற்கின்ற கன்றும் கனி உதவும் - பழத்தைக் கொடுக்கும்.

தங்களை தந்தை யாசிப்பவர்களுக் கெல்லாம் கொடுத்து வறுமை அடைந்தார் என்று எண்ணி, அவருடைய புதல்வர்கள் கொடாமல் இருப்பார்களா? இலையும் காயும் கொடுத்து அழிந்து வாழையின் கீழே தோன்றிய கன்றும் மரமாகி, காயும் இலையும் கொடுத்து உதவுகிறது.

இன்சொலால் அன்றி இருநீர், வியன் உலகம்
வன்சொலாா் என்றும் மகிழாதே - பொன் செய்
அதிர் வளையாய்! பொங்காது அழல் கதிரால் தண்என்
கதிர் வரவால் பொங்கும் கடல் 18

பொன் செய் அதிர் வளையாய் - ஒலிக்கின்ற பொன் வளையல்களையுடையவளே; கடல் தண் என்கதில் வரவால் பொங்கும் - குளிர்ந்த கிரணங்களையுடைய சந்திரன் வருகையினால் கடல்பொங்கும்; அழல் கதிரால் பொங்காது - வெம்மையான கிரணங்களையுடைய சூரியன் வருகையினால் பொங்காது; (அதுபோல) இரு நீர் வியன் உலகம் - கடல் சூழ்ந்த பரந்த உலகத்தில் உள்ளவர்; இன் சொலால் அன்றி வன்சொலால் என்று மகிழாது- இனிய வார்த்தைகளினால் அல்லாமல் கடுமையான வார்த்தைகளினால் எந்நாளும் மகிழ்ச்சி அடையமாட்டார்.

வெப்பம் மிகுந்த சூரியன் வருஸ்கயினால் கடல் பொங்காது; குளிர்ந்த சந்திரன் வருகையினால் கடல் பொங்கும்; கனி-வான சொற்களால் மகிழ்வார்கள்; சுடு சொற்களால் யாரும் மகிழ்வதில்லை.

நல்லோர் வரவால் நகைமுகம் கொண்டு இன்புறீஇ
அல்லோர் வரவான் அழுங்குவர் - வல்லோர்
திருந்தும் தளிர் காட்டி தென்றல் வரத் தேமா
வருந்தும் சுழற்கால் வர 19

தேமா - இனிப்பான கனியுடைய மாமரமானது; தென்றல் வர தளிர் காட்டி திருந்தும் - தென்றல் வீசும் போது தளிர்விட்டு செழிப்புறும்; சுழல்கால் வர வருந்தும் - சுழற் காற்று வீசும்போது வருந்தும்; (அதுபோல) வல்லோர் - கல்வியில் வல்லவர்; நல்லோர் வரவால் முகநகை கொண்டு இன்பு நீஇ - நற்குணம் உள்ளவருடைய வருகையினால் முக மலர்ச்சியோடு இன்புற்று; அல்லோர் வரவால் அழுங்குவார் - தீயவர் வருகையைக் கண்டு துன்புறுவார்.

தென்றல் வீசத் தொடங்கியதும் மாமரம் தளிர் விட்டுச் செழிப்படையும் சுழல்காற்று வீசுகையில் துன்புறும்; நற்குணம் உள்ளவர் வருகையால் கல்வியில் வல்லவர் முகமலர்ந்து இன்புறுவார்; தீயவர் வருகையால் மனம் வெதும்புவார்.

பெரியவர் தம் நோய் போல் பிறர் நோய் கண்டு உள்ளம்
எரியின் இழுது ஆவர் என்க - தெரி இழாய்
மண்டு பிணியால் வருந்தும் பிற உறுப்பைக்
கண்டு கலுழுமே கண் 20

தெரி இழாய் - தேர்ந்தெடுத்த ஆபரணங்களை அணிந்தவளே; கண்கள் - கண்கள்; மண்டு பிணியால் வருந்தும் பிற உறுப்பைக் கண்டு - முற்றிய நோயினால் துன்புறுகின்ற இதர அங்கங்களைப் பார்த்து; கலுழும் - அழும்; (அதுபோல) பெரியவர் - உயர்ந்தகுணம் உடையவர்; பிறர் நோய் கண்டு - மற்றவர்களுக்கு உண்டான நோயைப் பார்த்து; தம் நோய் போல உள்ளம் எரியின் இழுது ஆவர் என்க - தனக்கு வந்த நோய் போலக் கருதி நெருப்பிலே இட்ட நெய்போல உள்ளம் உருகுவர்; என்று அறிவீர்களாக.

முற்றிய நோயினால் வேதனையுறும் பிற அங்கங்களைப் பார்த்துக் கண்ணானது கலங்குவதுபோல, உயர் குணத்தோர், மற்றவர்களுடைய நோயைக் கண்டு தமக்கு வந்த நோய் போல எண்ணி நெருப்பில் இட்ட நெய் போல உருகுவார்.

எழுத்து அறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும்
எழுத்து அறிவார் காணின் இலையாம் - எழுத்து அறிவார்
ஆயும் கடவுள் அவிர் சடைமுன் கண்ட அளவில்
வீயும் சுரநீர் மிகை 21

சுரநீர் மிகை - ஆகாய கங்கையின் பெருக்கு; எழுத்து அறிவார் ஆயும் கடவுள் - எழுத்தின் பொருளை உணரும் அறிஞரால் ஆராய்கின்ற சிவபெருமானது; அவிர் சடை முன் கண்ட அளவில் - சடா முடியைப் பார்த்ததும்; வீயும் - அடங்கிவிடும்; (அதுபோல) எழுத்து அறியார் கல்விப் பெருக்கம் அனைத்தும் - எழுத்தின் உண்மைப் பொருளை உணராதவர்களுடைய

பெரும் அளவில் உள்ள ஏட்டுக் கல்வி எல்லாம்; எழுத்தறிவார் காணின் இலை - எழுத்தின் உண்மைப் பொருளை அறிந்தவர்களைக் கண்டால் ஒன்றும் இல்லாமல் போய்விடும்.

சிவபெருமானின் சடாமுடியைக் கண்டதும் ஆகாய கங்கையின் பெருக்கு அடங்கிவிடுவது போல எழுத்தின் உண்மைப் பொருளை உணராதவர்களின் கல்வி அறிவானது உண்மைப் பொருளை அறிந்தவர் முன் ஒன்றும் இல்லாமல் போய்விடும்.

ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால்
மீக்கொள் உயர்வு இழிவு வேண்டற்க - நீக்கு
பவர் யார்? அரவின் பருமணி கண்டு என்று
கவரார் கடலின் கடு 22

அரவின் பருமணி நீக்குபவர் யார்? - பாம்பினிடம் நாகரத்தினம் இருப்பது கண்டு அதை எடுப்போர் யார்? கடலில் கடு என்றும் கவரார் - பாற்கடலில் உண்டான விஷத்தை ஒருவரும் கொள்ளமாட்டார்; (அதுபோல) மீக்கொள் உயர்வு இழிவு - மேலாகக் கருதும் உயர்வையும் கீழாகக் கருதும் இழிவையும்; ஆக்கும் அறிவான் அலது பிறப்பினால் வேண்டற்க - நற்பண்புகளை உண்டாக்குகின்ற அறிவினால் அல்லாமல் குறிப்பிட்ட சாதியில் பிறந்த காரணத்தினால் விரும்பாமல் இருந்து விடாதீர்கள்.

நல்ல பாம்பினிடம் உள்ள நாகரத்தினத்தை எடுப்பவர் யார்? பாற்கடலில் தோன்றிய ஆலகால விஷத்தைக் கொள்பவர் எவர்? பிறப்பின் காரணமாக உயர்வு தாழ்வு கூறாமல் அறிவால் மிக்கவரே உயர்ந்தவர் எனக் கொள்வீர்களாக.

பகர்ச்சி மடவார் பயில நோன்பு ஆற்றல்
திகழ்ச்சி தரு நெஞ்சத் திட்பம் - நெகிழ்ச்சி
பெறும் பூரிக்கின்ற முலைப் பேதாய்! பல்கால்
எறும்பு ஊரக் கல் குழியுமே 23

பெண்ணே! பல கால் எறும்பு ஊரக் கல் குழியும் - பல முறை எறும்புகள் ஊர்வதனால் கல்லும்தேயும்; (அதுபோல) மடவார் பகர்ச்சி பயில - பெண்களிடத்தில் பேசி பழகி வந்தாலும் கூட;

நோன்பு ஆற்றல் திகழ்ச்சி தரும் நெஞ்சத்திட்பம் நெகிழ்ச்சி பெறும் - தவத்தினால் அடைந்த ஒருவருடைய மன உறுதியானது நாளடைவில் தளர்ந்துவிடும்.

எறும்புகள் ஊர்வதனால் கல் தேய்வது போல், பெண்களுடன் ஆண்கள் பேசிப்பழகி வந்தாலும்கூட தவத்தினால் பெற்ற மன உறுதியானது நாளடைவில் தளர்ந்து விடும்.

உண்டு குணம் இங்கு ஒருவர்க்கு எனினும் கீழ்
கொண்டு புகல்வது அவர் குற்றமே - வண்டு மலர்ச்சேர்க்கை விரும்பும்
செழும் பொழில்வாய் வேம்பு அன்றோ
காக்கை விரும்பும் கனி 24

செழும் பொழில் வாய் - செழிப்பு மிகுந்த சோலையிலே; மலர்ச்சேர்க்கை வண்டு விரும்பும் - மலர்ப்படுக்கையை வண்டுகள் விரும்பும்; வேம்பு அன்றோ காக்கை விரும்பும் கனி - வேப்பம் பழத்தை அல்லவா காக்கைகள் விரும்பி ஓடும்; (அதுபோல) இங்கு ஒருவர்க்கு குணம் உண்டு எனினும் - இந்த உலகில் ஒருவருக்கு நற்குணங்கள் இருந்த போதிலும்; கீழ்க்கொண்டு புகல்வது அவர் குற்றமே - அற்பர்கள், அவருடைய குற்றங்களையே எடுத்துச் சொல்வார்கள்.

செழிப்பான சோலையிலே வண்டுகள் மலர்ப்படுக்கையை விரும்பிச் செல்லும். காக்கையோ வேப்பம் பழத்தைத் தேடி ஓடுவதுபோல, ஒருவரிடம் நற்குணங்கள் இருந்த போதிலும் அற்பர்கள் குற்றங்ளையே எடுத்துக் கூறிக் கொண்டிருப்பார்கள்.

கல்லா அறிவிற் கயவர்பால் கற்று உணர்ந்த
நல்லார் தமது கனம் நண்ணாரே - வில்லார்
கணையிற் பொலியும் கருங்கண்ணாய்! நொய்தாம்
புனையில் புகும் ஒண் பொருள் 25

வில்லார் கணையின் பொலியும் கருங்கண்ணாய் - வில்லோடு கூடிய அம்பு போன்ற புருவத்தோடு திகழ்கின்ற கருமை நிறக் கண்களையுடையவளே; புனையில் புகும் ஒண் பொருள்

நொய்தாம் - எளிதான தெப்பத்திலே சேர்ந்த கனமான பொருளும் இலகுவாகி விடும்; (அதுபோல) கல்லா அறிவின் கயவர் பால் - கல்வி அறிவற்ற கீழ்த் தரமானவரிடத்தே சேர்ந்தால்; கற்று உணர்ந்த நல்லார் தமது கனம் நண்ணார் - கற்றறிந்த நல்லவர் தம்முடைய அறிவை இழப்பார்.

தெப்பத்திலே வைக்கப்பட்ட கனமான பொருளும் எளிதாவது போல, கற்றறிந்த நல்லவர் கயவரிடத்திலே சேர்ந்தால் தம்முடைய அறிவையும் குணத்தையும் இழந்து விடுவார்.

உடலின் சிறுமை கண்டு ஒண் புலவர் கல்விக்
கடலின் பெருமை கடவார் - மடவரால்
கண் அளவாய் நின்றதோ காணும் கதிர் ஒளிதான்
விண் அளவாயிற்றோ விளம்பு 26

மடவரால் - இளமையுடைய பெண்ணே; ஒண்புலவர் உடலின் சிறுமை கண்டு - புலமை மிக்கவருடைய உடலின் தோற்றத்தைக் கண்டு; கல்விக் கடலின் பெருமை கடவார் - அவரிடம் உள்ள அறிவுக் கடலின் பெருமையை யாரும் அலட்சியம் செய்ய மாட்டார்; கதிர் காணும் ஒளி - சூரியனுடைய ஒளியோடு கூடிக் காண்கின்ற கருமணியின் பிரகாசமானது; கண் அளவு ஆய நின்றதே - காணுகின்ற அளவில் அடங்கி விட்டதா; விண் அளவு ஆயிற்றே விளம்பு - ஆகாயத்தின் அளவில் விரிந்திருக்கின்றதா சொல்லுவாயாக.

சூரிய ஒளியானது பார்க்கின்ற கண் அளவில் நிற்கின்றதா? வான அளவில் விரிந்து நிற்கின்றதா? உடலின் சிறுமையைக் கண்டு ஒருவருடைய அறிவாற்றின் பெருமையை அலட்சியம் செய்யக்கூடாது.

கைம்மாறும் உகவாமல் கற்று அறிந்தோர் மெய் வருந்திக்
தம்மால் இயல் உதவி தாம் செய்வார் - அம்மா
முளைக்கும் எயிறு முதிர் சுவை நாவிற்கு
விளைக்கும் வலியன தாம் மென்று 27

முளைக்கும் எயிறு - முளைக்கின்ற பற்கள்; நாவிற்கு - நாக்குக்கு; வலியன தாம் மென்று முதிர் சுவை விளைக்கும் - கடினமான தின் பண்டங்களைத் தானே மென்று கொடுத்து அதிகமான சுவையை உண்டாக்கும்; (அதுபோல) கற்று அறிந்தோர் - அறிஞர்; கைம்மாறு உகவாமல் - பிரதி உபகாரத்தை விரும்பாமல்; மெய் வருந்தித் தம்மால் இயல் உதவி தாம் செய்வார் - உடல் வருந்தி தன்னால் இயன்ற உதவிகளை தானே செய்வார்.

கடினமான தின்பண்டங்களை பற்கள் மென்று நாவுக்கு சுவை அளிப்பதுபோல, கற்றறிவாளர் பிரதிப் பிரயோசனம் கருதாமல் உடல் வருந்தி இயன்ற உதவியைச் செய்வர்.

முனிவினும் நல்குவர் மூதறிஞர் உள்ளம்
கனிவினும் நல்கார் கயவர் - நனி விளைவில்
காயினும் ஆகும் கதலிதான் எட்டி பழுத்து
ஆயினும் ஆமோ அறை 28

மூதறிஞர் முனிவினும் நல்குவர் - முதிர்ந்த அறிவுடையோர் கோபம் உள்ள காலத்திலும் கொடுப்பர்; உள்ளம் கனிவி னும் நல்கார் கயவர் - மனம் மகிழ்ச்சியோடு இருந்தாலும்கயவர் கொடுக்கமாட்டார்; கதலி நனி விளைவு இல் காயினும் ஆகும் - முற்றாதகாயானாலும் பயன்படும்; எட்டி பழுத்து ஆயினும் ஆமோ அறை - எட்டி பழுத்தாலும் பயன்படுமோ சொல்வாயாக.

முதிர்ந்த அறிவுடையோர் கோபமுற்ற போதிலும் கொடுத்து உதவுவார்; கயவர் களிப்போடு பேசினும் கொடுக்கமாட்டார்; பழுக்காத . காயானாலும் வாழை உணவுக்குப் பயன்படும்; எட்டிப்பழுத்து என்ன பயன்?

உடற்குவரும் இடர் நெஞ்சு ஓங்குபரத்து உற்றோர்
அடுக்கும் ஒரு கோடியாக - நடுக்கமுறார்
பண்ணிற் புகழும் பனிமொழியாய் அஞ்சுமோ
மண்ணிற் புலியை மதிமான் 29

பண்ணின் புகலும் பனி மொழியாய் - இசை போலப் பேசுகின்ற குளிர்ச்சியான சொல்லையுடையவளே; மதிமான் - சந்திரனிடம்

இருக்கும் மான்; மண்ணில் புலியை அஞ்சுமோ - பூமியில் உள்ள புலியைக் கண்டு பயப்படுமோ? (அதுபோல) நெஞ்சு ஓங்கு பரந்து உற்றோர் - உயர்ந்த பரம்பொருளினிடத்தில் மனதைச் செலுத்திய ஞானியர்; உடற்கு வரும் இடர் அடுக்கும் ஒரு கோடி ஆக - தம்முடைய உடலுக்கு வரும் துன்பங்கள் ஒரு கோடி அளவாக இருந்தாலும்; நடுக்கம் உறார் - மனம் கலங்க மாட்டார்.

வானத்துச் சந்திரனிடம் உள்ள மான், பூமியில் உள்ள புலியைக் கண்டு பயப்படாதது போல, பரம் பொருளிடத்தே மனத்தைச் செலுத்திய ஞானியரின் உடலுக்கு ஒரு கோடி துன்பங்கள் வந்தாலும் கலங்கமாட்டார்.

கொள்ளும் கொடும் கூற்றம் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங்கனிந்து அறம் செய்து உய்கவே - வெள்ளம்!
வருவதற்கு முன்னர் அணை கோலி வையார்
பெருகுதற் கண் என் செய்வார் பேசு 30

கொள்ளும் கொடும் கூற்றம் கொல்வான் குறுகுதல் முன் - உயிரைக் கொண்டு போகும் கொடுமையான எமன் கொல்லுவதற்கு வருமுன்னே; உள்ளம் கனிந்து அறம் செய்து உய்க - மனம் உவந்து தர்மங்களைச் செய்து உய்வீர்களாக; வெள்ளம் வருவதற்கு முன்னர் அணை கோலிவையார் - வெள்ளம் வருவதற்கு முன்பே கரையைக் கட்டி வைக்காதவர்; பெருகுதற் கண் என் செய்வார் பேசு - பெருகி வரும் பொழுது என்ன செய்வார்? சொல்வாயாக.

எமன் வந்து உயிரைக் கொண்டு செல்லு முன்னே மன உவந்து, தர்மம் செய்து உய்வீர்களாக! வெள்ளம் வருவதற்கு முன்னே அணை போடாதவர், வந்தபின் என்ன செய்வார்?

பேரறிஞர் தாக்கும் பிறர்துயரம் தாங்கியே
வீரமொடு காக்க விரைகுவார் - நேரிழாய்!
மெய்சென்று தாக்கும் வியன்கோல் அடிதன்மேல்
கை சென்று தாங்கும் கடிது 31

நேர் இழாய் - தகுதியான அணியுடையவளே; மெய் சென்று தாக்கும் வியன் கோல் அடி - உடலிலே போய் தாக்கும் பெரிய கொம்பினுடைய அடியை; கை கடிது சென்று தன்மேல் தாங்கும் - கை விரைவாகப் போய் தன் மீது தாங்கிக் கொள்ளும்; (அதுபோல) பேரறிஞர் பெரிய அறிவுடையவர்; தாக்கும் பிறர் துயரம் வீரமொடு தாங்கி - பிறரை வருத்தும் துன்பங்களை தைரியத்தோடு தாங்கள் ஏற்றுக்கொண்டு; காக்க விரைகுவார் - காப்பாற்றுவதற்கு முற்படுவர்.

உடலின் மேல் படும் கொம்பின் அடியை, கை தடுத்து தான் ஏற்றுக் கொள்வது போல, பிறரை வருத்தும் துன்பங்களை, பேரறிஞர்கள் தைரியத்தோடு சென்று காத்திடுவார்கள்.

பன்னும் பனுவல் பயன்தேர் அறிவிலார்
மன்னும் அறங்கள் வலியிலவே - தன்னுதால்!
காழ் ஒன்று உயர் திண் கதவு வலியுடைத்தோ
தாழ் ஒன்று இலதாயில் தான் 32

நல் நுதால் - நல்ல நெற்றியையுடையவளே; காழ் ஒன்று உயர்திண் கதவு - வயிரம் பொருந்திய உயர்ந்த உறுதியான கதவானது; தாழ் ஒன்று இலது ஆயின் வலி உடைத்தோ - தாழ்ப்பாள் இல்லாவிடில் உறுதியுடையதாகும்; (அதுபோல) பன்னும் பனுவல் பயன் தேர் அறிவு இலார் - நீதி நூல்களில் சொல்லப்படும் பயனை அறியும் ஆற்றல் இல்லாதவர் செய்யும்; மன்னும் அறங்கள் வலி இலவே - மிகுந்த தருமங்கள் உறுதி இல்லாதவை ஆகும்.

வயிரம் பொருந்திய உறுதியான கதவுக்கு தாழ்ப்பாள் இல்லாவிடில் உறுதி இல்லாததுபோல, நீதி நூல்களின் பயனை தேர்ந்து அறியும் ஆற்றல் இல்லாதவர்கள் செய்யும் தருமங்கள் பயன் தராது.

எள்ளாது இரப்ப இழிஞர் போற்றற்கு உரியர்
விள்ளா அறிஞர் அது வேண்டாரே - தள்ளாக்
கரை காப்பு உளது நீர் கட்டு குளம் அன்றிக்
கரை காப்பு உளதோ கடல் 33

நீர்கட்டு குளம் தள்ளாக் கரை காப்பு உளது - நீரைத் தேக்கி வைக்கின்ற சிறிய குளம் நீரைத் தள்ளாமல் கரையே காவலாக இருக்கிறது; அன்றிக் கடல் கரை காப்பு உளதோ - கடலுக்கு கரை காவலாக இருக்கிறதோ; (இல்லை; அதுபோல) இழிஞர் எள்ளாது இருப்பப் போற்றற்கு உரியர் - இழிவானவர்கள் தங்களைப் பிறர் இகழாமல் இருக்கும்படி காத்துக் கொள்வதற்கு உரியவர்; விள்ளா அறிஞர் அது வேண்டார் உரியவர் - நிறைந்த அறிவுடையோர் அங்ஙனம் வேண்டார் (விரும்பமாட்டார்)

சிறிய குளத்துக்கு கரை காப்பாக உள்ளது; பெரிய கடலுக்கு அவ்வாறு இல்லை; பிறர் இகழாமல் காத்துக் கொள்வது இழிவானவர்களுக்கே உரியது; அறிவுடையோர்க்கு அது தேவை இல்லை.

அறிவுடையார் அன்றி அது பெறார் தம்பால்
செறி பழியை அஞ்சார் சிறிதும் - பிறைநுதால்
வண்ணம் செய்வாள் விழியே அன்றி மறை குருட்டுக்
கண் அஞ்சுமோ இருளைக் கண்டு 34

பிறைநுதால் - பிறைபோன்ற நெற்றியையுடையவளே; வண்ணம் செய் வாள்விழியே அன்றி - அழகுமிக்க ஒளியையுடைய கண்களே அல்லாமல்; மறை குருட்டுக்கண் - ஒளி மறைந்த குருட்டுக் கண்கள்; இருளைக் கண்டு அஞ்சுமோ - இருட்டைக் கண்டு பயப்படுமோ (அதுபோல) அறிவுடையோர் அன்றி - அறி வுடையோர் அல்லாமல்; அது பெறார் - அவ்வறிவைப் பெறாத மூடர்; தம்பால் செறி பழியைச் சிறிதும் அஞ்சார் - தங்களுக்கு வரும் பழியைக் கண்டு சிறிதும் பயப்படமாட்டார்.

ஒளியுடைய விழிகள் இருளைக் கண்டு பயப்படும்; குருட்டுக்கண் பயப்படாது; அறிவுடையோர் தமக்கு வரும் வழிச் சொல்லைக் கண்டு அஞ்சுவர்; அறிவற்றவர் அஞ்சமாட்டார்.

கற்ற அறிவினரைக் காமுறுவார் மேன் மக்கள்
மற்றையர் தாம் என்றும் மதியாரே - வெற்றி நெடும்
வேல் வேண்டும் வாள் விழியாய்! வேண்டா புளிங்காடி
பால் வேண்டும் வாழைப்பழம் 35

வெற்றி நெடும் வேல் வேண்டும் வாள் விழியாய் - வெற்றியையுடைய நெடிய வேல்படை விரும்புகின்ற ஒளி பொருந்திய கண்களையுடையவளே; வாழைப்பழம் பால் வேண்டும் - வாழைப் பழத்தைப் பாலானது விரும்பும்; புளிங்காடி வேண்டா - புளிப்பான காடி நீரானது அதை விரும்புமோ?; (அதுபோல) கற்ற அறிவினரை மேன்மக்கள் காமுறுவர் - கற்றறிவாளரை *மேலோர் விரும்புவர்*; மற்றையர் என்றும் மதியார் - கீழோர் எப்பொழுதும் மதிக்கமாட்டார்

வாழைப்பழத்தை பால் விரும்பும்; புளிப்பான காடியை விரும்புமோ? கற்றறிந்தோரை மேலோர் விரும்புவர், கீழோர் எப்பொழுதும் மதிக்க மாட்டார்.

தக்கார்க்கே ஈவர் தகார்க்கு அளிப்பார் இல் என்று
மிக்கார்க்கு உதவார் விழுமியோர் - எக்காலும்
நெல்லுக்கு இறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக்கு இறைப்பாரோ போய் **36**

எக்காலும் நீர் நெல்லுக்கு இறைப்பதே இன்றி - எந்தக் காலத்திலும் நீரை நெற்பயிருக்கே இறைப்பது அல்லாமல்; காட்டு முளி புல்லுக்கு போய் இறைப்பாரோ - காட்டிலே உலரும் புல்லுக்குப் போய் இறைப்பாரோ, மாட்டார்; (அதுபோல) தக்கார்க்கே ஈவர் தகார்க்கு அளிப்பார் இல் என்று - தகுதியுடையவருக்கே கொடுப்பார்; தகுதியற்றவருக்குக் கொடுப்பவர் இல்லையென்று அறிந்து; விழுமியோர் - பெரியோர்; மிக்காருக்கு உதவார் - நெறி கடந்து சென்றோர்க்கு உதவமாட்டார்.

நெற்பயிருக்கே எப்பொழுதும் நீரை இறைப்பர்; புல்லுக்கு இறைப்பாரோ? தகுதியுடையோருக்கே பெரியோர் கொடுப்பார்; தகுதியற்றோர்க்கு கொடுக்க மாட்டார்.

பெரியோர் முன் தன்னைப் புகழ்ந்து உரைத்த பேதை
தரியாது உயர்வு அகன்று தாழும் - தெரியாய் சொல்
பொன் உயர்வு தீர்த்த புனர் முலையாய்! விந்தமலை
தன் உயர்வு தீர்ந்தன்று தாழ்ந்து **37**

பெரியார் முன் தன்னைப் புகழ்ந்து உரைத்தபேதை - பெரியோர் முன்னே தன்னைச் சிறப்பித்து கூறிய மூடன்; உயர்வு தரியாது அகன்று தாழும் - உயர்வைப் பொறுக்க மாட்டாமல் இழந்து தாழ்வு அடைவான்; விந்தியமலை தாழ்ந்து தன் உயர்வு தீர்ந்தன்று - அகத்திய முனிவர் முன்னே தற்பெருமை பேசிய விந்திய மலையானது அவர் அழுத்தியதால் தாழ்ந்து தன்னுடைய உயர்வு நீங்கியது; தெரியாய் கொல் - நீ அறியாயோ?

அகத்திய முனிவர் முன்னே தற்பெருமை பேசிய விந்திய மலை யானது தாழ்ந்ததை அறியாயோ? பெரியவர்கள் முன்னிலையில் தற்பெருமை பேசிய மூடன் தாழ்வு அடைவான்.

நல்லார் செய்யும் கேண்மை நாள்தோறும் நன்றாகும்
அல்லார் செய்யும் கேண்மை ஆகாதே - நல்லாய் கேள்
காய் முற்றின் தின்தீங் கனியாம் இளம் தளிர் தாள்
போய் முற்றின் என் ஆகிப் போம் 38

நல்லாய் கேள் - நற் குணம் உடையவளே, கேட்பாயாக, காய்முற்றின் தின் தீங்கனியாம் - காயானது பழுத்தால் தின்பதற்கு இனிய பழமாகும்; இளம் தளிர் நான் போய் முற்றின் என் ஆகிப்போம் - இளந்தளிரானது நாள் சென்று முற்றினால் என்ன ஆகும்; (அதுபோல) நல்லார் செய்யும் கேண்மை நாள் தோறும் நன்று ஆகும். நல்லோருடன் கொள்ளும் நட்பானது நாள்தோறும் நன்மையாகி வளரும்; அல்லார் செய்யும் கேண்மை ஆகாது - பொல்லாதவருடன் கொள்ளும் நட்பானது அவ்வாறு ஆகாது.

காய் முற்றினால் சுவையுடைய பழம் ஆகும். இளம் தளிர் முற்றினால் என்ன பயன்? நல்லவருடைய நட்பானது நாள்தோறும் நன்மை ஆகும். பொல்லாதவருடைய நட்பானது அவ்வாறு ஆகாது.

கற்று அறியார் செய்யும் கடுநம்பும் தாங்கவடி
உற்றுழியும் தீமை நிகழ்வு உள்ளதே - பொற்றொடீ!
சென்று படர்ந்த செழுங்கொடி மெண் பூ மலர்ந்த
அன்றே மனமுடைய தாம் 39

பொன் தொடீ - பொன்வளையல்களையுடையவளே; சென்று படர்ந்த செழுற்கொடி மென் பூ - படர்ந்த செழிப்பான கொடியின் மெல்லிய மலரானது; மலர்ந்தஅன்றே மணம் உடையது ஆம் - மலர்ந்த பொழுதே மணம் தந்து பின்னர் கெட்டு விடும்; (அதுபோல) கற்று அறியார் செய்யும் கடு நட்பும் - கல்வி அறிவு இல்லாதவருடன் கொள்ளும் மிகுதியான நட்பும்; தாம் கூடிய உற்று உழியும் - நெடுங்காலம் தாங்கள் கூடி இருந்த போதிலும்; தீமை நிகழ்வு உள்ளதே - தீமை அளிப்பதேயாகும்.

பூவானது மலர்ந்த அன்றே மணம் தந்து பின் கெடுவது போல கல்வி அறிவு இல்லாதவருடன் கொள்ளும் நெருங்கிய நட்பானது நெடுங்காலம் சேர்ந்திருந்த போதிலும் தீமை அளிக்கும்.

பொன் அணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத் தாம மற்று ஒவ்வார் - மின்னுமணி
பூணும் பிற உறுப்புப் பொன்னே அது புனையாக்
காணும் கண் ஒக்குமோ காண் 40

பொன்னே - இலக்குமியைப் போன்றவளே; மின்னம் அணி பூணும் பிற உறுப்பு - ஒளி வீசுகின்ற ஆபரணங்களை அணிந்து கொள்ளுகின்ற கைகால் முதலான அவயங்களானவை; அது புனையாக் காணும் கண் ஒக்குமோ? - அதை அணியாத பார்க்கின்ற கண்களுக்கு ஒப்பாகுமா? (ஆகாது; அதுபோல); பொன் அணியும் வேந்தர் - தங்க ஆபரணங்களால் அலங்கரித்துக் கொள்ளும் அரசர்கள்; புனையாப் பெருங்கல்வி மன்னும் அறிஞரை ஒவ்வார் - ஆபரணங்களை அணியாத பெரிய கல்வி நிபுணர்களுக்கு ஒப்பாக மாட்டார்.

ஒளி தரும் தங்க ஆபரணங்களை அணியும் அவயவங்கள், அவற்றை அணியாத விழிகளுக்கு ஒப்பாகுமா? ஆபரணங்களால் அலங்கரித்துக் கொள்ளும் மன்னர் ஆபரணம் எதுவும் அணியாத அறிஞர்க்கு ஒப்பாக மாட்டார்.

(நன்னெறி மூலமும் உரையும் முற்றும்)

மாணவர்களுக்கு அறிவு புகட்டும் நல்ல நூல்கள்

- திருக்குறள்
- ஆத்திசூடி கதைகள் 4 தொகுதி
- தெனாலிராமன் கதை
- விக்கிரமாதித்தன் கதை
- நீதிக்கதை 4 தொகுதி
- கதைமலர் 7 தொகுதி
- மாணவர் அறிவுக் கதை
- கதைமலர் 3 தொகுதி
- நீதி நூல்கள் ஏழு
- ஆங்கில ஆசான்
- கொன்றை வேந்தன்
- பொது அறிவு
- பழமொழிகளும் பொன்மொழிகளும்
- டிக்சனெறி
- மாணவர் கதைக் களஞ்சியம்

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்

320, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
தொலைபேசி : 2334004

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
41, கண்டி வீதி, கைதடி, யாழ்ப்பாணம்.
320, செட்டியார் தெரு, கொழும்பு–11.
தொ.பே: 011 2334004

விலை : 150/=